
# ஒரு துளி...



ஓ.கே.குணநாதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியா பிரசுரம்

இந்தியாவில் தேவியின் கண்மணி சஞ்சிகை நடாத்திய நாவல் பிரதிப் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்ற நாவல்

# ஒரு துளி...

ஓ.கே.குணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : ஒரு துளி....

வகை : நாவல்

ஆசிரியர் : ஓ.கே.குணநாதன்

வெளியீடு : பிரியா பிரசுரம் – 7

உரிமை : நூலாசிரியர்

கணணிப் பொறி : ஒன் லைன்,
வவுனியா.

அச்சு :

முதற் பதிப்பு :

விலை :

TITLE : **ORRU THULIE....**

CATEGORY : **NOVEL**

AUTHOR : **K.KUNANAADAN**

PUBLICATION : **PRIYA PRASURAM -7**

TYPE SETTING : **ON-LINE PUBLISHERS,
VAVUNIYA.**

PRINTERS : **VAANI COMPUTER PRINTING CENTRE
VAVUNIYA**

FIRST EDITION : 1.7.1999

PRICE : 125/=

ISBN : **955-96728-1-9**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க தலைவர்**

# திரு.நா. சேனாதிராசா

**அவர்களின்**

**வாழ்த்துச் செய்தி**

சமூக சேவையின் அர்ப்பணிப்பின் மூலம் வவுனியாவில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர் ஓ.கே குணநாதன்.

இவருடைய சேவையின்பால் வவுனியாவாழ் இளைஞர்களின் கலை-இலக்கிய நிகழ்வுகள் செழுமை பெற்றன.

இவரின் வழிகாட்டலின் கீழ் பல இளைஞர்-யுவதிகள் பல பரிசில்களைப் பெற்றனர். இவரும் பல பரிசில்களைப் பெற்றுக் கொண்டார்.

தேசிய மட்டத்தில் இவர் பல பரிசில்களைப் பெற்றிருக்கின்ற போதிலும் 'ஒரு துளி....' என்ற நாவல் பிரதி தேசியத்தையும் கடந்து இந்தியாவில் பரிசு பெற்றது.

சைவத்தையும் தமிழையும் வளர்ப்பது எமது சங்கத்தின் நோக்கம். அதற்கொப்ப இந்தியாவில் பரிசு பெற்ற இவரை-எழுத்தாளரை கௌரவப்படுத்தி ஊக்கப்படுத்த வேண்டும் என சங்கத்தின் நிர்வாகக்குழு கூடித்தீர்மானம் நிறைவேற்றியது.

இதன் பயனாக எமது சங்கத்தினால் தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டார் - பாராட்டப்பட்டார்.

அதே பரிசு பெற்ற நாவல்பிரதி நூல் வடிவம் பெறுவது கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி.

**நா. சேனாதிராசா**
தலைவர்
சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்,
வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாடை போர்த்திக் கௌரவம்

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. ஓ.கே. குணநாதன் வவுனியாவில் வாழும் காலத்தில் எழுதிய இந்த 'ஒரு துளி....' நாவல் இந்தியாவில் நடைபெற்ற நாவல் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் வவுனியா மண் பெருமையடைகின்றது.

வவுனியா மண்ணுக்குப் பெருமை சேர்த்த இவரை, தேசிய மட்டத்தையும் கடந்து சர்வதேச மட்டத்தில் பரிசு பெற்ற இவரை நாம் வாழ்த்தாமல் யார் வாழ்த்துவது?

ஒரு எழுத்தாளனுக்கு பாராட்டுதலும் கௌரவமும் மிகவும் அவசியம். இதன் மூலம் அவன் பல படைப்புக்களை உருவாக்க முடியும்.

இந்த வகையில் திரு. ஓ.கே. குணநாதன் அவர்களை வவுனியா நகரசபை மூலம் 1997ம் ஆண்டு நடைபெற்ற சித்திரா பௌர்ணமி விழாவின் போது பொன்னாடை போர்த்திக் கௌரவித்தோம்.

இவருடைய இலக்கியப்பணி தொடர, வெற்றிபெற வாழ்த்துக்கள்

சின்னப்புதுக்குளம்,
வவுனியா.

**சு. குமாரசாமி J.P**
முன்னாள் வவுனியா
நகரசபை உறுப்பினர்

*வாழ்த்துகிறோம்:*

**சஜீஸ் கொமினிகேசன்**

*22, பஸ் நிலையம்,*
*வவுனியா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதொரு நாவல்

மலையக மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையை மலையத்தைப் பிறப்பிடமாகக் கொள்ளாத பல எழுத்தாளர்கள் நாவலில் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த எழுத்தாளர்களின் வரிசையில் இப்போது திரு.ஓ.கே.குணநாதன் அவர்களும் சேர்ந்திருக்கிறார்கள்.

'ஒரு துளி' என்னும் நாவல் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை விறுவிறுப்பாகச் செல்கிறது. மலையக மக்கள் கல்வியில் மேம்பெற வேண்டும் என்ற இவரது கருத்து இந் நாவலில் மேலோங்கி நிற்கிறது. நல்லதொரு நாவல்.

இந்த நாவல் இந்தியாவில் தேவியின் கண்மணி சஞ்சிகை நாடாத்திய நாவல் போட்டியில் சிறப்புப் பரிசினைப் பெற்றமை எமக்கு பெருமை சேர்க்கிறது - நூல் வடிவம் பெறுவது பல மடங்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

நாமும் வாழ்த்துவோம்.

*உக்குளாங்குளம்*
*வவுனியா.*

**பூ.தெய்வேந்திரநாதன்**
*முன்னாள் வவுனியா நகரசபை உறுப்பினர்*


*வாழ்த்துகிறோம்:*

**குலன் ஸ்டோர்ஸ்**
*பார். வீதி, மட்டிக்களி,*
*மட்டக்களப்பு.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லதொரு சீர்திருத்தப் படைப்பு

நண்பர் ஓ.கே.குணநாதன் சிறுவர் இலக்கியங்கள் வாயிலாக பிள்ளைகளின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். நகைச்சுவைச் சித்திரங்கள் வாயிலாக தள்ளாத வயதினரையும் துள்ளிக் குதூகலித்து மகிழ்ந்திடச் செய்தவர்.

சமூக சீர்திருத்தப் படைப்புகளால் சிறுதுளி பெருவெள்ளமாகிச் சமூக மாற்றத்தை விளைவிக்க முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர். அதன் பேறாக இந்த 'ஒரு துளி...' என்ற நாவல் அவரிடமிருந்து துளிர்த்துள்ளது. சர்வதேச ரீதியில் பரிசு பெற்றதன் மூலம் சர்வதேச ரீதியில் சிறந்த நாவல் என்ற அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

இந்த நாவல் மூலம் அவர் கனவு காணும் புதுயுகம் இன்னும் பல திசை மார்க்கங்கள் வாயிலாக நனவாகும்.

சமூக சீர்திருத்த எழுச்சிப் படைப்புகள் மூலம் செயலூக்கமிக்க புதிய தலைமுறையினர் அருட்டுணர்வு பெற முடியும். அத்தகைய உணர்வை இந்த நாவலும் நல்கும்.

இவரது படைப்பு முயற்சிகள் தொடர்ந்து வளர வாழ்த்துவோம்.

*இல. 6, இராசதுரை வீதி,*
*வைரவ புளியங்குளம்,*
*வவுனியா.*

**இ. வீரசிங்கம்**

*வாழ்த்துகிறோம்:*

**நித்தியானந்த கணேசா வைன் ஸ்டோர்ஸ்**

*இல. 28, 2ம் குறுக்குத் தெரு,*
*வவுனியா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையகக் கவிஞன் துளசிதாசனின் கருத்து...

வாழ்வில் மலையிடை தோன்றும் பிரதான பள்ளமாகவும், உழைப்பில் மலை உச்சியாகவும், உள்ளத்து ஏக்கங்களில் வற்றாத மகாவலியாகவும், ஏழ்மையில் குசேலர்களாகவும், சதைகளும் ஏன்.... எலும்புகள்... எல்லாமும் பரம்பரை பரம்பரையாக தேயிலைச் செடிகளுக்கே உரமாகி உரிமைகளற்ற அடிமை வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தின் கதை இது!

ஒரு விடியலின் மைந்தனை விடிவைத் தேடித் தேடியே ஏக்கத்தோடு காத்துக் கொண்டிருக்கின்ற ஒரு கூட்டத்தின் மத்தியில் உலவவிட்டுள்ளார்.

இரு நூற்றாண்டுகளாக வயிற்றுக்காக மட்டுமே வாழ்வோடு மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் இம் மக்களுக்கு 'சூரியனாக இல்லாவிட்டாலும் வெறும் ஒளியாக மட்டுமாவது' ஒரு துலக்கத்தை ஒரு விழிப்பை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையோடு ஒரு புது விடியலின் தடத்தை அழுத்தமாகப் போட முனைந்துள்ளார் ஆசிரியர்.

எங்கள் மண்ணைப் பற்றி எழுதிய எழுத்தாளர் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்ட இவரைக் பாராட்டாமல் இருக்க முடியாது. பாராட்டுக்கள். நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

*கணேசபுரம்*
*வவுனியா*

**து. வி. திருப்பதி**
*(கவிஞர் துளசிதாசன்)*

*வாழ்த்துகிறோம்:*

**வன்னியின் குரல்**

***(வர்த்தக விளம்பர சேவை)***

*80A*, நவீன சந்தை, வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர் இனத்தின் விடிவிற்காய்

ஓர் இனத்தின் எழுச்சிக்கும், விடிவிற்கும் கல்வியின் அவசியமும், ஒற்றுமையும், சரியான - நேர்மையான தலைமைத்துவ வழி நடத்துதலும் இன்றியமையாத அம்சங்கள் என்பதனையும், உரிமைகளை போராடித்தான் பெற வேண்டும் என்பதனையும் இளம் ஆசிரியனின் அர்ப்பணிப்பான சேவையின் மூலம் தோட்ட மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுகிறார் நூலாசிரியர்.

மலையகத்தின் நிலை, மக்களின் அறியாமை, அடிமைத்தனம், இளைஞர்களின் எழுச்சி, இவற்றோடு பிரதேச எல்லைகளைக் கடந்த இரு மனங்களின் ஈர்ப்பையும் கலந்து கதை ஈரமாக நகர்த்தப்படுகிறது.

சரளமாகச் செல்லும் இந்நாவலில் மலையகப் பேச்சு வழக்கு சரியாக அமையாதது குறையாக அமைந்தாலும் அந்த உழைக்கும் மக்களை எழுச்சி பெறச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் - உணர்வும் - துடிப்பும் எழுத்தில் மேலோங்கியிருப்பதனால் அக்குறை பெரிதாகத் தெரியவில்லை.

ஒரு காத்திரமான படைப்பு. சர்வதேச மட்டத்தில் பரிசு பெற்றது பாராட்டுதற்குரியதே!

**கொட்டகலை செ. மகேந்திரன்**

வெளிக்குளம்,
வவுனியா.

*வாழ்த்துகிறோம்:*

**ஸ்ரீகிருஸ்ணா என்ரபிறைஸ்**

*இல. 101, 102, 1ம் மாடி, புதிய பஸ் நிலையம், வவுனியா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்வும் ஆலோசனையும் கொண்ட நாவல்

சிறுவர் நூல், நகைச்சுவை நூல், ஆய்வு நூல் போன்ற பல நூல்களைத் தந்த ஓ.கே. குணநாதன் கொள்ளையெழில் கொஞ்சும் மலையகப் பின்னணியை வைத்து எழுதிய 'ஒரு துளி....' கதை விறுவிறுப்பாகவும், சுவையாகவும் வளர்த்துச் செல்லப்படுகிறது. வர்ணனைகள், வார்த்தை அலங்காரம் என்று வாசகர்களை ஏமாற்றாது உப்பளவு காதலையும் சேர்த்து-உழைப்பாளிகளான தோட்டத்தொழிலாளரின் கல்வி, பொருளாதார தேக்க நிலையையும் பிரச்சினைகளையும் கோடிட்டுக் காட்டி- தீர்வுக்கான ஆலோசனைகளையும் வழங்கியிருப்பது வரவேற்கத்தக்கது.

பாராட்டப்பட வேண்டிய நல்லதொரு ஆக்கம்

**தே. அமலன**
வவுனியா விளையாட்டு அதிகாரி.

வைரவர்கோயில் வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.

*வாழ்த்துகிறோம்:*

**கண்ணகி மரக்காலை**

*இல. 24, 1ம் குறுக்குத்தெரு,*
*வவுனியா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு துளியில் சில சிதறல்கள்.......

மீண்டும் ஒரு தடவை 'ஒரு துளி...' என்ற நாவலின் வாயிலாக இலக்கிய இதயங்களைச் சந்திப்பதனையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த நாவல் பற்றிய சில துளிகளை தங்களுடன் பகிர்ந்து கொள்ளுவதில் அளவில்லா ஆனந்தம்.

சமுதாய விடியலுக்காக ஏதோ ஒரு வகையில் எழுதத் துடிக்கும் எனது பேனாவிலிருந்து சிந்திய 'ஒரு துளி...' மை இங்கு விடியலைக் காணத் துடிக்கும் ஒரு சமூகத்தின் கதையாகத் துளித்துள்ளது. இது கதையல்ல. ஒரு கதையின் கதை. இந்தியாவிலிருந்து அடிமைகளாக இறக்குமதி செய்யப்பட்ட ஒரு சமூகத்தின் கண்ணீரின் சுவடுகள்.

மலையகத்தைப் பற்றி மலையத்தைச் சேர்ந்த - சேராத பலர் பல நாவல்களை எழுதியிருக்கின்ற போதிலும், மலையத்தைச் சேராத கிழக்கிலங்கையைச் சேர்ந்த ஒரு எழுத்தாளரால் எழுதப்படும் முதல் மலையகம் பற்றிய நாவல் இது என்றே நம்புகின்றேன்.

மலையகத்தில் வாழ்ந்து அனுபவப்படாததனால் மலையக மொழி வழக்கு கொஞ்சம் வழுகிப் போனது என்னவோ உண்மைதான். ஆனால் நாவலின் ஓட்டம் அதனைச் சீர்செய்யும் என்ற நம்பிக்கையுண்டு.

இதனைவிட இக் கதையானது ஒரே மொழி பேசும் பிற மாவட்ட மக்களால் வடக்கத்தியான்.... தோட்டக்காட்டான்... வந்தான் வரத்தான்... என்று ஒரு காலத்தில் கேவலமாகப் பேசிய அதே மக்களின் ஒருவனால் இந்த நாவல் எழுதப்பட்டது என்பது பிரிவினைகளைக் கடந்து பாகுபாடுகளைக் கடந்து நாம் எங்கே வந்திருக்கிறோம் என்பதனையே சுட்டிக் காட்டி நிற்கிறது.

அனுபவங்கள் மாத்திரமல்ல, நெஞ்சைத் தொடுகின்ற ஒவ்வொரு சம்பவங்கள் மூலமும் நல்ல வாசிப்பின் மூலமும் கதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைக்கப்படலாம் என்பதற்கு இது ஒரு துளி. இந்த நாவல் எழுதப்படுவதற்கு ஏதோ ஒரு வகையில் எனது மதிப்புக்குரிய மூத்த எழுத்தாளர்களான கே.ஆர்.டேவிட், தெளிவத்தை யோசேப், தி.ஞானசேகரன், நந்தி போன்றவர்கள் இந் நாவலை எழுதுவதற்கு உறுதுணையாக இருந்துள்ளனர். அது எவ்வாறெனில், அவர்கள் எழுதிய நாவல்களை பல தடவைகள் வாசித்ததனால் அருட்டுணர்வு பெற்றுள்ளேன். நெஞ்சத்தை தொடும் வசனங்கள் கூட என் நெஞ்சில் பதிந்தும் விட்டன. இந்த நாவலில் அந்த பதிந்து போன வசனங்கள் கூட சில இடங்களில் இழையோடுவதனை காணலாம். அதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

இந்தக் கதையின் உயிருட்டல் பத்மநாதன், நித்தியா, காளிமுத்து, தோட்டத்துரை பாத்திரங்கள்.

பத்மநாதன் - இந்த பாத்திரம் பிறப்பதற்கு காரணமாக இருந்தவர், மட்டக்களப்பிலிருந்து அரசியல் இடமாற்றமாக மலையகம் சென்ற அத்தான் நிமலன் ஆசிரியர், அவர் சொன்ன தகவல்கள்.

நித்தியா + காளிமுத்து - எனது வானொலி இசையும் கதைகளைக் கேட்டு மலையக வாசகர்கள் (ரசிகர்கள்) மலையகக் மண்ணின் அவலங்களை சுட்டிக் காட்டி எழுதிய கண்ணீர் கடிதங்கள்.

தோட்டத்துரை - நான் வவுனியாவில் இளைஞர் சேவை அதிகாரியாகக்கடமையாற்றிய காலத்தில் உத்தியோகஸ்தவர்களை அதிகாரத்திமிரில் கேவலமாக நடாத்திய மேலதிகாரிகளின் அனுபவ உள்வாங்கல்கள்.

இந்நாவலானது 1995 இல் இந்தியாவில் தேவியின் கண்மணி என்ற மாதாந்த நாவல் வெளியீட்டகம் உலகளாவிய ரீதியில் நடாத்திய நாவல் போட்டியில், போட்டிக்காக வந்திருந்த 200 நாவல்களிலிருந்து சிறந்த நாவல்களில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டது.

இதனையொட்டி வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தினால் சங்க தலைவர் திரு.நா.சேனாதிராசா அவர்களினால் தங்கப்பதக்கம் அணிவித்தும் வவுனியா நகரசபையினால் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் திரு.ஜீ.ரீ.லிங்கநாதன் அவர்களினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமையும் பசுமையான நினைவுகள். வயதில் இளையவனாக இருக்கின்ற போதிலும் இதுவரை எனது 8 நூல்கள் அறுவடை செய்யப்பட்டுள்ளன. இது 9 வது அறுவடை. இதில் 2 நூல்கள் வடக்கு கிழக்கு மாகாண சாகித்த பரிசினையும் யாழ் இலக்கிய வட்ட சாகித்திய பரிசினையும் பெற்றுக் கொண்டன.

இந்த நூல்கள் வெளியாவதற்கு துணையாக நின்றவர்கள் இலக்கிய இதயம் படைத்த வவுனியா வர்த்தகப் பிரமுகர்கள் என்றால் மிகையாகாது.

அவர்களுடன் இணைந்து என்றும் எனது இலக்கிய வளர்ச்சிக்கு நல்ல ஆசான்களாக இருப்பவர்கள் மதிப்புக்குரிய அகளங்கன், பி.மாணிக்கவாசகம், எஸ்.சண்முகநாதன், அன்புமணி இரா. நாகலிங்கம் ஆகியோருக்கும்,

நூலில் வரும் மலையக வழக்கை சீர்செய்ய உதவி புரிந்தவர்களான கவிஞர் துளசிதாஸன், கிருஸ்ணபோஸ் ஆகியோருக்கும்,

நூலை கணணிப்பொறி செய்து தந்த வவுனியா ஒன்-லைன் பப்ளிசேர்ஸ் பிறைவேட் லிமிட்டெட் பா.பாலேந்திரன், செல்வி. சின்னத்தம்பி வனிதா அவர்கட்கும், நூலை அழகுற அச்சிட்டுத் தந்த சார்ப் கிரபிக்ஸ் பிறைவேட் லிமிட்டெட் உரிமையாளர் க. கருணானந்தன், மற்றும் பைண்டிங் செய்து தந்த குணசேகரன் அவர்கட்கும் என் நன்றிகள்.

அதே வேளையில் இந் நாவல் பற்றிய தங்களுடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் மகிழ்வுடன் எதிர்பார்க்கின்றேன்.

என்றும் பிரியமுடன்,
**ஓ.கே. குணநாதன்**
வெளிக்குளம், வவுனியா.

64, கதிர்காமர் வீதி,
அமிர்தகழி,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு துளி....

1

நீண்ட இரவு குறுகிக் கொண்டே போனது.

பன்னிரெண்டைத் தாண்டிய மணிக்கூட்டின் ஓசைகள் ஒன்று... இரண்டு... என எண்ணிக் கொண்டேயிருந்தன.

தூக்கத்தின் வேக்காடு கண்களில் கருஞ்சிவப்பாகப் பூத்திருந்தது.

தூக்கம் வந்தால்தானே நித்திரை கொள்ளுவதற்கு. தூக்கம் வரவே மறுத்தது.

பாக்கியம் நித்திரையின்றிப் புரண்டு புரண்டு படுத்தாள்.

எப்படித் தூக்கம் வரும்?

நெஞ்சில் மகனைப் பற்றிய கவலையும் எண்ணமும் நிறைந்து அவளைப் போட்டுப் பேயாக ஆட்டிப் படைத்தது.

ஒரு மனிதனுடைய வாழ்க்கைக்கு நிகழ்கால நடப்பை விட எதிர்காலக் கனவுகளே முக்கியம். அதுதான் உண்மையான வாழ்க்கையைத் தரும்.

அப்படியானால்... "ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு" எனப் பெத்து வளர்த்து ஆளாக்கியிருக்கும் மகனின் எதிர்கால வாழ்க்கையின் மீது அக்கறை இருக்காதா என்ன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அபலைத் தாயின் மனதை மகனின் எதிர்காலத் தீர்க்க தரிசனம் பற்றிய பயங்கரமானதொரு துயர உணர்வு பாறாங்கல்லாக அமுக்கிக் கொண்டிருந்தது.

அவள் மகனைப் பிரிந்து இருந்ததே கிடையாது.

அதுவும் ஒரே மகன்!

அந்த ஒரே மகனை இன்னும் சில மணித்தியாலங்களில் பிரிந்து விடப் போகிறாள்.

அதை நினைக்க நினைக்க நெஞ்சம் விம்மி விம்மித் தணிந்தது.

அப்படிச் செய்யாதே! இப்படிச் செய்யாதே! இந்த ஊரைப் பற்றி உனக்குத் தெரியாது என்று அவள் எத்தனை முறை அடித்துச் சொல்லியிருப்பாள். அவன் கேட்டால் தானே!

என்னுடைய சொல்லைக் கேட்டிருந்தால் இந்த நிலை வந்திருக்காதே! "தாய் சொல்லைத் தட்டாதே" என்று பெரியவர்கள் ஏன் சொன்னார்கள்.

அப்பனுக்கு மகன் தப்பாமல் பிறந்திருக்கிறான்!

எதற்கெடுத்தாலும் அப்பாவைப் போலவே நீதி - நியாயத்தைப் பற்றி எடுத்துக் கதைத்தே மடக்கி விடுவான்.

யாரும் இந்தப் பூமியில் பிறக்கும் பொழுது ஒன்றையுமே கொண்டு வரவில்லை. கொண்டு வருவதுமில்லை. அதே போலவே இறக்கும் பொழுதும் ஒன்றையுமே கொண்டு போவதுமில்லை. அதோட இண்டைக்கு இருக்கிற மனிதன் நாளைக்குச் செத்தும் போகலாம். ஆனா... அவன் செத்துப் போனாலும் மனித சமுதாயத்திலே அவனுடைய பெயர் அடிபட்டுக் கொண்டேயிருக்க வேணும். அந்தப் பேரும் புகழும் எதிர்காலச் சந்ததியினருக்கு நல்ல வழிகாட்டியாக அமைய வேண்டும்.

இந்தப் பூமியில நாம வாழ வேண்டும் என்பது முக்கியமல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைக்கு அப்பால் நமது பெயர் பொறிக்கப்பட வேண்டும் என்பதுதான் முக்கியம்.

ஒரு மகனுக்குப் பெருமை தந்தையின் பெயரைச் சொல்வதாலோ அன்றில் தாயின் பெயரைச் சொல்வதாலோ இருக்கக் கூடாது. ஒரு தந்தைக்கும் தாய்க்குமுரிய பெருமை ஒரு மகனின் பெயராலேதான் இருக்க வேண்டும். அதைத் தான் நான் விரும்புகின்றேன்.

இந்தப் பூமியிலே மனிதனாகப் பிறந்தால் யாருக்காவது பிரயோசனமாக இருக்க வேண்டும். வீட்டுக்குப் பிரயோசனமாக இருக்க வேண்டும் அல்லது நாட்டுக்குப் பிரயோசனமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் வாழுறத விட செத்துப் போய் விட வேண்டும்."

அவன் சொல்லுவதும் நியாயந்தான்.

ஆனால்... மனம் இடங்கொடுத்தால்தானே! பெற்ற மனம் பித்தாயிற்றே!

"நீதியும் வேணாம் நியாயமும் வேணாம் பேசாமல் வீட்டோடு இரு" என்று எத்தனை தடவை மன்றாடினாள்... வேதனையில் அழுதாள்... விரக்தியில் பட்டினி கிடந்தாள்... சத்தியாக்கிரகம் செய்தாள்...

அத்தனை அகிம்சைப் போராட்டங்களும் அவனுடைய வார்த்தைகளில் தோற்றுப் போயின.

கதைகளிலும் கவிதைகளிலும் சுதந்திர போராட்டம், பெண் விடுதலை, சாதி ஒழிப்பு, வறுமை ஒழிப்பு... என்று வந்ததும், எவ்வளவு ரசித்துப் படிக்கிறோம். ஆனா.... நான் நீதி - நியாத்தைப் பற்றிக் கதைத்ததுமே பயப்படுகின்றோம்...

அது ஏன்?

இனப் போராட்டம்... விடுதலைப் போராட்டம்... இவையெல்லாம் மனித நேயத்திற்கு துன்பம் விளைவிப்பனவா...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய வார்த்தைகள் இன்னும் அவளுடைய செவிப் பறைகளில் முட்டி மோதி எதிரொலித்துக் கொண்டேயிருந்தன.

இறந்து போன நினைவுகளை மனச்சிறையிலே பூட்டி வைத்து விடலாம் என்று நினைத்தால்... இதயத்திற்கு கதவு இருந்தால் தானே!

நெஞ்சில் தோன்றிய துயரச்சுமை கண்களில் நீராகி இமையோரங்களில் சுட்டுக் கொண்டேயிருந்தது.

மணிக்கூடு நான்கு தரம் அடித்து ஓய்ந்தது.

எழுந்தாள்.
லைற் சுவிச்சைப் போட்டாள். அறையெங்கும் ஒளி நிறைந்தது.

மகன் சலனமில்லாமல் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

ஆனால்... அவனுடைய கண்களிலும் வடிந்த கண்ணீர் காய்ந்து போயிருந்தது.

சில நிமிடங்கள் அமைதியாக அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள். அவனையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல இருந்தது. ஆனாலும்... மனதைத் திடப்படுத்திக் கொண்டு குசினிக்குள் நுழைந்து சமையலில் மூழ்கிப் போனாள்.

எப்போது பொழுது புலரும் எனக் காத்துக் கிடந்தவன் போல அவனும் குசினிக்குள்ளிருந்து வந்த பாத்திரங்களின் ஓசை கேட்டு, எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு பயணத்திற்குத் தயாரானான்.

அந்த நேரம் பார்த்தாற் போல அவளும் சாப்பாட்டுப் பார்சலையும் தண்ணீர் போத்தலையும் கொண்டு வந்து கொடுத்தாள்.

சாப்பாட்டுப் பார்சலையும் தண்ணீர் போத்தலையும் வாங்கி சூட்கேசினுள் வைத்தபடி சூட்கேசைத் தூக்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா, போயிற்று வருகிறேன்...."

அவனுடைய தொண்டை கம்மியிருந்தது.

"தம்பி, கவனமாகப் போயிற்று வா"

அந்த வார்த்தைகளை மட்டுமே உதிர்த்தாள். அதற்கு மேல் அவளால் ஒன்றுமே பேச முடியவில்லை. அப்படி அதையும் மீறி ஒருவார்த்தை கூடக் கதைத்தால்.... 'ஓ' வென்று அழுதுவிடுவாள் போல இருந்தது.

கலங்கிய கண்ணீரை விழுங்கியபடி வாசல் வரைச் சென்று வழியனுப்பி விட்டு அவன் செல்வதையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே நின்றாள்.

தன்னையுமறியாமலேயே கலங்கிச் சிவந்த கண்களிலிருந்து நீர் சரம் கோர்த்து வடிந்தது.

2

மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் என்றுமில்லாதவாறு சனம் முண்டியடித்துக் கொண்டு நின்றது.

இன்று சனிக்கிழமையாதலால் வழக்கத்தை விட சனம் அதிகமாகவே இருக்கின்றது.

பத்மநாதன் சனங்களுடன் முண்டியடித்துக் கொண்டு நீண்ட நேரம் வரிசையில் நின்று ரிக்கட்டைப் பெற்றுக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

பிளாட்பாரத்தில் சனங்கள் அங்குமிங்கும் ஓட்டமும் நடையுமாக அலைவதும், ரயிலில் ஏறுவதும் இறங்குவதுமாக ஒரே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தை ஒரு தடவை பார்த்தான்.

நேரம் ஆறு பதினைந்து.

ரயில் புறப்படுவதற்கு இன்னும் பதினைந்து நிமிடங்களே எஞ்சி நின்றன.

ரயில் நிலையத்தில் சனத்தைக் கண்ட பத்மநாதனுக்கு ரயிலில் இடம் பிடிக்கலாமா என்ற அச்சம் பிறந்தது.

எப்படியாவது இடத்தைப் பிடித்து விட வேண்டும்!

இடம் கிடைக்காமல் விட்டால்.... நின்றுதான் பயணம் செய்ய வேண்டும். எவ்வளவு நேரத்திற்கென்று கால் கடுக்கக் கடுக்க நின்று கொண்டு பயணம் செய்வது?

கடவுளே எப்படியாவது ஒரு இடம் கிடைக்காதா? மனம் ஆண்டவனை மன்றாடிக் கொண்டது.

நடையில் வேகமானான். நடையில் வேகம் என்பதனை விட ஓடினான் என்று சொல்லலாம். அவ்வளவு வேகம்.

என்ஜினுடன் ஒட்டினால் போல இருந்த மூன்றாம் வகுப்புப் பெட்டியினுள் தாவி ஏறினான்.

சீற் எடுத்து விட வேண்டும் என்ற பதட்டத்துடன் கண்கள் பெட்டியைத் துளாவின. என்ஜினுடன் ஒட்டினால் போல ஒரு தொங்கலில் அந்தப் பெட்டி இருந்ததனால் சனம் கொஞ்சம் குறைவாகவே இருந்தது.

ஒவ்வொரு சீற்றாகத் தாண்டிக் கொண்டு வந்தான். ஒரு மூலையிலே ஒரு சீற் கிடந்தது. அது அவனுக்கென ஒதுக்கியது போலவே இருந்தது.

ஆனாலும்.... அவனுக்கொரு சந்தேகம். இவ்வளவு சனத்திற்கு மத்தியில் இந்த இடம் இருக்குமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரேயிருந்த சீற்றில் ஒரு முதியவர் இருந்தார்.

அவரிடம் கேட்டால் என்ன! மனம் சொல்லிற்று.

"ஐயா, இந்த சீற்றில யாராவது இருக்கிறாங்களா?"

"இதில ஒருத்தரும் இல்ல தம்பி"

"நன்றி ஐயா"

நன்றியைச் சொல்லிக் கொண்டே கையிலிருந்த சூட்கேசை மேலே வைத்துக் கொண்டு மூலை ஆசனத்தில் இருந்து கொண்டான்.

ஆசனத்தில் இருந்து கொண்ட பின்புதான் நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

ஆசனம் கிடைத்ததையிட்டு மனதிற்குள்ளே கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொண்டான்.

'கோணர் சீற்' சொகுசாகத்தான் இருந்தது. ஆனால் பக்கத்திலேயிருந்த கக்கூசின் மணம் இடையிடையே காற்று வாடைக்கேற்றபடி காற்றில் கலந்து வந்து மூக்கை அரித்துக் கொண்டேயிருந்தது.

வேறு எங்கேயாவது நல்ல இடம் கிடைக்காதா...!

குண்டு வீச்சுக்குப் பயந்து உயிர் மாத்திரம் மிஞ்சினால் போதும் என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு உடமைகளை..... சுகங்களை இழந்து, அகதிகளாய்..... அநாதைகளாய்.... பதறியடித்துக் கொண்டு ஓடும் சனங்களைப் போல சீற்றுக்காக முண்டியடிக்கும் சனங்களைப் பார்த்ததும்..... 'உனக்குக் கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு' என்ற கவிஞரின் பாடலின் வரிகள்தான் நெஞ்சில் குத்தி நின்றன.

"டாங்..... டாங்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரயில் புறப்படுவதற்கு ஆயத்தம் என்பது போல ஆயத்தமணி ஒலி எழுப்பியது.

எல்லோருடைய முகத்திலும் ஒருவித பதட்டம்..... அவசரம்...

ரயிலில் முண்டியடித்துக் கொண்டு ஏறும் சனங்களின் தொகை திடீரென உயர்ந்தது.

ரயில் விசில் கொடுத்துக் கூவியது.

கடிகாரத்தை வெறித்தான்.

அது ஆறு முப்பதில் இருந்தது.

யன்னலினூடாக தலையை வெளியே நீட்டி... வெளியே எட்டிப் பார்த்தான்.

பச்சைக் கொடி விழுந்தது.

ரயில் நகர ஆரம்பித்தது.

எல்லோருடைய முகத்திலும் சோகக்களை அப்பிக் கிடந்தது. பிரிவுத் துயர் ஒட்டிக் கிடந்தது.

பெற்றார்.... உற்றார்... உறவினரைப் பிரிந்து போகும் சனங்களின் பிரிவுத்துயர் கண்களின் திரைகளில் எட்டி வந்து முட்டி நிற்க.... கைகள் மட்டும் உயர்ந்து.... அசைந்து கொண்டேயிருந்தன....

ரயில் வேகமானது.

ரயில் வேகமாக... வேகமாக... கைகளின் அசைவுகளின் வேகங்களும் கூடிக் கொண்டேயிருந்தன.

பத்மநாதன் அந்தக் காட்சிகளையே வெறித்துக் கொண்டிருந்தான்.

பிரிவுத்துயர் என்பது எவ்வளவு கொடுமையானது! அந்தப் பிரிவுத் துன்பம் அவனுக்கும் இருக்காதா என்ன......!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற அன்னையை.... பிறந்த மண்ணை... சுதந்திர பூமியை.... கொஞ்சிக் குலாவி.... ஓடித் திரிந்து.... பிஞ்சுப் பாதங்களைப் பதித்து விளையாடிய மண்ணை விட்டுப் பிரிந்து போவதை நினைக்கையில்.... ஒருவித பிரிவுத்துயரம் தொண்டை வரை வந்து நின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக பத்து மாதம் சுமந்து பெத்துத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த அன்னையின் நினைப்பு வந்து நெஞ்சை அடைத்தது.

இனி அம்மாவை எப்போது காணப் போகின்றோம் என்பதனை நினைக்க நினைக்க நெஞ்சினிலே ஒரு இனம் புரியாத வேதனை.

கண்களின் இமையோரத்தினால் வடிந்த கண்ணீர் சுட்டது.

யாரும் கண்ணீரைக் கண்டு விட்டால்...

சீ... பச்சைக் குழந்தை மாதிரி அழுது கொண்டு போகின்றானே என்று நினைத்து விடுவார்களே.....!

வெட்கத்தில் நெஞ்சில் புரண்ட துயரத்தை அடக்கிக் கொண்டு கண்ணீரை விழுங்கியபடி காட்சிகளை வெறித்துக் கொண்டிருந்தான்.

மட்டக்களப்பு மண்ணுக்கே சொந்தமான அந்தத் தமிழ் மண்ணுக்கே பெருமை தேடிக் கொடுத்துக் கொண்டிருந்த பசுமையான நிழல் தரும் தென்னை மரச்சோலைகள் வேகமாக... வேகமாக... மிகவேகமாக.... பறந்து கொண்டிருந்தன.

இந்த ஊரே தன்னிலிருந்து பிரிந்து வெகு தூரத்திற்குப் போவது போல உணர்ந்தான்.

"தம்பி"

"..................."

"தம்பி"

"....................."

"தம்பி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரேயிருந்த முதியவர் தொடையில் தொட்டு உசுப்பிய போதுதான் திடுக்கிட்டுச் சுயநினைவு பெற்றான் பத்மநாதன்.

துயரம் நிறைந்த முகத்துடன் முதியவரைப் பார்க்க அவனுக்கு சங்கடமாக இருந்தது.

கடைக் கண்களினால் வடிந்த நீரை மெதுவாகப் புறங்கையினால் துடைத்துக் கொண்டான்.

பாம்பின் கால் பாம்பறியாதா என்ன!

"என்ன தம்பி, வீட்டை விட்டுப் பிரிந்து போறதை நினைக்கக் கஷ்டமாக இருக்குது போல..."

"ஓம்.... ஐயா..., அம்மாவைப் பிரிஞ்சு போறதை நினைக்கத்தான் கவலையாக இருக்குது....."

வார்த்தைகளை விழுங்கி விழுங்கிச் சொன்னான்.

இம்ம்ம்.... பெருமூச்சொன்று வெளியே வர, "கவலையை விட்டுப் போட்டு சும்மா இருங்க தம்பி....."

"எப்படி ஐயா............."

"ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து போறதென்றால் கொஞ்சம் கஷ்டந்தான். போகப் போக எல்லாம் சரியாய்ப் போயிடும். அதைப் பற்றிக் கவலைப்பட்டு என்ன பிரயோசனம். இந்த உலகத்தில இருக்கிற ஒவ்வொருவரும் என்றோ ஒரு நாளைக்கு இந்த உலகத்தையே விட்டுப் பிரிந்துதானே ஆக வேண்டும். அதை விடப் பெரிசா இது!

மனிதனாகப் பிறந்து விட்டால் ஒவ்வொரு மனிதனுக்கும் சொந்தமாக இருக்கிறது பிரிவுகளும் துக்கமுந்தானே! இந்த உலகத்தில கவலையில்லாத மனிதன் இருக்கவே முடியாது. ஏதோ ஒரு வகையில் ஒரு கவலை இருந்துதான் ஆகும். அப்படிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையில்லாதவன் யாராவது இருந்தால் அவன் மனிதனாக இருக்க முடியாது. மிருகமாகத்தான் இருக்க வேணும்.

என்ன செய்யலாந்தம்பி, நாம வாழ்கிற சூழல் அப்படி.... இந்த நாட்டில நடக்கிற இனப்பிரச்சினையால் தாயைப் பிரிந்து..... பெற்ற பிள்ளைகளைப் பிரிந்து..... எத்தனையோ பேர் பிறந்த மண்ணையே பிரிந்து அனாதையென்றும் அகதியென்றும் கனடாவிலேயும் லண்டனிலேயும் சுவிசிலேயும் பிரான்சிலேயும் போய் கவலையோட வாழ்கிறாங்க அதை விடப் பெரிய பிரிவா தம்பி இது....."

அனுபவ முதிர்வின் வார்த்தைகள் வெளிவந்தன.

அவருடைய வார்த்தைகள் அவனுக்குக் கொஞ்சம் இதமாக இருந்தது. மனதில் ஏறியிருந்த பாரம் கொஞ்சம் இறங்கியது.

மௌனம் சிந்தனைகளாகக் கரைந்தது.

"அது சரி தம்பி எங்க போறீங்க........."

மௌனத்தைக் கலைப்பதற்காக அவரே தொடர்ந்தார்.

"நான் தண்ணியில்லாத ஊருக்குப் போறன்"

"தண்ணியில்லாத ஊருக்காக.......? ஆ..... பாலைவன மண்ணுக்கு என்று சொல்லுங்க.... எங்கட நாடு ஒழுங்காக இருந்தால் ஏன் தம்பி எங்கட இளைஞர்கள் பாலைவனத்தில போய் உழைக்க வேணும். எங்கட இளைஞர்களுடைய மூளை வளத்தால பாலைவனம் வளமாகுது. எங்கட மண் பாலைவனமாகுது.

எங்கட இளைஞர்களுக்கு நல்ல தொழில் வாய்ப்பையும் நல்ல சம்பளத்தையும் போட்டுக் கொடுத்தால் ஏன் எங்கட இளைஞர்கள் வெளிநாட்டுக்கு போறாங்கள். எங்கட நாடு பொன் விளையும் பூமியாக மாறும். இலங்கையில இல்லாத வளம் எந்த நாட்டில் இருக்குது.... நீங்கள் குவைத்துக்கா..... சவூதிக்கா....."

"குவைத்துக்குமில்ல, சவூதிக்குமில்ல..... பண்டாரவளைக்கு........."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பண்டாரவளைக்கா....! பண்டாரவளையையா தண்ணியில்லாத ஊரென்று சொன்னீங்கள் தம்பி. அங்குதானே தண்ணியியே ஊற்றெடுக்குது... பச்சைப் பசேலென்ற பூமியையா நீங்க தண்ணியில்லாத ஊரென்று சொல்லுறீங்க..."

"அப்படி நான் சொல்லயில்ல. அரசியலிலையும் ஜனநாயக பூமியிலேயும் வாழுறவங்கதான் சொன்னாங்க.... நீதிக்காக நியாத்திற்காக மேடையில நாலு வார்த்தைகள் கதைத்தேன். அவ்வளவு தான்...... தண்ணியில்லாத ஊருக்கு 'இம்மிடியேட் ட்ரான்ஸ்பர்' என்று சொன்னாங்க. அவ்வளவுதான்..... நான் போறன்...."

"ஏன் தம்பி, யாரையும் பிடிச்சு ரான்ஸ்பரைக் கான்சல் பண்ணியிருக்கலாமே!"

"நானும் நீங்க சொல்லுற மாதிரித்தான் முதலில நினைச்சன். மனம் கேக்கல்ல. மானத்திற்காகத் தன்னுயிரையே தியாகம் பண்ணுற பூமியில பிறந்த எனக்கு மானந்தான் பெரிதெனப் பட்டுது. அதால யாருடைய காலிலையும் விழ விரும்பயில்ல"

"என்றாலும்.............."

"என்றாலும் என்ன என்றாலும்..... என்னுடைய அப்பா கூட புகையிரதத் திணைக்களத்தில தொழிலாளர் மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய வேளையில....... ஒரு பகுதித் தொழிலாளர் கடுமையாக உழைத்துச் சம்பளம் பெற...... இன்னுமொரு பகுதித் தொழிலாளர்கள் வேலை செய்யாமலே சம்பளம் பெறுவதனைக் கண்டு தொழிலாளர்களுக்காக நீதி கேட்டுப் போராடி வேலையை இராஜினாமாச் செய்து கொண்டு வீட்டுக்கு உறுதியுடன் வந்தவர்....... அப்படிப்பட்ட தன்மானமுள்ள நேர்மையுள்ள அப்பனுக்குப் பிறந்த நான், அப்படிச் செய்ய விரும்பல்ல.

அப்படி நான் செய்தால்... நான் மனிதனல்ல. அந்த வாழ்க்கை மனித வாழ்க்கையல்ல. இங்கு தலையையும் அங்கு வாலையும் காட்டும் 'விலாங்கு' வாழ்க்கை. எங்களுக்கு என்று சில இலட்சியங்கள் உண்டு. வாழ்க்கையில் ஒரு இலட்சியம் இல்லாமல் வெறும் மனித ஜடமாக வாழுற வாழ்க்கை ஒரு வாழ்க்கையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கும் பல்லுக் காட்டி..... காலில விழுந்து.... வெறும் ஜட மனிதனாக வாழ விரும்பல்ல.......

இந்த மண்ணில மட்டுமல்ல - அந்த மண்ணிலேயும் வாழுறது எங்கட சகோதரர்கள் தானே! அந்தச் சகோதரர்களின் விடிவுக்காக கொஞ்சக் காலம் அங்கு தங்கி நின்று சேவை செய்தாலென்ன என்று தோன்றிற்று அதுதான் இந்தப் பயணம்........."

நீறு பூத்த நெருப்பாக அவனுடைய அடி மனதில் அடங்கிக் கிடந்த பெற்ற தாயை - பிறந்த மண்ணை - உற்றார் - உறவினரை - நண்பர்களைப் பிரிந்து போகின்ற வேதனையில் நெஞ்சு கொதித்து வார்த்தைகளாகக் கூக்குரலிட வெளியே ஓடும் காட்சிகளை வெறித்துக் கொண்டிருந்தான்.

அதற்கு மேல் அவரால் ஒன்றுமே கதைக்க முடியவில்லை. வாய் தானாகவே அடைத்துக் கொண்டது. மௌனியானார்.

சத்தியம் பேசும் பொழுது வாய் தானாக அடைத்துத்தானே ஆக வேண்டும்.

அந்த மௌனத்தைக் கலைப்பதற்காக அவரே மீண்டும் தொடர்ந்தார்.

"தம்பி, நீங்க மட்டக்களப்பில எவ்விடம்"

"அமிர்தகழி"

"அந்த மாமாங்கக் கோயில் இருக்கிற இடந்தானே!"

"ஓம்.... அந்தக் கோயிலைத் தாண்டிக் கொஞ்சம் வந்தா எங்கட வீட்டுக்கு நேரே வரலாம். அது மட்டுமல்ல, உணர்ச்சிக் கவிஞன் காசி ஆனந்தனை - கவிஞர் குணரெட்ணத்தை - இசைஞானி ஜீவம் ஜோசேப்பை உருவாக்கியது அந்த மண்தானே!"

"பிறந்தது, வளர்ந்தது எல்லாமே அங்குதானோ...."

"பிறந்தது - வளர்ந்தது எல்லாமே அந்த மண்தான். அது சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா என்னைப் பற்றிக் கேட்டுக் கொண்டே வாறீங்க, உங்களைப் பற்றி ஒன்றும் கூறவில்லையே!"

"பிறந்தது மலையகம். இப்ப இருக்கிறது மட்டக்களப்பு"

"மட்டக்களப்பில....."

"நாவற்குடா"

"நாவற்குடாவில கன காலமாக இருக்கிறீங்களா!"

"கன காலமென்ன.... ஐம்பத்தி ஆறாமாண்டு இனக் கலவரத்தோட..... சொத்தெல்லாம் இழந்து... அகதியாக.... வந்து சேர்ந்த தோட இங்கதான் இருக்கிறம். எங்களோட வந்த ஜனங்களெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாகப் போய்ச் சேர்ந்திட்டுது. ஆனா.... எங்களுக்கென்றால் அங்க போக அறவே விருப்பமில்ல. அதோட இந்த மட்டக்களப்பு மண் நல்லாப் புடிச்சுப் போச்சி. வந்தாரை வாழ வைக்கிற மட்டக்களப்பு மண் என்கிறது எவ்வளவு பொருத்தம். எங்களைப் போல அகதிகளாக - அனாதரவாக வந்தவர்களிடம் கேட்டாத்தான் தெரியும் தம்பி.

நாங்க அடிபட்டு உடைபட்டு அகதிகளாக கண்ணீரும் கம்பலையுமாக வேதனையுடன் வந்தவுடனே அந்த இளைஞர்கள் எங்களை வரவேற்று சாப்பாடு தந்து - இருக்க இடந் தந்து எங்களுக்காகப்பட்ட பாட்டை எங்களால மறக்க முடியாது தம்பி, அதிலேயும் தங்கள் உயிரையே துச்சமென மதித்துச் சேவையாற்றிய ஃபாதர் சந்திரா - மரியசிங்கம் என்ஜினியர் - நிமலன் மாஸ்டர் போன்ற ஆட்களை வாழ்க்கையில் மறக்கவே முடியாது"

"நீங்க சொல்லுறதப் பார்த்தா மலையகத்திற்கு இனிப் போற எண்ணமே இல்லப் போல......."

"அங்க போயிற்று காலத்திற்குக் காலம் வாற இனவாத சக்திகளோட அடிபடுறத விட கஞ்சித் தண்ணியைக் குடிச்சிற்று என்றாலும் இங்கு சந்தோசமாக இருக்கிறது எவ்வளவோ மேல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத்தில போய் காலம் காலம் அடிபட்டுக் கொண்டு வாழுறதவிட கஞ்சித் தண்ணியைக் குடிச்சுக் கொண்டு கிடக்கிறது எவ்வளவோ மேல்.... என்ற வார்த்தைகள் அவனுடைய நெஞ்சில் பூகம்பமாக வெடித்தன. பயம் பூதாகாரமாகத் தலையெடுத்தாடியது.

இனக்கலவரம் வந்து விட்டால்....

நினைக்கவே பயமாக இருந்தது.

அங்கும் என்னைப் போல எத்தனை மக்கள் வாழ்கின்றார்கள். நான் மட்டுமா அங்கு ஒருவன்? அவர்களும் மனிதர்கள்தானே!

வருவது வரட்டும் போயே தீருவதென்று தனக்குள் தானே சமாதானம் செய்து கொண்டான்.

ரயில் வாழைச்சேனை ஸ்டேசனைத் தாண்டியது.

பகல் முழுவதும் பயணத்திற்காக ஓடியாடித் திரிந்ததால் நேற்று முழுக்க ஒழுங்காகச் சாப்பிட முடியவில்லை.

பசி வயிற்றைக் கிள்ளியது. சாப்பிடுவோமா என நினைத்தான். அந்த நேரம் பார்த்தாற் போல அந்த முதியவரே,

"தம்பி, எட்டு மணியாகிப் போயிற்றுது சாப்பிடுவோமா..... இப்போ சாப்பிட இல்லையென்றால்..... அங்கால புனாணை ஸ்டேசனுக்குப் பிறகு ஒரே சன நெருக்கமாக இருக்கும். சாப்பிட இயலாது...... வா தம்பி சாப்பிடுவம்" என்றார்.

பத்மநாதன் மணிக்கட்டில் இருந்த மணிக்கூட்டை ஒரு தடவை நோக்கினான்.

நேரம் எட்டுப் பத்து.

மேலேயிருந்த சூட்கேசைக் கீழே இறக்கி, அதிலிருந்த சாப்பாட்டுப் பார்சலை எடுத்துக் கொண்டு, மீண்டும் சூட்கேசை மேலே வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் கட்டிக் கொடுத்த சாப்பாட்டுப் பார்சலை மெதுவாகப் பிரித்தான்.

அம்மாவின் கையினால் சமைத்துப் போட்ட - மட்டக்களப்புக்கே பெருமையான - இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியைத் தேடித்தரும் மட்டு இறால் வறட்டல் குழம்பு கம்மென்று மணத்தது.

சோற்றைப் பிசைந்து ஒரு பிடியை அள்ளி வாயில் போட்டான்.

ஒரேயொரு பிடி....

அது தொண்டையில் இறங்க மறுத்தது.

கண்களில் கண்ணீர் புரண்டது.

....... இனி அம்மாவைப் போல யார் சமைத்துப் போடப் போகிறார்கள். என்ன இருந்தாலும் ஒரு தாயின் சமையலுக்கு ஈடிணையாகுமா....!

ரயில் புனாணை ஸ்டேசனில் நின்றது.

ஒரே சனம், திமுதிமுவென ஏறிக் கொண்டிருந்தது.

தாயின் நினைவுகள் நிழலாக நெஞ்சை நிறைக்க...... அவனால் சாப்பிட முடியவில்லை. வயிறு நிறைந்தது போல உணர்வு.

சாப்பாட்டுப் பார்சலைச் சுருட்டி வெளியே எறிந்து விட நினைத்தான். வெளியே பிளாட்பாரம் ஓரத்தில் ஏழைக் குடும்பமொன்று ரயிலில் இருந்து வந்து விழும் எச்சிலிலைக்காக ஏங்கிக் காத்துக் கொண்டிருப்பது கண்ணில் பட்டது.

அவன் பார்சலை எறிய எடுத்தான்.

அதற்கிடையில் பிளாட்பாரம் ஓரத்தில் நின்ற சிறுவன் ஒருவன் மின்னலெனப் பாய்ந்து வந்து பறித்துக் கொண்டான்.

பாய்ந்து பறித்த வேகத்தில்.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்சலில் இருந்த பாதிச் சோறு நிலத்தில் சிதறிப் போய்..... மீதிச் சோறு அவனுடைய கையில் இருந்தது.

சிறுவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

படித்துப் பட்டம் பெற்று நாட்டுக்குகந்த நற்பிரசைகளை உருவாக்க வேண்டிய வயசில்........ எச்சிலிலைக்காக..... ஒரு சாண் வயிற்றுப் பசிக்காக.....

எங்கெங்கு எத்தனை எத்தனை சிறுவர்கள் இப்படியோ!

தெருக்களில் சிறுவர்கள் எச்சிலைக்காகப் போராட்டம்! கரையோரப் பிரதேசங்களில் சிறுவர்கள் பாலியல் புணர்ச்சிக்கு எதிராக போராட்டம்! யுத்தப் பகுதிகளில் சிறுவர்கள் ஆயுதப் போராட்டம்!

இந்தச் சிறுவர்கள் இப்படிச் சீரழிந்தால்.... எப்படி உலகம் உருப்படும்?

போத்தலில் இருந்த தண்ணீரை ஊற்றி வாயை அலம்பி, இரண்டு மிடறு தண்ணீரைக் குடித்துக் கொண்டு சாய்ந்து படுத்துக் கொண்டான்.
தூக்கம் வந்தால்தானே!

தூக்கம் வர மறுத்தது.

நெஞ்சம் கனதியாகக் கிடக்கும் பொழுது எங்கே தூக்கம் வரப் போகிறது. அன்னையின் நினைவே அடிக்கடி வந்து போனது.

'துயரங்களும் கஷ்டங்களும் நல்லவர்களுக்குக் கூடச் சில சமயங்களில் நேரிடுகின்றன. அவை அவர்களுடைய இயல்பான குணங்களை வலுப்படுத்திக் கொள்ளவே இறைவனால் உருவாக்கப்படும் சோதனைகள். நாம் நம்மைத் தயார் செய்து கொண்டு அவற்றைக் கடந்து செல்ல வேண்டும்' என்று சுவாமி பரமானந்தர் சொன்ன வரிகள் நெஞ்சில் நிழலாகின.

அன்னையின் நினைவும் துருப்பிடித்த பழைய ஃபானின் 'கர்..... கர்..........' என்ற ஓசையும் 'பார்லி...... பார்லி...... வடை...... வடை....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடே........' என்னும் சத்தங்களும் நித்திரையைக் குழப்பிக் கொண்டேயிருந்தன.

கவலையை மறப்பதற்கு இரண்டேயிரண்டு வழிகள் உண்டு. ஒன்று வயிறு முட்டக் குடிப்பது. அடுத்தது நல்ல புத்தகங்களைப் படிப்பது.

வயிறு முட்டக் குடிப்பதனால் கவலையை மறக்கலாம். பணம் செலவாகுவ துடன் உடம்பையும் கெடுக்கும். குடிகாரன் என்ற அவப்பெயரையும் பெற்றுத் தரும்.

புத்தகங்களைப் படிப்பதனால் கவலையை மறப்பதுடன் நல்ல அறிவையும் வளர்க்கலாம்.

மேலேயிருந்த சூட்கேசைத் திறந்து ஒரு புத்தகத்தை எடுத்தான். அது அவனுடைய ஆத்தான எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் எழுதிய 'வரலாறு அவளைத் தோற்றுவிட்டது' நாவல்.

அந்த நாவலைக் கிட்டத்தட்ட பத்துத் தடவைகளுக்கு மேல் அவன் படித்திருப்பான். அந்த நாவலிலே மற்ற நாவல்களிலேயிருந்து வேறுபட்ட ஏதோ ஒன்று இருந்தது.

கவலைகள் - எண்ணங்கள் - நினைவலைகள் எல்லாவற்றையும் மறந்து நாவலிலே லயித்திருந்த அவன் ரயில் என்ஜின் மாற்றுவதற்கு லைற் நிற்பாட்டப்பட்ட போதுதான் சுயநினைவு பெற்றான்.

இது மாகோ ஸ்டேசன்.

"தெமிலி...... தெமிலி........." என்று கத்தும் ஓசை காதைப் பிளந்தது. இளநீர் விற்பனை நல்லாச் சூடு பிடித்திருந்தது. பயணிகள் இளநீர் குடிப்பதிலேயே மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அவனும் சட்டைப் பக்கட்டிலிருந்து ஒரு ஐந்து ரூபாய் குற்றியை எடுத்துக் கொடுத்து ஒரு தெம்பிலியை வாங்கிக் குடித்தான். ரயிலின் சூட்டுக்கு இளநீர் இதமாகத்தான் இருந்தது.

ரயில் மீண்டும் பயணத்தைத் தொடர, மீண்டும் புத்தகத்தில் லயிக்க ஆரம்பித்தான் தன்னையறியாமலே தூங்கிப் போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரயில் போட்ட 'சடுண்' பிறேக்கினால் திடுக்கிட்டு விழித்தான்.

ரயில் பொல்காவலை ஸ்டேசனில் நின்றது.

மேலே அண்ணார்ந்து பார்த்தான். மேலேயிருந்த அவனுடைய சூட்கேசைக் காணாததைக் கண்டு அதிர்ந்து போனான்.

## 3

சூட்கேஸ் களவு போய்விட்டது. யாரோ இறங்கும் போது அதனைத் தூக்கிக் கொண்டு போயிருக்க வேண்டும் என உணர்ந்தான்.

தேடிப் பார்ப்பதற்கு கையுமோடவில்லை: காலுமோடவில்லை. என்ன செய்வதென்ற ஒருவித பதட்டம்.

சூட்கேஸ் களவு போனதைப் பற்றிக் கவலையில்லை.

ஆனால்..........

அதற்குள்ளேயிருக்கும் மாற்றல் கடிதம் தொலைந்து போனதுதான் வேதனையாக இருந்தது.

மாற்றல் கடிதம் இல்லாமல் அவனால் பாடசாலையைப் பொறுப்பேற்க முடியாது. இவ்வளவு தூரம் பயணம் செய்தும் என்ன பயன்? இனி மீண்டும் திரும்பிப் போய் வேறு கடிதம் பெற்று வருவதென்றால் கூட தலையிடி வேறு.

பல தடவைகள் கல்விக் காரியாலயத்தின் படி பல ஏறி ஏறி... இறங்கி இறங்கி.... நாலு பேரிடம் பல்லைக் காட்டி....

ஊமைத் துயரத்தில் அவனுடைய உள்ளம் புழுங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே எட்டிப் பார்த்தான். எங்கும் இருள் நிறைந்து இருந்தது. அவனுடைய வாழ்வும் இருண்டு விட்டது போல.....

கொஞ்சம் கூட அக்கறையில்லாமல் - ஒரு பொருளில் கவனமில்லாமல் எவ்வளவு கவலையீனமாகத் தூங்கி விட்டோமே! தன்னைத்தானே நொந்து கொண்டான்.

இனி என்ன செய்வது.....? வீட்டுக்குத் திரும்பிப் போவதைத் தவிர வேறு வழியில்லை.

யாராவது எடுத்திருந்தால்... ஒருவேளை எதிரேயிருந்த முதியவருக்குத் தெரிந்திருக்கலாம்.

இருளை வெறித்த பார்வையை உள்ளே திருப்பினான்.

அங்கே....

எதிரேயிருந்த முதியவரைக் காணவில்லை.

என்ன செய்வது?

பக்கதில் அரைத் தூக்கத்திலிருந்த பெண்ணிடம், "இதில இருந்த பெரியவர் எங்கே?" பதட்டத்துடன் கேட்டான்.

"அவர் எப்போதோ இறங்கிப் போய் விட்டாரே!"

வார்த்தைகள் நெஞ்சில் பேரிடியாக விழுந்தன.
அப்படியானால்.... ஒருவேளை...... அவனுடைய சூட்கேசை..... நெஞ்சம் பதறியது.

நிட்சயமாக அவராகத்தான் இருக்க முடியும். நேர்மையானவராக இருந்திருந்தால் இறங்கும் பொழுது நான் போகிறேன் என்று சொல்லி விட்டுப் போயிருப்பாரே!

எவ்வளவு அன்பாக இனிமையாகப் பேசி வந்த முதியவரா இப்படிச் செய்தது? அவருடைய பேச்சில் இப்படி ஏமாந்து விட்டேனே! நம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட நம்பி நடவாதே என்று பெரியவர்கள் சொல்லியிருக்கின்ற போதிலும் நம்பி ஏமாந்து விட்டேனே!

இந்த உலகத்தில் யாரைத்தான் நம்புவது? பெற்ற தாயைக் கூட நம்ப முடியாத உலகமாயிற்றே!

தாயை - உறவை - மண்ணைப் பிரிந்த பிரிவுத் துயரத்தை விட, அந்த சூட்கேசைப் பிரிந்த பிரிவுத்துயர் அவனை ஆத்திரப்பட வைத்தது.

அந்தக் கிழவனைக் கண்டால்.... அவனைப் பிடித்து..... ஆத்திரத்துடன் நீட்டியிருந்த காலைச் சீற்றுக் கீழே மடித்தான்.

காலில் 'டபார்' என்றொரு அடி.

காலில் என்ன பட்டது? அது என்னவாக இருக்கும்....!

குனிந்தான் -

பார்த்தான் -

அவனுடைய கண்களையே அவனால் நம்ப முடியவில்லை.

காண்பது கனவா அல்லது நினைவா என்று கூட எண்ணத் தோன்றியது.

மேலே வைத்த சூட்கேஸ் அவனையுமறியாமல் - அவன் தூக்கி வைக்காமல் எப்படி வந்தது?

ஒருவேளை திருடர்கள்தான் பொருட்களை எடுத்து விட்டு சூட்கேசைக் கீழே போட்டு விட்டுப் போய் விட்டார்களோ!

நெஞ்சம் பதறியது.

ஒருதரம் திறந்து பார்த்து விடவேண்டும் என்ற அவசரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்கேசை வெளியே இழுத்தான்.

அதே கனதியுடன் வெளியே வந்தது.

சூட்கேசின் மேலே ஒரு கடிதம். எடுத்துப் பிரித்தும் படித்தான்.

அன்புத் தம்பிக்கு,

உனது இலட்சியப்பாதை - எதிர்காலக் கனவுகள் - இளமையின் துடிப்புக்கள் நிட்சயமாக இருளிலே கிடந்து விடிவைக் காணத் துடிக்கும் மலையக மக்களுக்கு சூரியனாக இல்லாமல் விட்டாலும் ஒளியாக இருக்கும் என்ற நம்பிக்கையுண்டு.

இதை இறங்கும் பொழுது சொல்ல வேண்டுமென்றிருந்தேன். ஆனால், நீ அயராது தூங்கிக் கொண்டிருந்தாய். உன்னை எழுப்பினால், உன் தூக்கம் கலைந்து விடும். உனது தூக்கத்தைக் கலைத்துவிட எனக்கு மனம் இடங் கொடுக்கவில்லை. அதனால் இந்தக் கடிதத்தை எழுதி வைப்பதுடன் கள்ளர்கள் கூட்டம் நிறைந்த ரயிலில் உனது சூட்கேஸ் அனாதரவாக இருப்பதனையும் உணர்ந்து சூட்கேசையும் எடுத்துக் கீழே பாதுகாப்பாக வைக்கின்றேன்.

மலையகம் என்பது நீ எதிர்பார்க்குமளவிற்கு பயங்கரமானதல்ல. அங்கும் மனிதர்கள்தான் வாழ்கிறார்கள். ஆனால், விடிவில்லாதவர்கள் விடிவைத் தேடுகின்றவர்கள்.

உன்னுடைய வழிகாட்டுதலின் தடங்கள் மலையக மக்களின் விடிவுக்குப் பாதையாக அமையட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு உயர்ந்த பண்புடைய மனிதரையா நான் அப்படிக் கேவலமாக நினைத்து விட்டேன்.

மனம் என்பது உண்மையிலேயே மரம் விட்டு மரம் தாவும் ஒரு குரங்குதான்.

மனிதர்களில்தான் எத்தனை எத்தனை ரகம்.

சூட்கேசைத் திறந்து எல்லாப் பொருட்களும் இருக்கின்றனவா என்று பார்த்து விடுவோமே!

சூட்கேசைத் திறந்தான்.

சூட்கேசின் மேற்பகுதியில் செருகி வைத்திருந்த கடிதம் கீழே விழுந்து அவனைப் பார்த்துச் சிரித்தது.

கல்வி அலுவலகம்
மட்டக்களப்பு.

க.பத்மநாதன்
அமிர்தகழி மகாவித்தியாலயம்
மட்டக்களப்பு.

**இடமாற்றம்**

**அன்புடையீர்,**

தங்களின் சேவையில் துர் நடத்தை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால், தாங்கள் பண்டாரவளை வித்தியாலயத்திற்கு உடனடியாக மாற்றப்பட்டுள்ளீர்கள். குறிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் பதவி ஏற்காவிடில் தாங்கள் பதவியிலிருந்து விலகியதாகக் கருதப்படுவீர்கள்.

கல்வி அதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக பூமியில் நீதியை - நியாயத்தைப் பற்றிக் கதைப்பது என்பது துர்நடத்தையாம்...... இன்றைய அகராதியில் புதிய கருத்தாக்கம்?

அவன் மலையகம் நோக்கிப் போகிறான். ஆனால், எங்கு போவது... யாரிடம் போவது.... என்று அவனுக்கு ஒன்றுமே தெரியாது.

படைத்தவனுக்கு வழி நடத்தத் தெரியுந்தானே!

தாயின் வயிற்றிலிருந்து ஒரு குழந்தை பிறக்கும் பொழுது, அது எங்கே போகிறது என்ற வழியே தெரியாமல்தானே வருகின்றது. பின்பு ஆண்டவனின் வழி நடத்துதல்களால்தானே வாழ்க்கையின் வழியைத் தொடர்கின்றது.

துணிவும் தன்னம்பிக்கையும் இருந்தால் இந்த உலகில் ஆகாதது ஒன்றுமில்லையே!

அப்போதுதான் அவன் கொண்டு வந்த கடிதமும் முகவரியும் நினைவுக்கு வந்தன.

அவன் ஒரு எழுத்தாளன்.

வானொலியில் இசையும் கதையும் எழுதி விட்டால் அந்த நிகழ்ச்சியைக் கேட்ட அபிமானிகளிடமிருந்து பாராட்டுதல்கள், அபிப்பிராயங்கள், விமர்சனங்கள் என்று பல தரப்பட்ட கடிதங்கள் வந்து குவியும்.

அப்படி வந்த கடிதங்களில் ஒன்றுதான் இது.

பின் பக்கட்டிலிருந்த பேர்சைத் திறந்து கடிதத்தை எடுத்து வாசித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளன் பத்மநாதனுக்கு,

உங்களை யாரென்று எனக்குத் தெரியாது. தெரிய நியாயமுமில்லை. முன் பின் பழக்கமுமில்லை. ஆனால், உங்களை வானொலி இசையும் கதையும் மூலமும் நாவல்கள் மூலமும் நன்றாக அறிவேன். அண்மையில் தங்களால் எழுதப்பட்ட ஊமை நெஞ்சின் சொந்தம் நாவலைக் கண்டு அசந்தே போய் விட்டேன். அந்த நாவலில் வரும் கதாநாயகன் மலை போல வரும் தடைகளையும் எதிர்ப்புகளையும் தாண்டி, ஒரு கிராமத்தின் முன்னேற்றத்திற்கு ஒரு சமுதாயத்தின் விடிவுக்காகச் செய்யும் புரட்சி உயிரோட்டமாகவே இருந்தது.

பளபளப்பான பகுதிகளின் அவலங்களை உங்கள் கதைகளில் எடுத்துக் காட்டும் நீங்கள் பசுமையான இயற்கைக் காட்சிகளை அள்ளித் தெளித்து இருளில் மூழ்கிக் கிடக்கும் மலையக அவலங்களை நேரில் வந்து பார்த்து ஒரு நீண்ட கதையை எழுதுமாறு அன்புடன் வேண்டுகின்றேன.

உங்கள் ரசிகை

**நித்தியா**

இவளுடைய முகவரியைக் கண்டு பிடித்தால், எப்படியும் எங்கேயாவது ஓர் அறை எடுத்துத் தங்கி விடலாம். அசையாத நம்பிக்கையுடன் மீண்டும் கடிதத்தை மடித்து வைத்துக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

அதிகாலை!

இன்னும் பொழுது புலரவில்லை.

கிழக்கு சிவக்கக் காத்திருந்த நேரம்!

ரயில் பண்டாரவளை புகையிரத நிலையத்தை அடைந்தது.

அது ஒரு சின்ன ஸ்டேசன்.

பண்டாரவளை என்ற பெயர்ப்பலகை மட்டும் பெரிதாக இருந்தது. அதிலும் பண்டாரவளை என்ற பென்னம் பெரிய சிங்கள எழுத்துக்களின் கீழே பண்டாரவளை என்ற ஆறு சிறிய தமிழ் எழுத்துக்கள் ஒட்டிக் கிடந்தன.

அவன் எதிர்பார்த்து வந்தது போல ரயிலில் இருந்து சனங்கள் இறங்கவில்லை. நாலைந்து பேர் மாத்திரமே இறங்கினார்கள்.

அவர்களுடன் சேர்ந்து அவனும் இறங்கிக் கொண்டான்.

வெளியே வந்த போது அவனுடன் சேர்ந்து இறங்கிய நாலைந்து பேரும் நாலா திசையிலும் பிரிந்து போனார்கள்.

அவன் -

கையிலே சூட்கேஸ் நெஞ்சிலே எங்கே போவதென்ற சுமையுடன் தவித்துக் கொண்டிருந்தான்.

எங்கும் இருள் மண்டிக் கிடந்தது.

சன நடமாட்டமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கொன்றும் இங்கொன்றுமாக நாலைந்து மின் விளக்குகள் அழுது வடிந்து மின்னிக் கொண்டிருந்தன.

சற்றுத்தூரம் நடந்தான். அவனைப் பயம் கௌவிக் கொண்டது.

இருட்டு வழியில் பாதை தெரியாமல் நடந்து கொண்டிருக்கையில், அந்தத் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருடர்கள் யாராவது சூட்கேசையும் பறித்து...... அவனையும்..........

நினைக்கவே பயமாக இருந்தது. பயத்தினால் வாய் உலர்ந்து போனது.

சுற்றும் முற்றும் பார்த்தான். மனித நடமாட்டத்தையே காண முடியவில்லை. எங்கும் இருளே எஞ்சி நின்றது.

பாதையோரத்தில் இருந்த பாறையொன்றில் அமர்ந்தான்.

குளிர் உடலை வாட்டியது. ஒருநாள் குளிரே இப்படியென்றால்..... ஒவ்வொரு நாளும் பொழுதும் பனிக்குள்ளேயே கிடக்கின்ற இந்தச் சனங்கள் எப்படி வாழுகிறதோ!

சூட்கேசுக்குள் இருந்த பெட்சீட்டை எடுத்து உடலைப் போர்த்திக் கொண்டு கால் இரண்டையும் பாறையின் மேலை வைத்தபடி கொடுகிக்கொண்டான்.

ஜெற் வேகத்தில் போகும் நேரம் இன்று ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது.

கையில் கட்டியிருந்த மணிக்கூடு "டிக்..... டிக்......." என்ற போரோசையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

பேரமைதி நிலவும் நேரம் மணிக்கூடு எழுப்பும் 'டிக்' என்ற ஒவ்வொரு சத்தமும் நெஞ்சில் பேரிடியாக விழுந்து இதயம் 'படக் படக்' கென்று அடித்துக் கொண்டது.

பனியுடன் கூடிய பயத்தில் பற்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நேரம் பார்த்தாற் போல இருளைக் கிழித்துக் கொண்டு ஒரு உருவம் தெரிந்தது.

உற்று நோக்கினான். ஒரு கன்னங்கரிய உருவம் அவனையே நோக்கி வந்து கொண்டிருந்தது.

வருவது திருடனாக இருக்குமோ.......! ஒருவேளை பேயாக இருக்குமோ....!

மனம் ஒரு குரங்குதானே! சிந்தனைக் குழப்பமாகத் தாவித் திரிந்தது.

அந்த உருவத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

அவனை நோக்கி வந்த உருவம் அவனருகே வந்ததும் நின்று கொண்டது.

மின்னிக் கொண்டிருந்த லைற் ஒளியில் நோக்கினான். மலையக மண்ணின் உழைப்புக்கே உரித்தான முறுக்கேறிய கட்டான கரிய உடல்: கரிய உடலைப் போர்வையிட்டுக் கொண்டு குளிரைத் தாங்க கறுப்பு நிறத்தில் ஒரு சுவெட்டர். எழுபது வயதிற்கே உரித்தான நரைத்த தாடியும் தலை முடியும்.

அனுபவம் சொன்ன பாடமோ என்னவோ நேரத்தையும் கையில் சூட்கேசையும் கண்டதும் அவருக்குப் புரிந்து விட்டது போலும்!

அவனுக்குக்கிட்ட அணுகி, "தம்பி எங்க போவணும்" என்றார்.

அவன் மௌனமாக நின்றான்.

"தம்பி, ஊருக்குப் புதிசோ"

மீண்டும் அவரே கேட்டார்.

"நான் ஊருக்குப் புதுசா வந்திருக்கிற வாத்தியார்"

"வாத்தித் தம்பியா! உனக்கு இங்க யாரையும் தெரியுமோ!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இங்கு ஒருத்தரையும் தெரியாது. ஆனா... ஒரு அட்றஸ் கொண்டு வந்திருக்கிறன். அந்த அட்றஸ்சிற்குப் போனா...... அவங்கள் மூலமாக எங்கென்றாலும் ஒரு றூம் எடுத்துக் கொள்ளுவன்”

கூறியவாறே பிற்பக்கட்டின் பேர்சிற்குள் இருந்த முகவரியை எடுத்து நீட்டினான்.

“தம்பி, அது இருக்கட்டும் முதலில அத வை. உனக்கு ஆட்சேபனையில்லையின்னா என்னோட வா. விடிஞ்ச பிறகு அந்த அட்ரசில கொண்டு போய் விடுறன்”

அவனுடைய பதிலுக்காகக் காத்திருந்தார்.

கண்களிலே நிலவிய ஒருவித கனிவு. முகத்திலே பரவியிருந்த பரிவு. அவர் பேசிய தோரணை. அவனையுமறியாமல் அவர் மேலே ஒரு நம்பிக்கை ஏற்பட்டது.

ஒரு மனிதன் வாழுறது நம்பிக்கையிலேதானே! அவரை விட்டால் அவனுக்கு வேற வழியில்லை.

‘சரி’ என்றவாறு சூட்கேசைத் தூக்கினான்.

“ஏன் தம்பி உங்களுக்குச் கயிட்டம். சூட்கேசைக் கொடுங்க நான் தூக்கிட்டு வர்றேன்”

சூட்கேசை வாங்க முற்பட்டார்.

“இல்ல, நானே தூக்கிற்று வாறன். எனக்கது பாரமல்ல”

ஒரு மனிதன் தாயின் வயிற்றில் இருந்து மண்ணின் மடியில் ஜனனமாகும் போதே பூமிக்குப் பாரமாகின்றான்.

இன்று அவன் வாழ்க்கையிலே எத்தனையோ சுமைகளை எதிர்பார்த்துப் போய்க் கொண்டிருக்கின்றான். அந்தச் சூட்கேசு அவனுக்கு ஒரு சுமையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவோரப் பாதையிலிருந்து விலகி மலையடிவாரப் பாதையில் இருவரும் இறங்கினார்கள்.

புதிய இடம்..... புதிய சூழல்....... புதிய சமுதாயத்தை நோக்கி போய்க் கொண்டிருந்தான்.

இருவரும் எதுவுமே பேசவில்லை. வாய் பேசும் ஊமைகளாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ஒற்றையடிப் பாதையால் இறங்கிய போது "தம்பி, கொஞ்சம் கவனமாக வர வேணும். ஓரத்தால வராம நடுவால வாங்க. கல்லும் முள்ளும் கெடக்கும் கவனம்" என்றார்.

'சரி' என்றவாறு அவரைத் தொடர்ந்து அவர் நடந்து கொண்டிருந்த பாதையினால் நடந்து கொண்டிருந்தான்.

நீண்ட நேர நடையின் பின்பு,

"தம்பிக்கு எந்த ஊரு......"

அவரே கேட்டார்.

"நான் மட்டக்களப்பு"

"தம்பிக்கு இதுதான் மொத பள்ளிக் கூடமோ......"

"இல்ல இது இரண்டாவது பள்ளிக்கூடம். ரான்ஸ்பரில வாறன்"

"கேக்கிறேன்னு என்று கொறை நினைக்காதீங்க தம்பி, நீங்க விரும்பித்தான் இங்க வாறீங்களோ.... அல்லது........"

"பொலிற்றிக்கல் றான்ஸ்பரில வாறன். ஆனா, விரும்பித்தான் வாறன்"

அவருடைய பார்வைகள் அவனில் நிலைத்து நின்றன.

"ஏன் அப்பிடிக் கேக்குறீங்க....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்லுறேன்னு என்று பிழையாக நெனைக்கக் கூடாது. இங்கவுள்ள பள்ளிக் கூடத்திற்கு எந்தவொரு வாத்தியாரும் விரும்பி வாறதில்ல. அப்படி வாறதென்றாலும் ஏதும் ரீச்சிங் அப்பொயின்ட்மென்ட் எடுக்கிறத்திற்காக முதல்ல இந்தப் பள்ளிக் கூடங்களுக்கு வருவாங்க. அவங்களுக்கு நிரந்தர நியமனம் கிடைச்சவுடனே அவங்கட வந்த காரியம் முடிஞ்சிட்டுனு போட்டு கொஞ்ச நாளையில ஆரையும் பிடிச்சி ரான்ஸ்பர் எடுத்துக் கொண்டு சொந்த ஊருக்கே ஓடிவிடுவாங்க. அப்படிவாறவங்களுக்கும் பாடசாலையில அக்கறையும் இருக்கிறதில்ல. அதோட மாணவர்களைப் படிப்பிச்சு முன்னேற்ற வேணும்கிற எண்ணமும் இருக்கிறதில்ல. வந்தான் வரத்தான்களுக்கு என்ன படிப்பு வேண்டிக் கிடக்குதுங்குற போக்கில் ஏனோ தானோ என்று இருந்து விட்டுப் போறாங்க. ஆனா, நீங்க.... விரும்பி வாறன்னு சொல்லுறீங்க. இந்த ஊருக்கு விரும்பி வாறதென்னு சொன்னா அது நீங்கதான் முதலாள்"

கூறிக் கொண்டு நடந்தவாறே கடைக் கண்ணால் அவனை ஒரு பார்வை பார்த்தார்.

அவர் சொல்வதில்தான் எத்தனை உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. இந்த உலகத்தில் பிறந்தவர்களில் பெரும்பாலானோர் சுய நலத்துடனே பிறந்து சுயநலத்துடனேயே மடிந்து போயிடுறாங்க. பிறரைப் பற்றிச் சிந்திப்பவர்கள் ஆயிரத்தில் ஒருவராகத்தான் இருக்க முடியும்.

"என்ன கடைக் கண்ணால பார்க்கிறீங்க. ஆளைப் பார்த்தால் சின்ன ஆளாக இருக்கிறான். விரும்பி வாறான் என்று சொல்கிறான். இவனும் இப்படித்தான் நாலைந்து நாளையில வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடி விடுவான் என்று நினைக்கிறீங்களா? உண்மைதான். நீங்க நினைக்கிறதில தவறில்ல. எனக்கு இப்பொழுது இருபத்தி நாலு வயசு, சின்னப்பையன்தான். ஆனா, பெரியவங்க கூடச் செய்ய முடியாததக் கூடச் செய்து முடிக்கலாம் என்ற மனத்திடகாத்திரம் இருக்கு. அதனால கொஞ்சக் காலத்திற்கென்றாலும் சேவை செய்யலாம் என்று நம்பிக்கை இருக்கு. சின்னப்பிள்ளைகள் செய்கிற வேளாண்மை வீட்டுக்கு வராது என்று சொல்லுறது அந்தக் காலம். உலகையே ஆட்டிப் படைக்கிற சக்தி இருக்கிறது இந்தக் காலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது சரி, எங்கையோ போக வந்தனீங்கள் என்னைக் கூட்டிக் கொண்டு திரும்பி வாறீங்களே"

"இந்தச் சின்னத் தோட்டத்தில கவ்வாத்து வெட்டுற வேலை செய்யிறேங்க....."

"கவ்வாத்து என்றால்....."

"கவ்வாத்துன்னா தம்பி, கொழுந்து எடுத்து முடிஞ்சி முத்திப் போன தேயிலைச் செடிகளை வெட்டி லெவலாக்குறது"

"ஆ.... அப்ப ஏன் இவ்வளவு நேரத்தோட விடிய முன்னரே போறீங்க"

"இல்ல தம்பி, ஆறு மணிக்குத்தான் வேல. ஆறு மணிக்குப் பெயர் போடுறதற்கிடையில தொரை வீட்டுக்குக் கொஞ்சம் வேலை செய்து கொடுக்கணும்"

நீங்க மட்டுந்தான் இப்படித் துரை வீட்டுக்கு வேலை செய்து கொடுக்கிறீங்களோ.... அல்லது..."

"நான் மட்டுமல்ல தம்பி, இங்க வேலை செய்யிற ஆம்பிள்ள பொம்புள்ள எல்லோருந்தான் செய்ய வேணும்"

"அதுக்கு வேறையாச் சம்பளம் போடுவாங்களா!"

"அதுக்கெல்லாம் என்ன தம்பி சம்பளம்"

"அப்போ நீங்க எல்லோருமாகச் சேர்ந்து வீட்டு வேலைக்குப் போகாமல் விடலாந்தானே!"

"போகாமல் விடலாந்தான். அதற்கு மொதல்ல நம்மட தமிழனில ஒற்றுமை வேணுமே! அதோட தம்பி இந்தத் தோட்டத்துச் சனங்களெல்லாம் நாட் கூலிகள், துரையிட வீட்டுக்கு வேலைக்குப் போகல்ல என்னு சொன்னா அவன் ரெண்டு மூணு நாளைக்கு வேலைக்கு வர வேணாம் என்னு சொல்லுவான். பறிச்ச கொழுந்து சரியில்ல.... முத்திப் போன கொழுந்து... என்ற பொய்யைச் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுந்தில பிழையைச் சொல்லுவான்.... கொழுந்தில நெறையைக் கொறைப்பான்..... அப்பிடிச் செய்தா நாங்கதான் பட்டினி கிடக்க வேணும். நாங்க பட்டினி கெடக்கிறம் பாவம் என்னு சொல்லி பக்கத்து லயக்காரனும் உதவி செய்ய இயலாத நெலம. ஏனென்னா அவனுக்கும் எங்கள போல நெலமதான். புள்ளக் குட்டி கஞ்சித் தண்ணிக்கு வழியில்லாம பட்டினி கெடக்கக்குள்ள பார்த்துட்டு இருக்க முடியுங்களா? எத்தன நாளைக்கென்னு பார்த்துட்டு இருக்கிறது. அதுதான் ஏதோ நடக்கிறது நடக்கட்டும் என்னு போட்டுப் போறம்.

•

"இதென்ன அறியாயமாகக் கிடக்குது!"

"தம்பி, உனக்குச் சின்ன வயசு, அதோட ஊருக்கும் புதுசு.... இண்ணைக்குத்தானே இந்த மண்ணில காலடி வைச்சிருக்கிறீங்க.. போகப் போகத்தான் எது நீதி......? எது அநீதி.......? என்று தெரியும்"

"எங்கட ஊரில பொலிட்டிக்கல். இங்க...."

"பொலிட்டிக்கல் எங்கிறது போலிறிக்ஸ். மனிதனை மனிதன் ஆளுறதுதான் பொலிட்டிக்ஸ்.... இங்க மனிதனை மனிதன் அடிமையாக்கிறான்...."

இவ்வார்த்தையைக் கேட்டதும் பனிக் குளிரென்றும் பாராமல் நெஞ்சம் கொதிப்பும் துடிப்பும் அடைந்தது.

"நான் சின்னப் பையனாக இருக்கலாம். ஆனா ஒரு நாட்டையே ஆளுகின்ற விவேகம் இருக்குது. நீதி நியாயத்தைப் பற்றிக் கதைக்க வயசு தேவையில்ல, நீதியும் நியாயமும் கொண்ட நெஞ்சமும், மண்டையிலே சிந்தித்துச் செயலாற்றுகின்ற விவேகமும் போதும்"

என்று கூறிக் கொண்டு திரும்பியவன் 'ஆ' வென்று அலறினான்.

இரத்தம் வடிந்து கொண்டேயிருந்தது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 5

புறங்காலில் ஒட்டியிருந்த அட்டையொன்று வயிறு முட்ட இரத்தத்தைக் குடித்துச் சிவத்துப் பெருத்து அவனுடைய காலில் தொத்திக் கொண்டிருந்தது.

அதைப் பிடுங்கித் தூர எறிந்தான். அது ஒட்டியிருந்த காயத்திலிருந்து இரத்தம் பீறிட்டு பாய்ந்தது.

இரத்தம் சிந்திய மண்ணில் பிறந்ததால் என்னவோ அவன் இரத்தத்தைக் கண்டு அஞ்சவில்லை.

காலிலிருந்து வடியும் இரத்தத்தைப் பார்த்தவாறே,

"மலையகத்தில் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கிற அட்டைகள் அதிகம் போல........"

என்றான் பத்மநாதன்.

"ஓம் தம்பி, அட்டைகள் கொஞ்சம் கூடத்தான். கொஞ்சம் கவனமாக நடந்தால் சரி" என்றார் பதிலுக்கு.

நன்றாகப் பொழுது புலர்ந்திருந்தது.

தூரத்தில் போகும் போதே,

"அதோ தெரிகிறதே..... அதுதான் என்னுடைய லயம்" என்றார்.

மலைக் குன்றொன்றில் இருந்தது அந்த லயம்.

சிறிய லயமாக இருந்தாலும் அழகாக இருந்தது. பணக்காரர்களின் வீட்டு முற்றத்திலே காணப்படும் வெண்புறாக் கூட்டை நினைவுபடுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவினுள் நுழைந்தார்கள்.

அங்கே வாசலில் யாரோ வண்ண வண்ணப் பூக்களாக அழகாகக் கோலம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

வண்ண வண்ண மலர்களாக மலர்ந்து கொண்டிருந்த கோலத்தைக் கண்ட பத்மநாதனுக்கு வியப்பாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. பண்டையக் காலத்துக் கலைகள் மருவிக் கொண்டு வரும் இந்தக் காலத்தில் மலையகத்திலே இப்படியொரு கலையா.....! இந்துப் பண்பாடா...!

"பிள்ளை....."

அவனைக் கூட்டிப் போன பெரியவர் குரல் கொடுத்தார்.

கைகள் கோலம் போட்டுக் கொண்டிருக்க தலையைத் திருப்பினாள்.

அவளுடைய பார்வைகள் அவன் மீது நிலைத்தன. அவன் பார்வைகளும் அவள் மீது பதிந்தன. இருவர் கண்களும் சந்தித்துக் கொண்டன.

காதல் என்பது வாழ்க்கையில் ஒரு முறைதான் மலரும் அதுவும் பார்வைகளின் சங்கமத்திலேதான் உதயமாகின்றன.

மலையக மண்ணிலும் இப்படியொரு அழகுத் தேவதையா? அவனால் நம்பவே முடியவில்லை.

எத்தனை அழகு! எத்தனை அழகு!

வானத்தின் சரிவிலே பொன் நிலவு பூத்தது போல வட்டமுகம்.... இரண்டரக் கலந்திருக்கும் உமாதேவியின் சுடர் விழிக் கண்கள்.... சிவனின் சடையிலே இருக்கும் பிறை வடிவ நெற்றி.....

அப்பாவுடன் ஒரு அந்நியனைக் கண்ட தவிப்போடு, "என்ன அப்பா!" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் தேனாக இனித்தது.

"புள்ள, இதுதான் நம்மட பள்ளிக்கூடத்திற்கு புதுசா வந்திருக்கிற வாத்தியார். இவருக்கு இந்த ஊரில யாரையும் தெரியாதாம். ரயிலில வந்து இறங்கி எங்க போறதென்று தெரியாம தவிச்சுக்கிட்டு நின்னாரு. ஏதோ நம்மலாலான உதவியச் செய்யலாமென்று கூட்டி வந்திருக்கிறன்.

"தம்பி இது நம்ம மக, உனக்கு என்ன உதவி வேணுமோ நீ கேள். அவ செய்து தருவா"

மகளை அறிமுகம் செய்யும் தோரணையில் கூறினார்.

பாம்பாட்டியின் மகுடிக்கு மயங்கிய பாம்பு போல "சரி" என்று தலையை ஆட்டினான்.

அவளும் தந்தையின் வார்த்தைக்கு 'ஆம்' என்று பச்சைக்கொடி காட்டுவது போல மெல்லியதாகப் புன்னகைத்தாள். அந்தப் புன்னகையில் மலர்ந்த அரைவட்டப் பல் வரிசைகள் மூன்றாம் பிறையெனத் தோன்றி மறைந்தன.

அவனுடைய பார்வை முழுவதும் சுதந்திரமாக அவள் மீது விழுந்தது. அவள் தர்ம சங்கடமான தவிப்போடு சின்னி விரல் நகத்தைச் சுவைத்துக் கொண்டிருந்தாள்.
"வா தம்பி...."

உள்ளே அழைத்துப் போனார்.

உள்ளே லயம் அழகாக இருந்தது.. பூச்செடிகளின் நிரல்கள் - நிரைகள்..... நிதி நிலைமைக்கு ஏற்ற படியான கேட்டின் சேலைகளின் ஒழுங்குகள்..... மேசை விரிப்புகள் எல்லாம் பெண்மையின் கைத்திறனுக்கு வரைவிலக்கணமாக அமைந்திருந்தன.

பத்மநாதன் லயத்தின் அழகை ரசித்தபடி நின்றான்.

"தம்பி, இனி இது உன்ர லயம் மாதிரித்தான். என்னத்த பார்த்துக் கொண்டு நிற்கிறே. சூட்கேசை வைச்சுப் போட்டு உக்காரு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் முனுசாமியின் குரல் கேட்ட அவருடைய மனைவி அடுப்படியில் ஏதோ வேலையாக இருந்தவள், அகப்பையும் கையுமாக கதவுக் கேட்டினை நீக்கிக் கொண்டு எட்டிப்பார்த்தாள்.

அங்கே கதிரையில் அந்நிய வாலிபன் ஒருவன் இருப்பதைக் கண்டாள்.

திரைச் சேலையை நீக்கிக் கொண்டு எட்டிப் பார்க்கும் வேலம்மாவைக் கண்ட முனுசாமி,

"என்ன வேலம்மா இப்பிடிப் பார்க்கிறே..... இது தம்பி மட்டக்களப்பில இருந்து நம்மட பள்ளிக்கூடத்திற்கு ட்ரான்ஸ்பராக வந்திருக்குது. தம்பிக்கு இந்த ஊரில யாரையும் தெரியாது. ஒரு வீடெடுக்கு மட்டும் தம்பி இங்கதான் தங்கியிருக்கும். அது சரி... தம்பி பயணத்தால சரியாகக் களைத்துப் போய் வந்திருக்குது, நல்ல தேத்தண்ணியா ஒன்று போட்டுக் கொண்டு வாவன்" என்றார்.

சிறிது நேரத்தில் வேலம்மா தேனீர்க் கோப்பையுடன் வந்தாள்.

அந்த நேரம் பார்த்தாற் போல கோலம் போட்டு முடிந்த அவரின் மகள் நுழைந்து அறையினுள் புகுந்தாள். அப்பொழுது அவளுடைய கண்கள் கடைக்கண்ணால் ஒரு கள்ளப் பார்வை பார்க்கத் தவறவில்லை.

அவனும் அவளை முன்னுக்கு விட்டுப் பின்னழகை ரசித்தான்.

நடையின் நளினத்திற்கு ஏற்றபடி உடலோடு ஒட்டினாற் போல அங்கொன்றும் இங்கொன்றுமாக ரோஜாப்பூ பூத்த கைத்தறிச்சாறி, கருநாகம் போல வளர்ந்திருந்த சடையில் நாலைந்து வாடா மல்லிகை மொட்டுக்கள் மலர்ந்திருந்தன.

"தம்பி, தேத்தண்ணியைக் குடிச்சுப் போட்டு பல்லைத் தீட்டிக் குளிச்சுப்போட்டு இரும். ஏதும் உதவி தேவையென்றால் மகள் நிற்கிறாள்; அவளிட்ட கேள், எதுக்கும் நான் ஒருதரம் கங்காணிட்ட லீவுக்குச் சொல்லிப்போட்டு ஓடி வாறன். அப்பிடிச் சொல்லாமல் விட்டால் இரண்டு மூணு நாள் சம்பளத்தை வெட்டிப் போடுவாங்கள்" என்று கூறியவாறு, வெளியே வந்தவர், மகளிடம்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புள்ள தம்பிக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடு இந்தா... நான் பெறட்டுக்களத்துக்கும் போயிற்று ஓடி வாறன்"

நடையில் வேகமானார்.

குளிருக்கு ஏற்றவாறு ஆவிபறந்த தேனீர் இதமாகத்தான் இருந்தது.

தேனீர்க் கோப்பையைக் கீழே வைத்ததும்,

"இந்தாங்க துவாய், சோப், பேஸ்ட்..... எல்லாமே இருக்குது. ஆனா, எங்கட ஊரைப் போல பைப்புமில்லை - கிணறுமில்ல.... பீலியிலதான் குளிக்க வேணும்! அதோ தெரியுது பீலி, அதில போய்க் குளிச்சிற்று வாங்க" என்றாள்.

அது அவள்தான் சொன்னாளா? இல்லை காலைக்குயில்தான் கூவியதா என்று அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அவ்வளவு இனிமையான குரல்.

அவனுக்குப் பேசுவதற்கு நாவெழவில்லை. தட்டுத் தடுமாறி,

"இதெல்லாம் என்னத்திற்கு... நான் எல்லாம் கொண்டு வந்திருக்கிறன்"

என்று கூறிச் சூட்கேசைத் திறந்து துவாயை எடுத்துத் தோளிலே போட்டுக் கொண்டு பல்லைத் தீட்டியவாறு பீலியை நோக்கி நடந்தான். ஓ! மலையகம் எவ்வளவு அழகானது!

வானை முட்டும் அடுக்கடுக்கான மலைத் தொடர்கள்...........

பனி பூத்த மலைகளுடன் முட்டி விளையாடும் கருநீல முகில் கூட் டங்கள்..........

பச்சைப் பசேலென்ற கம்பளி விரித்தாற் போல தேயிலைச் செடிகள்..........

தேயிலைச் செடிகளின் நடுவினிலே தோகை விரித்தாடும் மயில்கள் போல முக்காட்டுடனும் கூடையுடனும் நடமாடும் பெண்கள் கூட்டம்..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அழகிய மலையகத்தின் காட்சிகளைக் கண்டதிலிருந்து எப்படியாவது ஊரைச் சுற்றிப் பார்த்து விட வேண்டும் என்ற துடிப்பு அவனுடைய மனதிலே துளிர்விட்டது.

மலைப்பாறையொன்றின் மீது ஏறி நின்று கொண்டு பிறசினால் பல்லைத் துலக்கியவாறு மலையக மண்ணை ரசித்தான்.

பின் மலையுச்சியில் ஊற்றெடுத்து பாறை வழியே வழிந்து சலசலத்தோடும் பீலியில் ஆசை தீரும் மட்டும் குளித்தான்.

ஒரே இரவு முழுவதும் ரயில் பயணத்தினால் அடிபட்டு வந்த அலுப்புக்கு அதிகாலைப் பனியுடன் கூடிய குளிர்நீர் உடம்புக்கு இதமாக இருந்தது.

குளித்து முடித்து விட்டு லயத்திற்கு வந்தான். மேசையில் அவனுக்காகக் காலையுணவு தயாராக இருந்தது.

"தம்பி, சாப்பாடு ஆயத்தமாக மேசையில இருக்குது. வந்து சாப்பிடுங்க." - தாய் அழைத்தாள்.

ஒருகணம் அவனின் தாய் கண்ணின் முன்னே தோன்றி மறைந்து போனாள்.

அந்த தாயின் வார்த்தையைத் தட்ட முடியாமல் திண்டாடிப் போனான்.

அவனுக்கு அவர்களை யார் என்று முன்னும் பின்னும் தெரியாது. எங்கேயோ பிறந்து எங்கேயோ வந்திருக்கும் அவனுக்கு இவர்கள் யார்?

கூடப் பிறந்த சகோதரங்களே ஆளை ஆள் எதிரியாகப் பார்க்கும் இந்தக் காலத்தில்.... அவர்கள் அவன்மீது காட்டும் அக்கறையை நினைக்க விசித்திரமாக இருந்தது.

மலையக மண்ணிலே இப்படியொரு உபசரிப்பா? அவனால் நம்பவே முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது அவனுள் எழுந்த பிரச்சினை சாப்பிடுவதா? இல்லையா?

ஏழைகளின் வீட்டில் சாப்பிட அழைக்கும் பொழுது 'இயலாது' என்று சொன்னால், ஏழைகளின் வீட்டில் சாப்பிட விரும்பவில்லை என்று நினைத்து வருந்துவார்கள். 'சாப்பிட்டால்' அவர்களுடைய கஷ்டத்தின் மத்தியில் வீண் செலவுதானே என்று அவன் மனம் வருந்துவான். எனவே, சாப்பிட்டாலும் பிரச்சினை - சாப்பிடாவிட்டாலும் பிரச்சினை. இது அவனுடைய சமூகசேவை கற்றுக் கொடுத்த பாடம்.

மேசையிலே அமர்ந்தான்.

அவளே சாப்பாட்டைப் பரிமாறினாள். கோதுமைமா ரொட்டியும் தேங்காய்ப்பூ சம்பலும் ருசியாகத்தான் இருந்தன. அம்மாவின் சாப்பாட்டைப் போல இனி எங்கே கிடைக்கப் போகிறது என்று ஏங்கியவனுக்கு அம்மாவே நேரில் வந்து சமைத்துப் போட்டது மாதிரி இருந்தது.

மலையக மக்களின் தேசிய உணவு!

சின்ன வெங்காயமும் மாசித் தூளும் சீரகமும் போட்டு இடித்த தேங்காய்ப்பூச் சம்பல் தொண்டையில் இறங்கியதும் அம்மாவின் நினைவே வந்தது. சாப்பாட்டையே மறந்து அப்படியே சில நிமிடங்கள் இருந்து விட்டான்.

"வெட்கப்படாமல் சாப்பிடுங்க.... இது உங்கட வீடு மாதிரித்தான், சாப்பிடாமல் விட்டால் அப்பா எங்களுக்குத்தான் பேசுவார்"

என்று கூறியபடி கரண்டியால் சம்பலை அள்ளி அவனுடைய கோப்பைக்குள் போட முற்பட்டாள்.

"வேண்டாம் போதும்..... போதும்....."

கையால் தடுத்தான். அவனுடைய கைகள் தவறுதலாக அவளுடைய மென்கரத்தைத் தொட்டு விட்டது. ஒருவித உணர்வு உடலெல்லாம் ஏறி மின்சாரம் பாய்வது போல உணர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் 'சொறி' என்றவாறு நிமிர்ந்தான். அவளது பார்வை அவன் மீதும் அவனது பார்வை அவள் மீதும் மோதிக் கொண்டன. தர்மசங்கடத்தால் இருவரும் தலை குனிந்து கொண்டனர்.

அவனை ஏதோவொன்று அடிக்கடி பார்க்க வேண்டும் போல நெஞ்சை வருடியது.

அவளுக்கும்..... ஏதோ இதயம் படபடவென அடித்தது.

கையை அலம்பிக் கொண்டு எழும்பினான்.

இன்று ஞாயிற்றுக்கிழமை. எப்படியாவது - எங்கேயாவது வீடு எடுத்து விடவேண்டும். அப்படியானால்தான் நாளை திங்கட்கிழமை பாடசாலைக்குச் செல்ல முடியும். பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்தால் வீடு தேடுவதற்கு நேரம் இருக்காது. காலையில் பாடசாலைக்குச் சென்றால் மாலையில் வீட்டுக்குத் திரும்பி வரத்தான் நேரமும் சரியாக இருக்கும்.

ஆபத்துக்கு உதவியவர்களின் வீட்டில் இருந்து கொண்டு அவர்களுக்கு உபத்திரவம் கொடுப்பதற்கும் மனம் இடங்கொடுக்கவில்லை. அதேவேளை அவர்களின் உபசரிப்பை மீறி அந்த வீட்டை விட்டு வேறு ஒரு வீட்டுக்கு மாறிப் போவதற்கு ஏதோ மனதிற்குச் சங்கடமாக இருந்தது.

அதை விட......

......... இன்னும் ஏதோ ஒரு பிரிவுத்துயர் வருத்தியது.

"என்ன தம்பி குளித்துக் கிளித்து.... சாப்பிட்டீங்களா?

கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார் முனுசாமி.

"ஆம்" என்று கூறியவன், மனதைத் திடம்படுத்திக் கொண்டு,

"உங்களுக்குக் கஷ்டம் தர விரும்பல்ல. அதனால இன்றைக்கே எங்கேயாவது ஓர் அறையெடுக்கலாம் என்று நினைக்கிறேன்" என்றான் மீண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன தம்பி அவசரம். இண்ணைக்குத்தானே ஊரில இருந்து வந்தீங்க. வந்த களைப்பு வேற இருக்கும். ரெண்டு மூணு நாள் இங்க தங்கியிருந்துட்டு ஒரு நல்ல இடமாகப் பார்த்து எடுக்கிறது-தானே!”

“இல்ல.... நான் நாளைக்குப் பள்ளிக்கூடம் போகத் தொடங்கினால் இடந்தேடுறது கஷ்டம். அதனால இண்டைக்கே இடமெடுத்தால் நல்லது. எதுக்கும் நீங்க நான் கொண்டு வந்திருக்கிற அட்டறஸ்சிற்கு கொண்டு போய் விடுவீங்களென்றால்.... அவங்க மூலமாக தங்கிறத்திற்கு ஒரு இடத்தத்தேடிக் கொள்ளுவன்”

பேர்சிக்குள் இருந்த முகவரியை எடுத்து அவரிடம் கொடுத்தான்.

அந்த முகவரியைக் கண்டதும் அவர் அதிர்ந்து போனார்.

## 6

நிசப்த அமைதி நிலவியது. ஒருவரும் ஒன்றுமே பேசவில்லை. ஆளை ஆள் பார்த்துக் கொண்டு நின்றனர்.

அந்த அமைதியைக் கலைப்பதற்காக அவனே பெரியவரைப் பார்த்துக் கேட்டான்.

“அந்த முகவரிக்கு இன்றைக்கே போகலாமா.....? அது நல்ல இடமா...?

“நான் அறிந்த மட்டில நல்ல இடந்தான். ஏன் தம்பி இன்றைக்கே அவசரமாகப் போக வேணுமா...”

“இன்றைக்கே போனால்தான் எங்கென்றாலும் ஒரு இடத்தை எடுத்துக் கொள்ளலாம். நாளைக்குத் தொடக்கம் பள்ளிக்கூடத்திற்கும் போய் வரத் தொடங்கினால் நேரங் கிடைக்காது. அதனால இன்றைக்கே போனால் நல்லது.....”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்துக் கொண்டே பதில் சொன்னான்.

என்ன நடக்கிறது என்பதனை மகளும் வேலம்மாவும் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.

"சரி தம்பி, நீங்க விடாப் பிடியாகப் போக வேணும் என்று சொல்லும் போது நான் ஒன்றும் செய்ய இயலாது. இன்றைக்கென்ன இப்பவே அந்த அட்ரஸ்சிற்குக் கொண்டு போய் விடுறன். சூட்கேசை எடு தம்பி போவம்........."

தம்பி இன்றைக்குப் போக வேண்டாம். இன்னும் இரண்டு மூன்று நாட்கள் கழித்துப் போகலாம் என்று அவர் சொல்லுவார் என எதிர்பார்த்த அவர்களுக்கு அவ்வார்த்தையைக் கேட்டதும் ஆச்சரியமாக இருந்தது.

ஆனால்.... பேச வார்த்தைகள் இல்லை.

"தம்பி, இரண்டு மூணு நாளைக்கு இங்கு தங்கிட்டுப் போகட்டுமே! என்ன அவசரம்...... தம்பியோட கொஞ்ச நேரம் பழகினது எத்தனையோ வருஷம் பழகின மாதிரி இருக்குது"

குறுக்கிட்டாள் வேலம்மா.

மகளின் கண்களோ மௌனவார்த்தைகளுடன் கலங்கி நின்றன.

மௌனத் துயரில் துடித்தாள்

அதற்கிடையில் பத்மநாதன் சூட்கேசைத் தூக்கிக் கொண்டு ஒரு அடி முன்னே வைத்தான்.

ஆனால், அவன் ஒருவரிடமும் விடைபெறவில்லை.

"தம்பி, இந்த அட்ரசைக் கொஞ்சம் வாசியும்"

கையிலிருந்த அட்ரசை அவனிடம் நீட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்ரசை வாங்கிக் கொண்ட அவன்,

"மு.நித்தியா, இலக்கம் ஏழு, சின்னத் தோட்ட வீதி, பண்டாரவளை" என்றான்.

அவன் அட்ரசைச் சொல்லி முடிப்பதற்கு முன்னரே,

"புள்ள நித்தியா, இந்த ஐயா மட்டக்களப்பில இருந்து நம்மட பள்ளிக் கூடத்திற்கு ரான்ஸ்பரில வந்திருக்கிறாராம். இந்த ஊரில யாரையும் தெரியாதாம். இந்த அட்ரஸ் மட்டுந்தான் தெரியுமாம். இந்த ஐயாவுக்குத் தங்கிறத்திற்கு ஒரு அறையை ஒழுங்கு செய்து கொடு. தம்பி, நீங்க கேட்ட வீட்டுக்கார அம்மா இவதான். அறையைச் சுத்தம் செய்து தந்தவுடனே சூட்கேசைக் கொண்டு போய் வைத்துக் கொண்டு தங்கலாம் சரிதானே!" என்றார் முனுசாமி.

அவரின் வாய்க்குள்ளே வெளியே மலராத கள்ளப் புன்னகை ஒன்று எட்டிப் பார்த்தது.

அவனுக்குப் பழம் நழுவிப் பாலிலே விழுந்தது போல இருந்தது. அவளுக்கும்..... அப்படியேதான்.

திங்கட்கிழமை.

காலை ஏழு மணி.

சுபமங்கள சுபவேளை சுக்கிர கோரையில் பாடசாலையில் நுழைந்தான் பத்மநாதன்.

அது பாடசாலையா....? பாடசாலை என்று சொல்வதற்கு அருகதையில்லை கிட்டத்தட்ட ஒரு மாட்டுக் கொட்டில் என்றே சொல்லலாம். அவ்வளவு கேவலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறிய தகரக் கொட்டகை. மன்னிக்கவும் தகரக் கொட்டகையல்ல. இந்திரனின் கண்களை நினைவூட்டிடும் நூதனசாலை. மாணவர்கள் பாடம் படிக்க வேண்டுமாயின் மரங்களின் கீழே இருந்துதான் படிக்க வேண்டும்.

பட்டணங்களில் பாடசாலைக் கட்டிடங்கள் மாட மாளிகைகளாக உயர்ந்து கிடக்கின்றன. ஆனால், இந்த மலையகத்தில் பாடசாலைகள் கூனிக் குறுகித் தேய்ந்து கொட்டில்களாகிக் கிடக்கின்றன. இந்த அநியாயத்தை யாரிடம் போய்ச் சொல்லுவது?

காலை எட்டு மணியைத் தாண்டியதும் இரண்டு பேர் வந்தார்கள். கையில் பிரம்பும் சில புத்தகங்களும்...... இதைக் கொண்டே அவர்கள் ஆசிரியர்கள்தான் என்பதனை ஊகித்தான்.

அதில் ஒருவர் ஐம்பது வயதை எட்டிய தோற்றம். முன் மயிர்கள் கொஞ்சம் உதிர்ந்து முன்மொட்டையை உருவாக்கியிருந்தது. அவருடைய தோற்ற அமைப்பைக் கொண்டே நிட்சயமாக அவர்தான் பாடசாலையின் அதிபர் என்பதனை ஊர்ஜிதம் செய்து கொண்டான். அவர்கள் அவனை நெருங்கியதும் "வணக்கம்" என்றான்.

பதிலுக்கு அவர்களும் "வணக்கம்" என்றவாறு அவனை மேலும் கீழும் ஒரு பார்வை பார்த்தனர். அந்தப் பார்வை "நீ யார்?" என்பது போல இருந்தது.

அந்தப் பார்வையில்தான் எத்தனை அர்த்தங்கள் பொதிந்து கிடந்தன. அந்தப் பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவனாக,

"சேர், நான் இந்த ஸ்கூலுக்கு ட்ரான்ஸ்பரில வந்திருக்கிறன்" என்றான்.

"அப்படியா! எனக்கு அப்பிடியொரு கடிதமும் வரயில்ல. எங்க......... இந்த ஊரில ஒழுங்காக தபால் சேவையே இருந்தால்தானே! ஏழெட்டு நாளைக்குப் பிறகு கடிதங்கள் வந்து சேரும். பரவாயில்ல, நீங்க சைன்னப் பண்ணிப்புட்டு படிப்பியுங்க. அப்புறம் பாப்பம்....... சரி..... வாங்க உள்ளுக்குள்ள போவம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமூச்சொன்றை விட்ட வண்ணம் நடந்தார்.

மூவரும் நடந்தனர்.

அவர் பேசிய விதம் - அனுபவ முதிர்விலும் ஒரு ஏக்கம் தொக்கி நிற்பதனைப் புரிந்து கொண்டார்.

"தம்பின்ர பெயர்"

"பத்மநாதன்"

"ஊர்"

"மட்டக்களப்பு"

சிறிது தூரம் மௌனமாக நடந்தனர். மீண்டும் அவரே தொடர்ந்தார்.

"இவதான் மிஸ் கமலினி. இவ இங்கிட்டு தொண்டர் ஆசிரியையாகப் படிப்பிக்கிறாங்க. நானும் இவங்களுந்தான் இங்கிட்டு ரீச்சர்ஸ். வேறு ஒருத்தருமில்ல.

நேரம் ஒன்பது மணியைத் தாண்டிய போதும் மாணவர்களின் வரவு குறைவாகவேதான் இருந்தது. விரல் விட்டு எண்ணக் கூடியளவிற்கு கொஞ்சம் மாணவர்களே இருந்தனர்.

ஒரு வாரம் ஓடி மறைந்தது.

அந்த ஒரு வாரத்திலும் ஒரு வருட அனுபவத்தைப் பெற்றுக் கொண்டான். மாணவர்களின் எண்ணிக்கையும்.... ஆசிரியர்களின் தொகையும்.... பாடசாலைக் கட்டிடத்தின் சீரழிவும்.... மலையக மக்களின் கல்வித்தரம் எந்தளவிற்குப் புரையோடிப் போய்க் கிடக்கிறது என்பது சொல்லாமலே புரிந்தது.

"சேர், இங்க இவ்வளவு பிள்ளைகளுந்தானா படிக்குது?"

அதிபரிடம் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓமோம்”

“அப்ப, இந்த ஊரில இவ்வளவு பிள்ளைகளுந்தானா இருக்குது”

“இல்ல, ரொம்பப் பிள்ளைகள் இருக்கிறாங்க. ஆனா, பள்ளிக் கூடத்திற்கு வர்ரதில்ல. அப்பிடி வர்ரதென்றாலும் கொஞ்ச நாளைக்குத்தான் வருவாங்க. அப்புறம் கொஞ்சம் வளர்ந்தவுடனே கொழுந்தெடுக்கவும் தோட்டத்தில வேலை செய்யவும் போயிடுவாங்க. அதோட படிக்கிறத்திற்கு நல்ல பள்ளிக் கூடமுமில்ல வாத்திமாருமில்ல”

“நீங்க ஏதாவது புத்தி சொல்லி படிப்பிக்கப் பார்க்கவில்லையா சேர்”

“இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லி நிப்பாட்டலாந்தான். ஆனா, படிக்கிறத்திற்கு நல்ல கட்டிடமுமில்ல. வாத்திமாருமில்ல அதனால... ஏன்தான் அவர்களுடைய காலத்தை அநியாயமாக்குவான் எண்ணு போட்டு நிப்பாட்டுவதேயில்லை.”

அவர் சொல்லுவதும் நியாயமாகத்தான்பட்டது.

அவன் மௌனமானான்.

சிந்தனைகள் சக்கரங்களாகச் சுழன்றன.

அது சுழன்று..... சுழன்று........ இறுதியில், ‘ஒரு பள்ளிக்கூடம் திறபடுகிறது என்றால் ஒரு சிறைக்கூடம் மூடப்படுகிறது என்று அர்த்தம்’ என்று யாரோ சொன்னது சிந்தனையில் சற்று ஓய்ந்தது.

உடனே “சேர், இப்படிச் செய்தாலென்ன!” என்றான்.

“எப்படி”

“சேர், இன்னும் நாங்க மலையகத்தின் கல்வியை இப்படியே விட்டுக் கொண்டு போகக் கூடாது. எப்படியாவது கல்வியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றுவதற்காகப் பாடுபட வேணும். இல்லையென்றால் நாங்க ஆசிரியராக இருக்கிறதில அர்த்தமேயில்லாமல் போய் விடும். அதோட கொஞ்சக் காலம் போனால் மலையகத்தில படிப்பறிவு இல்லாமல் போய் பள்ளிக்கூடம் கட்டுறத்திற்குப் பதிலாக சிறைக் கூடங்கள்தான் கட்டவேண்டி வரும்!"

"அதுசரி, எனக்கும் அப்படியென்னுதான் தோணுது. எப்படியாவது கல்வியை முன்னேற்றலாம் எண்ணா எப்படி முன்னேற்றலாம்"

"ஒரு வீடு கட்டுவதற்கு அத்திவாரம் அவசியம். அத்திவாரம் நல்லா அமையவில்லையென்றால் வீடு கட்டி நிலைக்காது. வீடு கட்டவும் முடியாது. அது போலத்தான் இந்த மலையகக் கல்வியும். இங்கே இருக்கிற மூதாதையர் படிப்பறிவில்லாதவங்க. அவங்களுக்குக் கல்வியைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அவங்கதான் கல்வியின் அத்திவாரம். அவர்களுக்குக் கல்வியின் மகத்துவத்தைப் பற்றி விளங்கப்படுத்தினால் - புரிய வைத்தால் அத்திவாரத்தை நன்றாகப் போட்டதற்குச் சமன்"

"அதற்கு என்ன செய்யலாந் தம்பி"

"அதுக்கு நாங்க முதலில பெற்றார் ஆசிரியர் சங்கத்தை கூட்டுவம்"

"அங்க ஆரு பெற்றார் தம்பி அக்கறையோட வரப் போறாங்க"

"அதுக்குத்தான் சேர், பெற்றார் ஆசிரியர் சங்கம் என்று கூட்டாக, பாடசாலை நலன்புரிச் சங்கம் என்று கூட்டுவம். அப்போத்தான் பெற்றோர்கள் என்று மட்டுமில்லாம இளைஞர்களையும் சேர்க்கலாம். இளைஞர்கள்தான் நாட்டினுடைய அபிவிருத்தியின் முன்னோடிகள்.... தீவிரமானவர்கள்.... அவர்களைக் கொண்டே கல்வியை வளர்க்கலாம்"

"இந்தப் பெற்றோர்களையும் இளைஞர்களையும் எப்பிடித் தம்பி கூப்பிடுறது........"

"சேர், சும்மா பள்ளிக்கூடம் என்ற பெயரில பள்ளிக்கூடம் சும்மா திறந்து கிடக்கிறதவிட, ரெண்டு நாளைக்குப் பாடசாலையைப் பூட்டிப் போட்டு ஒவ்வொரு லயமாகப் போய்ச் சொல்லிப் புரிய வைப்பம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ சொல்லுறபடி செய்வம். ஆனா.... நாம போற பாதை நல்ல பாதையாகத் தெரியல்ல"

"நாம போற பாதை இருள் நிறைந்தது: பயங்கரமானது என்று எனக்குத் தெரியும். ஆனா....... இருளைக் கண்டு பயந்து ஓடி ஒளிந்து விட முடியுமா சேர்? இருளிலேதானே ஒளி பிரகாசிக்கும்.

"சரி....... சரி......... வருகிற ஞாயிற்றுக்கிழமை கூட்டத்தை வைப்பம்"

என்றார் வேண்டா வெறுப்பாக.

## 8

இரண்டு நாட்கள் பாடசாலை பூட்டிக் கிடந்தது.

அதிபரும் பத்மநாதனும் கமலினியும் ஒவ்வொரு லயமாக மலையாக ஏறி இறங்கினார்கள். தங்களை அறியாமலேயே அவர்களுடைய கால்களில் இனம் புரியாத சுறுசுறுப்பு.

பத்மநாதன் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி ஒவ்வொரு இளைஞர்களுக்கும் பெற்றோர்களுக்கும் எடுத்துக் கூறினான்.

மலையக மக்களின் முகத்தினிலே ஒரு பூரிப்பு. விடுதலை கிடைத்து விட்டது போல ஒரு உற்சாகம்.

ஒவ்வொரு லயத்திலும் நிறைய வரவேற்பு இருந்தது. தேநீர் கொடுத்து விருந்தோம்பல் செய்தார்கள். அவர்களும் மக்களுடன் இரண்டறக்கலந்து அவர்களை ஈர்ப்பதற்காக ஏற்றுக் கொண்டனர். நீண்ட நேரம் பேசினர்.

இவ்வளவு காலமும் வந்தாரை வரவேற்கும் மட்டக்களப்பு என்றுதான் அறிந்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், இங்கு...... வறுமையிலும் உவகை தரும் விருந்தோம்பலைக் கண்டு வியந்து போனான்.

மலையக மண்ணை மிதித்ததிலிருந்து நெஞ்சில் சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்த எப்படியாவது மலையத்தைச்சுற்றிப் பார்த்து விட வேண்டும் என்ற ஆசையும் நிறைவேறிக் கொண்டிருந்தது.

அதுமட்டுமல்லாமல் மலையக மக்களின் அவலங்களையும் துன்பங்களையும் நேரில் கண்டான்.

புறாக்கூடு போல லயம்....

கடுங்குளிர்.... முட்புதர்கள்.... முண்டியடித்து ஏற வேண்டிய மலைகள்..........

பாடசாலைகளுக்குப் போக வேண்டிய பிள்ளைகள் தெருக்களிலே மாங்கொட்டை விளையாட்டு.........

பள்ளி செல்லும் வயதுப் பிள்ளைகள் பிள்ளைகளைப் பார்ப்பதற்காக லயத்துச் சிறைகளிலே முடக்கம்.....

என்ன வாழ்க்கை.....! என்ன வாழ்க்கை...........!

அதிபரும் கமலினியும் வேறு பாதையால் செல்ல எல்லோரையும் சந்தித்து விட்ட திருப்தியுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான்.

வரும் வழியில்...........

முழுக்கையாக அணிந்திருந்த சேட்டை நீக்கி கடிகாரத்தை உற்றுப் பார்த்தான். நேரம் ஆறு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. சூரியன் இருட்டுக் கதிர்களை அள்ளி எறிய ஆரம்பித்திருந்தான்.

நீண்ட பரந்த தேயிலைத் தோட்டம்........ அதன் நடுவிலே பென்னம் பெரியதொரு பங்களா.... வாசலை நிறைத்துக் கொண்டு பெரியதொரு இரும்புக்கேற்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இரும்புக் கேற்றடியிலே 'கிரீச்' என்ற ஓசையுடன் வேகமாக வந்து நின்றது ஒரு நியூ மொடல் கார். காரில் இருந்தவர் வயது ஐம்பதை எட்டி நின்ற போதிலும் வாட்ட சாட்டமாக இருந்தார். மினுமினுப்புக் கலையாத உடை, வாயிலே புகை கக்கியபடி 'S' மொடல் சுங்கான்.

கதைகளிலே படித்தும் கேட்டும் இருந்த அவனுக்கு அது நிட்சயமாக தோட்டத்துரை என்பது சொல்லாமலே புரிந்தது.

காரைக் கண்டதுதான் தாமதம் வாசலிலே காவலுக்கு நின்ற வயதானவர் இயந்திர கதியில் செயல்பட்டு கேற்றைத் திறந்தார். தோளிலே கிடந்த லேஞ்சி(சால்வை) யை எடுத்து இடுப்பிலே கட்டிக் கொண்டு உடலைக் கூனிக் குறுக்கிக் கேள்விக் குறியாக்கிக் கொண்டு நின்றார். கார் உள்ளே நுழைந்தது. கார் எழுப்பிய கரிப்புகையும் அவர் இழுத்து விட்டுப் போன சுங்கான் புகையும் அவரைச் சூழ்ந்து கொள்ள,... மீண்டும் இடுப்பிலே கட்டியிருந்த லேஞ்சியை அவிழ்த்து தோளிலே போட்டுக் கொண்டார்.

இந்த அற்புத நிகழ்ச்சியை நேரிலே கண்ட பத்மநாதனின் கால்கள் அவனையுமறியாமல் அவ்விடத்திலேயே தரித்து நின்றன.

இதுதான் முதலாளி வர்க்கத்தின் ஏவலுக்கு அடி பணிந்து உழைக்கும் சமுதாயம்.

மலையக மக்களின் வாழ்க்கை.... அடிமை வாழ்க்கைகள் நிறைந்த இருளிலேதான் மண்டிக் கிடக்கிறது என்பதனை நேரில் கண்டான்.

அவனுடைய நெஞ்சை....... ஏதோ ஒரு சுமை அழுத்தியது.

மலையகம் என்பதன் பொருள் அடிமையா..........! அவனுடைய நெஞ்சம் பலமுறை அடித்து அடித்துக் கேட்டுக் கொண்டது.

வாழ்க்கையிலே இது மறக்க முடியாத கொடுமை!

உலகின் பல நாடுகளையே அடிமைப்படுத்தி வைத்திருந்த பிரிட்டிசின் இளவரசர்கள்கூடப் போகும் பொழுது காவலுக்கு நிற்பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சை நிமிர்த்தி நிமிர்ந்து நின்று வரவேற்கிறார்கள். ஆனால் இந்த ஜனநாயக பூமியில்..........!

சிந்தனைக் குழப்பமாக நடந்தான்.

மலையக மண்ணில் வேர் விட்டுப் பரவிக் கிடக்கும் அடிமைப்பட்ட சனங்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற சுதந்திர வேட்கை பூதாகரமாக எழுந்தது. வானத்தைப் பார்த்தான். இருள் கட்டியிருந்தது. அவர்களுடைய வாழ்க்கையும்....... இருளாகத்தானே தெரிகிறது. அந்த இருள் கலைந்து...... எப்பொழுது ஒளியைக் காணப் போகிறார்களோ!

## 9

ஞாயிற்றுக்கிழமை.

நாலு மணி.

அவர்கள் எதிர்பார்த்ததை விட ஆட்கள் அதிகமாகவே வந்திருந்தனர். வேலைக்குச் செல்லும் ஆட்கள் கூட வேலைகளை ஒதுக்கித் தள்ளி வைத்து விட்டு குறித்த நேரத்திற்கு வந்திருந்தனர். பெரியோர்கள்... இளைஞர்கள்... யுவதிகள்.... சிறுவர்கள்..... என.....

இவ்வளவு ஆட்களையும் கண்ட பத்மநாதனுக்கு உள்ளம் உவகையால் நிரம்பிப் பூரித்தது. இலட்சியத்தின் எல்லை எட்டத்தில் இல்லை என்பதனை உணர்ந்தான்.

அதிபருக்குக் கூடப் பெரிய ஆச்சரியமாக இருந்தது. இந்தப் பாடசாலையின் வரலாற்றிலேயே அதிகமான ஆட்கள் வந்திருப்ப-தென்றால் இன்றுதான். இல்லையேல் விரல்விட்டு எண்ணும் வகையில் நாலைந்து கிழடுகள்.

ஆரம்பத்தில் தேவையற்ற வேலை என்று மனச் சஞ்சலப்பட்டுக் கிடந்த அதிபருக்கு உற்சாகம் பிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு வந்து பொறுப்பேற்று இரு வாரத்திற்குள்ளேயே பெரு மாற்றத்தைக் கொண்டு வந்த பத்மநாதனுக்கு மானசீகமாக நன்றி சொல்லிக் கொண்டார்.

ஒவ்வொரு இலட்சியங்களும் முதலில் கனவாகத்தான் வரும். பின்பு அந்தக் கனவுகளே நனவுகளாகும் என்பதனை உணர்ந்தார்.

ஏற்கனவே ஆயத்தப்படுத்தி வைக்கப்பட்டிருந்த தரையில் எல்லோரும் உட்கார்ந்து இருந்தனர். அதிபரும் பத்மநாதனும் கூடத் தரையிலேயே இருந்தனர்.

முதலில் அதிபர் பேசினார். அதனைத் தொடர்ந்து பத்மநாதன் பேசுவதற்காக எழுந்தான்.

அவனால் பேச முடியவில்லை.

அவர்களின் முகங்களைக் கண்டதுமே பயங்கரமானதொரு துயர உணர்வு நெஞ்சைப் பாராங்கல்லாக அமுக்கிக் கொண்டிருந்தது.

அவனையும் மீறி அவனுடைய பார்வைகள் அவர்களை மேய்ந்தன.

மளிக்கப்படாத முகங்கள்....

நரைத்த முடிகள்....

கருங்காலிக் கறுப்பு உடல்கள்....

வதங்கிய தோலை துருத்திக் கொண்டிருக்கும் எலும்புகள்...

கலங்கிய உடைகள்...

இவை அனைத்தும் ஓயாத வேலை..... ஒழியாத வேலை.... சக்தியில்லாத உணவு..... நிம்மதியில்லாத மனம்.... நீங்காத வறுமை...... என்பவற்றிற்காகக் கொடுக்கப்பட்ட நினைவுச் சின்னங்களா.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தான். பேச ஆரம்பித்தான் என்பதனை விட அவர்களுடன் கலந்தாலோசித்தான் என்றே சொல்லலாம்.

அனுபவ முதிர்வு பேசியது.

"நான் இந்தப் பள்ளிக்கூடத்திற்கு புதிதாக வந்திருக்கின்ற ஆசிரியன். இங்கு வந்த பின்புதான் இந்த மண்ணில கல்வி எவ்வளவு பின்தங்கிப் புரையோடிப் போய்க் கிடக்கிறது என்பதனை அறிகின்றேன். இந்தப் பாடசாலையைப் பொறுத்தவரை இது பாடசாலை என்ற பெயரே தவிர, இங்கு பாடசாலைக் கட்டிடங்களோ மாணவர்களோ ஒழுங்கான ஆசிரியர்களோ கிடையாது. கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களில் பாடசாலைகள் மாட மாளிகைகளாகவும், ஆசிரியர்கள் 'ஓவர் ஸ்டாப்' ஆக இருப்பதுடன் ஒரு பிள்ளை கூடத் தவறாமல் எல்லாப் பிள்ளைகளும் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்று வருகின்றனர். அத்துடன் மூலைக்கு - மூலை, ஊருக்கு - ஊர், பிறைவேட் ரியூசன் கல்வி நிலையங்களும் நிறைந்து காணப்படுகின்றன. ஒவ்வொரு பெற்றோரும் தன்னுடைய பிள்ளை டொக்டராக வரவேணும் என்ஜினியராக வர வேணும் என்று போட்டி போட்டுப் படிப்பிக்கிறார்கள். இவைதான் அந்த ஊர்கள் முன்னேறுவதற்குக் காரணங்கள்.

ஆனால், இங்கு நிலைமை வேறு. தகரங்களெல்லாம் ஓட்டைகள் விழுந்த நிலையில் கொட்டகை என்ற நிலையில் இயங்கும் பாடசாலை.... மருந்து போல மூன்று ஆசிரியர்கள்... விரல் விட்டு எண்ணக் கூடியளவில் நாலைந்து மாணவர்கள்...... இப்படியென்றால் எப்படி இந்த ஊர் உருப்படும்!

ஒரு கிராமமோ நாடோ முன்னேற வேண்டுமென்றால், கல்விதான் முக்கியம். கல்வியறிவு வளர மூளை வளம் பெருகும். நாடு தானாக வளம் பெறும். அந்தக் கல்வியை நாம் எமது எதிர்கால இளைய சமுதாயத்திற்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இப்படியான ஒரு கல்வியை எமது இளம் சமுதாயத்திற்கு ஊட்டுவதன் மூலந்தான் எமது மலையக மண்ணைப் பீடித்திருக்கின்ற அடிமை வாழ்வு-அவல வாழ்வு நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் கண் விழிக்கும் முன்னர் நீங்கள் கண் விழித்து அதிகாலையிலிருந்து மாலை வரை கொட்டும் பனியுடனும் முட்டும் மலையுடனும் போட்டி போட்டு, ஒரு நாளா..... இரண்டு நாளா.... வாழ்நாள் முழுவதும் அடிமைச் சீவியம் நடத்துவதை நான் இங்கு காண்கிறேன். இந்த அடிமைச் சீவியத்தை நீங்கள் படும் அவஸ்தையை உங்கள் பிள்ளைகளும் படக்கூடாது. உங்களுக்காக இல்லாமல் விட்டாலும் உங்களுடைய பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காகவாவது நீங்கள் கொஞ்சம் கல்வியில் அக்கறை கொள்ளத்தான் வேணும். இதுதான் ஒருநாடு சுதந்திரமடைவதற்கான அடிப்படைப் புரட்சி."

அப்பொழுது மாரி மழையில் முளைத்த காளான் போல திடீரென ஒரு வயது போனவர் எழுந்து,

"தம்பி, நீ சொல்லுறது சரிதான். கல்வியை முன்னேற்றத்தான் வேணும். அது எப்படித் தம்பி ஆகும்" என்றார்.

அவன் இவ் வார்த்தைகளை இவ்வளவு விரைவில் எதிர்பார்க்கவில்லை. மகிழ்ச்சியில் திளைத்துப் போனான். ஆண்டாண்டு காலமாக அடிமைக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது போல இருந்தது. இது அவனுக்கு முதல் வெற்றி. வாய் இருந்தும் வாய்மூடி மௌனிகளாய் வாழ்ந்தவர்கள் இன்று வாய் திறந்து பேச வெளிக்கிட்டு விட்டார்கள்.

"அது உங்களைப் போல ஆட்கள்தான் செய்ய வேண்டும்"

"என்ன தம்பி சொல்லுறீங்க...... எங்களாலையா...!"

"ஆம், உங்களாலதான். நெஞ்சிலே தெம்பு இருந்தால் உடம்பில தானாகப் பலம் வரும்"

அவனுடைய குரலில் உறுதி தொனித்தது.

"என்ன தம்பி புதுக்கதை சொல்லுறீங்க"

"அய்யா, நான் புதுக்கதை ஒன்றும் சொல்லலல்ல.... பழைய கதைதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுறன்.... இங்கு வந்திருக்கிற யாராவது இந்தப் பாடசாலைக் கட்டிடத்தைப் பார்த்திருக்கிறீங்களா!"

ஆச்சரியக்குறியுடன் இருந்தவர்களின் முகங்களைப் பார்த்துக் கொண்டு வந்தான். அப்பொழுதான் முன் வரிசையில் இருந்து கொண்டு நித்தியா அவனையே பார்த்துக் கொண்டிருப்பதனைக் கண்டான்.

அவனுடைய பார்வை பட்டதும் ஏற்கனவே செக்கச் சிவந்திருந்த அவளுடைய கன்னங்கள் வெட்கத்தினால் மேலும் சிவப்பாகியது. இனம் புரியாத பயமும் வெட்கமும் இன்பமும் ஆட்கொள்ள சட்டென்று தலையைக் குனிந்து கொண்டாள்.

குண்டுசி விழுந்தால்கூட 'கணீர்' என்ற சத்தம் கேட்டும். அவ்வளவு அமைதி.

அந்தப் பேரமைதியைக் கலைத்துக் கொண்டு எழுந்த இன்னொருவர்,

"அதை ஏன் தம்பி நாங்க பார்க்க வேணும். இது அரசாங்கப் பாடசாலைதானே! அரசாங்கம் தானே பார்க்க வேணும்...."

என்று கூறிக் கொண்டு இருந்தார்.

இது அவனுக்குக் கிடைத்த இரண்டாவது வெற்றி. சிந்தனைச் செயலற்று கட்டளைக்கு அடி பணிந்து.... வாழ்ந்தவர்கள், இன்று சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்.

"நீங்கள் சொல்லுறதும் நியாயந்தான். இது அரசாங்கப் பள்ளிக் கூடந்தான். ஆனா... இங்கே படிக்கிறது அரசாங்கமா? உங்களுடைய பிள்ளைகள் தானே! அப்படியென்றால் நீங்கள்தானே அக்கறை எடுக்க வேணும். நகர்ப் புறங்களிலே 'டொனேசன்' என்ற பேரிலே பணத்தை அள்ளிக் கொடுத்து கல்வியை முன்னேற்றுகிறார்கள். நீங்கள் இங்கே சரீர சக்தியைச் கொடுங்கள். நிச்சயமாக கல்வி முன்னேற்றமடையும். இந்தச் சக்தி இளைஞர்களின் கைகளிலேதான் தங்கியிருக்கிறது. இந்த உலகத்தில இளைஞர்களால் ஆகாதது ஒன்றுமில்லை. இளைஞர்களால் என்னுடன் ஒத்துழைத்தால் நிச்சயமாக முன்னேற முடியும்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கூறியதுதான் தாமதம் அடைபட்டுக் கிடந்த இளைஞர்களின் வாய்கள் திறபட்டன.

"நாங்கள் என்ன செய்ய வேண்டும்!" - இது ஓர் இளைஞன்.

"நாங்கள் எந்த உதவியும் செய்யத் தயார்!" - இன்னொரு இளைஞன்.

"எங்களுடைய உயிரைக் கூடத் தரத் தயார்!" - இது பல இளைஞர்களின் ஏகோபித்த குரல்கள்.

இது அவனுக்குக் கிடைத்த மூன்றாவது வெற்றி. ஒன்றுபட்டு விட்டார்கள் உரிமைக்கு உழைக்கத் தொடங்கி விட்டார்கள்.

கோரசாக எழுந்த இளைஞர்களின் குரலிலிருந்துதான் புரட்சி என்றால் என்னவென்று புரிந்து கொண்டான்.

புரட்சி என்பது யாராலும் செய்யப்படுவதில்லை. தொன்று தொட்டு அடிமனதிலிருந்து வந்த எதிர்காலத் தீர்க்க தரிசனத்திற்காக நிகழ்காலத்தில் இயற்கையால் போடப்படும் அத்திவாரம்.

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்களே! அதே போலவே இரைச்சல்! அனைவரையும் அமைதியாக இருக்கும்படி கூறிவிட்டு அவனது திட்டத்தைக் கூறினான்.

அத்துடன் கூட்டம் நிறைவெய்தியது. எல்லோரும் மௌனமாக வெளியேறிக் கொண்டிருந்தனர்.

நாளை பொழுது புலரும்.... இளைஞர்கள் ஒன்று கூடுவார்கள்...... அவர்களின் கரங்கள் இணையும்.... ஒவ்வொருவருடைய கைளிலும் ஆயுதங்கள் சேரும்.... அவர்கள் மலையக மண்ணின் விடுதலைப் புரட்சியில் இறங்கி விடுவார்கள்..... விடுதலை நிச்சயம்.

வானம் இருண்டு கிடந்தது. நட்சத்திரங்கள் தெரியாதபடி வானத்தைப் போர்வையிட்டுக் கொண்டு கருமேகக் கூட்டங்கள். கையில் கட்டியிருந்த தங்க பட்டி போட்ட மேல்நாட்டுரக மணிக்கூட்டைக் கழற்றி சேட் அணியால் முன் கண்ணாடியைத் துடைத்தபடி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நேரத்தைப் பார்த்தான். நேரம் ஆறு முப்பதைத் தாண்டியிருந்தது.

எல்லோரும் போய் விட்டார்கள். ஒரேயொருவரைத் தவிர.

அவள் நித்தியா!

"என்ன நித்தியா நீ இன்னும் போகவில்லையா!"

"அப்பா வாறன் என்று சொன்னார்.... இன்னும் காணல்ல. அதுதான் பார்த்துக் கொண்டு நிற்கிறன். நீங்க இப்போ லயத்திற்குப் போறீங்கதானே! அப்பிடியென்றால் நானும் உங்களோட துணைக்கு வாறனே!"

அவளுடைய வார்த்தையில் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்து கிடந்தன.

அவள் அவனுடன் தனிமையில் கதைத்துக் கொண்டு போவதற்காகப் போடப்பட்ட நாடகம் என்பதனை உணராத பத்மநாதன்,

"அதுக்கென்ன, வா போகலாம்"

என்று கூற, இருவரும் நடக்க ஆரம்பித்தனர்.

அவளுக்கு அவனுடன் ஏதாவது கதைக்க வேண்டும் போல இருந்தது.

"இந்தச் சனங்களப் பற்றி என்ன நினைக்கிறீங்க

"நான் நினைக்கிறத்திற்கு என்ன இருக்கிறது நித்தியா. நல்ல சனங்கள்... பண்பானவர்கள்... நல்ல வழிகாட்டிகள் இருந்தால் நாளைக்கு இந்த நாட்டையே ஆளுவார்கள்."

"உண்மையில நீங்க ஒரு மனிதனல்ல. மனித உருவில மறைந்திருக்கிற ஞானி"

"என்ன நித்தியா அப்பிடிப் பெரிய வார்த்தையெல்லாம் பேசுகிறாய். நான் என்ன அப்பிடிப் பெரிசாகச் செய்து போட்டன்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நான் இவ்வளவு நாளும் நீங்க ஒரு கற்பனை வளம் பொருந்திய எழுத்தாளன் என்னு மட்டுந்தான் நினைத்திருந்தேன். ஆனா... இன்றைக்குத்தான் தெரிஞ்சுது நீங்க வெறும் சொல்லின் செல்வன் அல்ல, செயல் வீரன் என்று.”

அவள் கூறும் போதே பலவிதமான உணர்ச்சிகளின் போராட்டம் முகத்திலே தோன்றி மறைந்தன.

“நித்தியா நான் ஏட்டுப் படிப்பை மட்டுமல்ல. வாழ்க்கைப் படிப்பையும் சேர்த்துப்படித்திருக்கிறன்”

என்று கூறிக் கொண்டு இருவரும் ஒற்றையடிப் பாதைக்கு இறங்கிய போது அவர்களை முன்னுக்கு விட்டு, கரிய உருவம் ஒன்று திடீரென தேயிலைச் செடிகளுக்குள் இருந்து வெளியே வந்தது.

இருவரும் திரும்பிப் பார்த்தனர். அவர்களிலிருந்து கிட்டத்தட்ட ஐம்பது யார் தூரத்திற்கு அப்பால் கரிய உருவம் ஒன்று தொடர்ந்து வருவது இருளிலும் தெளிவாகத் தெரிந்தது.

அவ்வுருவத்தைக் கண்ட பின்புதான் அவர்களுக்கு அந்த ஆலமரச் சந்தியின் நினைப்பு வந்தது.

கொஞ்சம் நாட்களுக்கு முன்னர் சின்னப்பூத் தோட்டத்தில வேலை செய்த ராமாயி என்ற அழகான பெண்ணொன்று அந்த மரத்திலதான் தூக்குப் போட்டுச் செத்துப் போனாளாம். கொஞ்ச நாளைக்குப் பிறகுதான் அவளை முன்னர் தோட்டத்துரை கெடுத்துப் போட்டானாம். அந்த அவமானம் தாங்க முடியாமல் மானந்தான் பெரியதென்று நினைத்த பொண்ணு தூக்குப் போட்டுச் செத்துப் போனாளாம் என்று காதோடு காது வைத்துக் கொண்டார்களாம்.

அதற்குப் பின்னர் இரவு வேளைகளில் அவ் வழியால் வருபவர்களை பேய் பயமுறுத்துவதெனக் கேள்விப்பட்டிருக்கிறார்கள்.

பேயின் நினைப்பு ஒரு புறம். கள்ளனோ காவாலியோ என்ற நினைப்பு மறுபுறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் வேகமாக நடந்தனர். உருவமும் வேகமாக நடந்தது. மெதுவாக நடந்தனர். உருவமும் மெதுவாக நடந்தது. அவர்களால் ஒன்றுமே புரிந்து கொள்ள முடியவில்லை.

ஓட்டமும் நடையுமாக வீட்டையடைந்தனர். அப்போதுதான் அவர்களுக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

அந்த வேளையில் அவர்களைப் பின் தொடர்ந்து அந்த உருவமும் உள்ளே நுழைந்தது.

"என்ன தம்பி வந்து விட்டீர்களா? நானும் உங்களுக்குப் பின்னாலதான் வந்தேன். பிள்ளையும் கழுத்தில சங்கிலியைப் போட்டிற்றுப் போயிற்றாள். அதோட ராத்திரி நேரம்... சும்மா தெரியாதா கள்ளன்..... கிள்ளன்...... காவாலி.... கீவாலி.... என்று போட்டு.... அதோட நீங்களும் புது ஆள்தானே! வழி தவறிக் கிவறி போனாலும் என்று போட்டுத்தான் பின்னால வந்தனான். நீங்க வர்றீங்க என்று நெனைச்சி வராம விட்டுடலாம் என்று நெனைச்சேன். இவள் வேலம்மாள் விட்டால்தானே போங்க..... போங்க........ என்று நச்சரிச்சுக் கொண்டிருந்தாள். வந்துட்டேன்" என்றவாறு தலையில் கட்டியிருந்த தலைப்பாகையை அவுத்தபடி கையிலிருந்த கம்பை ஒரு மூலையில் போட்டார் முனுசாமி.

## 10

நீண்ட தூரத்திலிருந்து சேவலொன்று கூவும் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக கூவல் சத்தங்கள். அவர்களுடைய வாழ்வில் சேவல் கூவவில்லை. சேவல் கூவினால்-தானே விடிய முடியும்.

விடிய ஆரம்பித்தது. பறவைகள் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்தன.

சேவலின் ஓசையும் விடியலின் ஓசையும் கேட்டவுடன் எழுந்து வந்து ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு வெளியே பார்ப்பான். இரை தேடும் பறவைகளின் சுறுசுறுப்புப் போலவே பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடையைச் சுமந்து கொண்டும் ஆண்கள் மண்வெட்டிகளைச் சுமந்து கொண்டும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பது கண்டு ஏக்கப் பெருமூச்சு விடுவான். உள்ளம் ஓயாது புலம்பும்.

போர் முனையிலே நின்று போராடும் போராளிகள் போல... இந்த மனித இனம் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவைப் பெற்றுக் கொள்ளுவதற்காக அல்லும் பகலும் பறக்கப் பறக்க உழைத்து வயிறு கழுவ வேண்டியிருக்கிறதே!

...... இது நாளாந்தம் காணும் காட்சிகள்.

இன்று அவன் கோழி கூவ முன்னரே எழுந்து பாடசாலையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

இங்கு மாற்றலாகி வந்ததற்கு இன்றுதான் அதிகாலையில் வெளியே வந்திருக்கிறான். மலையக அன்னையின் மாண்புமிகு காட்சிகளை ரசித்துக் கொண்டே வந்தான்.

கரும் பச்சைச் செடிகளின் கக்கத்திலே இள நீலப் பனித்துளிகள் தேயிலைப் பூக்களாகப் பூத்துக் கிடந்தன.

எவ்வளவு இனிமையாக அந்தக் காட்சிகளை ரசித்துக் கொண்டு போனானோ அதே வேகத்தில் மனம் வேதனையடைந்தது.

இருளை விரசிக் கொண்டு வேகமாக பரவி வந்த ஒளிக் கதிர்கள் பனி பூத்த தேயிலைச் செடிகளின் மீது விழவே மலர்கள் நீராகி ஒவ்வொரு இலையின் நுனியினூடாகவும் சொட்டுச் சொட்டாக வடிந்து கொண்டிருந்தன.

ஒவ்வொரு இலையின் நுனியிலும் வடியும் ஒவ்வொரு நீர்த் துளிகளையும்....... துன்பச் சுமை தாங்க முடியாது மலையக மக்கள் வடிக்கும் கண்ணீரோ அல்லது அன்று மலையக மக்கள் சிந்திய கண்ணீர் இன்று நீராகி வருகின்றதோ என்று எண்ணத் தோன்றிற்று.

விழிகளை அகல விரித்துக் கொண்டு பார்த்தான். இமை கொட்டாமல் அந்தக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காட்சிகளில் லயித்துப் போயிருந்த பத்மநாதனுக்கு நேரம் போனதே தெரியவில்லை.

"சேர்..."

என்ற ஓசை கேட்டுத் திரும்பினான். அவனைச் சுற்றிப் பல இளைஞர்கள். அவர்களுடைய முறுக்கேறிய கரங்களில் கத்தி.... கோடரி....

அவன் வாய் திறக்கவில்லை.

அக் கூட்டத்திலிருந்த ஒருவன்,

"நாங்க கோழி கூவ முன்னமே வந்துட்டம். ஆனா, உங்கள இவ்வளவு நேரமும் காணயில்ல. அதுதான் காளிமுத்து அண்ணா பார்த்திற்று வரச் சொன்னாரு" என்றான்.

"அப்படியா வாங்க போவம்....."

மலைச் சரிவின் குறுக்குப்பாதை வழியாக இறங்கி வேகமாக நடந்தனர்.

யார் அந்தக் காளிமுத்து....?

ஓ.....! அன்று தூக்கமின்றிப் புரண்டு புரண்டு படுக்கும் பொழுது முனுசாமி கதை கதையாகச் சொன்னாரே.... அந்தக் காளிமுத்துதானா...!

அவனுடைய கதையைக் கேட்டதிலிருந்து அவன் மேலே ஒரு இரக்கமும் அன்பும் பிறந்தது.

நினைவுகள் சாசனமாவதில்லை. ஆனால், காவியமாவதுண்டு. அவன் அவனுடைய நெஞ்சிலே காவியமானான்.

காளிமுத்து கம்பர் மலைத் தோட்டத்தில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி. கறுத்து மெலிந்த தேகம். கடின உழைப்பும் அஞ்சாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட சரீரமும் கொண்டவன். இலட்சிய வேங்கை. வேலை செய்யும் சக தொழிலாளிகளுடன் பழகுவதிலும் தொழிலாளர்களுக்காக உழைப்பதலும் வெகு நாட்டம் கொண்டவன். பேசுவதில் சொல்லின் செல்வன். நீதி, நியாயம், நேர்மை எங்கு இருக்கிறதோ அங்கு நிற்பான். அந்த வகையிலேயே அனைவருடனும் நண்பனாகிக் கொண்டவன். இவன்.... மற்றவர்களுடன் பழகும் விதத்திலேயே இவனை எல்லோரும் தோழர் காளிமுத்து என்றே அழைத்தனர். கிட்டத்தட்ட அவன் ஒரு மலையக மக்களின் குட்டித் தலைவன் போலவே தோன்றினான்.

அவன் தொழிலாளர்களை முன்னெடுத்துச் செல்கிற விதம் சர்வாதிகார வர்க்கத்தின் அடி வயிற்றில் புளியைக் கரைத்தது. இதற்கு ஒரு முடிவைக் கட்டி விட வேண்டும். முளையிலே கிள்ளி எறிந்து விட வேண்டும். இல்லையேல் தங்களுக்கே ஆபத்து என்பதனை உணர்ந்தார்கள்.

பாம்பிற்குப் பல்லைப் பிடுங்கி விட்டால்...... அது கடிக்காதே! பெட்டிப் பாம்பாகச் சுருண்டு படுத்துவிடுமல்லவா!

அன்று.....

இலாப வேட்டைக்காரர்களின் சதியினால் அவனுடைய தந்தைக்கு இந்தியா போகுமாறு பணிப்பு வந்தது. பணிப்பைக் கண்ட காளிமுத்துவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வயது போன நிலையில் அங்கு தனித்தும் போய் அவரால் என்ன செய்ய முடியும்? அப்படிப் போனாலும் இந்தக் தள்ளாத வயதில் அங்கு ஒரு வேலையைத் தேடிக் கொள்ள முடியுமா? வேலை கிடைக்காமல் விட்டால் அவர் பட்டினி கிடந்து சாக வேண்டியது தானா! அதைவிட மலையில் கொழுந்து பறிக்கும் பொழுது சறுக்கி விழுந்து கால்களை இழந்து படுத்த படுக்கையாகவே கிடக்கும் வயது போன ஓய்வூதியம் இல்லாத தாய். இன்றா நாளையா என்று நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் அவள் திடீரெனக் கண்களை மூடிக் கொண்டால்... அவளுக்குக் கொள்ளி வைப்பது யார்? இந்த நிலையில் அவனால் என்ன செய்ய முடியும்? தந்தையின் இந்தியப் பயணத்தைத் தடுப்பதற்காக எல்லா இடமும் ஓடினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குக் கிடைத்த பலன்... இரு தினங்களில் கண்டிப்பாக இந்தியா சென்றே ஆக வேண்டும்!

அந்த அதிர்ச்சியைக் கேட்ட காளிமுத்துவினுடைய அப்பாவின் ஓடிய இரத்தங்கள் உறைந்து விட்டன.

அவர்தான் இந்த மண்ணில் வைத்திருக்கும் பற்றுத்தான் எத்தனை.. எத்தனை..... இந்த மண்ணிலேயே வாழ்ந்து இந்த மண்ணிலேயே மடிந்து விட்டார்.

அம்மா இறந்து விட்டால் அம்மாவுக்கு கொள்ளி வைக்க தந்தையின் பயணத்தை நிறுத்தப் பாடுபட்டான். ஆனால் இன்று அவருக்கே அவன் கொள்ளிக்குடம் சுமக்கும்படி வந்து விட்டது.

காளிமுத்து 'ஓ' வென்று அழுதான். அவனுடைய இதயத்தைப் பிழிந்து கண்ணீர்த் துளிகள் சில தெறித்து வீழ்ந்தன.

மரணம் என்பது தண்டனையல்ல - இயற்கையின் நியதி. ஆனால் இது அநியாயச்சாவு. அந்தச் சாவுக்குரிய சர்வாதிகளை கவ்வாத்து வெட்டும் கூரிய கத்தியை எடுத்து அவர்களின் உடலைக் கண்ட துண்டமாக வெட்டி இந்தத் தேயிலைச் செடிகளுக்கு உரமாகப் போட்டால்தான் அவனுடைய ஆத்திரம் தீரும். அவனுடைய இளம் இரத்தம் துடிக்கிறது.

ஆனால்........ மரணத்தின் எல்லையிலே படுத்த படுக்கையாகக் கிடக்கும் அன்னையின் நிலையினை நினைத்து விட்டு விட்டான்.

விதி விட்டால்தானே!

மனித வாழ்க்கை என்பது போராட்டம் நிறைந்ததாயிற்றே! நினைவு தெரிந்த நாள் முதல் நினைவு மறையும் கடைசி நாள் வரைக்கும் போராடியே ஆக வேண்டும்.

யாருக்காக வாழ வேண்டும் என்று நினைத்தானோ அந்தத் தாயே கணவனின் பிரிவுத் துயரைத் தாங்க முடியாமல் உடன் கட்டையேறி நீண்ட நேரம் ஆகிவிட்டதென்பதனை அவன் அறியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே நாளில்..... ஒரே நேரத்தில்....... நிகழ்ந்த இரண்டு மரணங்களும் மலைகளையே உசிப்பி விட்டன.

அந்தப் பரிதாப முடிவு மலையக மக்களின் விடிவையே மாற்றி விட்டது. அதன் பின்பு யாருமே சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. ஒதுங்கிக் கொண்டார்கள்.... இதே பரிதாப முடிவு தங்களுக்கும் வரும் என அஞ்சினார்கள்.

சிந்தனை வயப்பட்டு நடந்து கொண்டிருந்தவரை அழைத்துப் போன இளைஞர்களில் ஒருவன் கேட்டான்.

"சேர், மலையக மக்களுக்கு நிம்மதி கிடைக்குமா?"

"தம்பி, இந்த மண்ணில வாழ்கின்ற எல்லோரும் நிம்மதியாக வாழவில்லை. நிம்மதி கிடைக்கும் என்ற நம்பிக்கையிலதான் அனேகமானோர் சீவிக்கிறாங்க. அந்த அற்ப ஆசையோடேயே செத்தும் போயிடுறாங்க. அந்த நிலைதான் மலையக மக்களுக்கும். இந்த நிலைமையை மாற்றுவது உங்களைப் போல இளைஞர்களினுடைய கைகளில்தான் தங்கியிருக்குது"

"என்ன சேர் செய்ய வேணும்...!"

"போராட வேணும்...."

"போராட வேணுமா சேர்....!"

"ஓம் தம்பி.... இந்த மலையக மக்களைப் பீடித்திருக்கிற அடிமை வாழ்வு.... வறுமை வாழ்வு..... குடிவெறி வாழ்வு.... ஆகியவற்றிற்கு எதிராக போராடினால் தானாக நிம்மதி கிடைக்கும்."

"அதற்கு இந்த முதலாளிமார் விட மாட்டாங்களே!"

"இனிப்பான பழத்திற்கு கசப்பான தோல் இருந்தே ஆகும். அந்த தோலைச் சீவி எறிந்தால்தான் இனிப்பான பழத்தைச் சுவைக்க முடியும். அதே போலத்தான்........"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியென்றால் சேர், நியாயத்திற்காகப் போராடினால் நிம்மதி கிடைக்கும் என்று சொல்லுறீங்களா....!"

"நியாயத்திற்காகப் போராடினால் வெற்றி நிச்சயம். என்றைக்கும் நீதிதான் வெல்லும். நீதிக்காக நடைபெற்ற தா்ம யுத்தம் என்ற மகாபாரதத்தில கூட பஞ்சபாண்டவா்கள் வெல்லவில்லையா! ஏன் இந்தியாவிலேயும் காலங் காலமாக நடாத்திய போராட்டங்களினால்தான் கீழ்ச்சாதிகள் என்றழைக்கப்பட்டவா்கள் தாழ்த்தப்பட்டவா்கள் என்று மாற்றப்பட்டு பின் ஹரிஜனங்கள் என்று மாற்றப்பட்டு இன்று சிறுபான்மையினா் என்று வாழ்கிறாா்கள்."

"அங்க நிலைமை வேறு சேர், இங்க வேறு. அங்க ஜனநாயகத்த மதிக்கி றாங்க இங்க நாங்க கதைக்கப் போனால்.... எங்கட உயிரும் மிஞ்சாது."

"என்றைக்கு இந்தப் பூமியில் பிறந்தோமோ அன்றைக்கே மரணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது. வானத்திற்குக் கீழே வீட்டைக் கட்டிக் கொண்டு மரணத்தைக் கண்டு பயந்து ஓடிவிட முடியுமா? மக்களின் விடுதலைக்காக மக்களின் பாவங்களைச் சுமந்த இயேசுக் கிறிஸ்து நாதரையே பட்டப் பகலில் நெட்டை வீதிகளில் சிலுவையைச் சுமக்க வைத்து இழுத்து வந்து சிலுவையில் அறைந்து கொல்லவில்லையா? அகிம்சைப் போராட்டத்தினால் உண்ணாமல் உறங்காமல் இருந்து போராடி இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த காந்தித் தாத்தாவை இந்திய மக்களே சுட்டுக் கொல்லவில்லையா? அகிம்சைப் போராட்டத்தினால் சுதந்திரம் கண்ட இந்தியாவே தமிழிழவிடுதலைக்காக அகிம்சைப் போராட்டம் நடாத்திய திலீபனை , அன்னை பூபதியைச் சாகடிக்கவில்லையா? அவா்கள் எல்லாம் உயிருக்குப் பயந்து அஞ்சி ஒதுங்கியிருந்தால் அந்த நாடுகள் சுதந்திரம் பெற்று அந்த மக்கள் இன்று நிம்மதியாக வாழ முடியுமா?"

பத்மநாதனுடைய ஒவ்வொரு பேச்சுக்களும் அடங்கிப் போய்க் கிடந்த இளைஞா்களின் உணா்ச்சி நரம்புகளைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது அவர்கள் வெறும் ஜட இளைஞர்களாக இல்லாமல் சமுதாய விழிப்புள்ள இளைஙர்களாகப் பாடசாலையை அடைந்தனர்.

## 11

பத்மநாதனும் இளைஞர்களும் களத்தில் இறங்கி விட்டார்கள். ஒவ்வொரு இளைஞனும் இளைஞியும் விடுதலையே கிடைத்து விட்டது போன்ற உற்சாகத்துடன் செயற்பட்டனர். எல்லோரையும் விட காளிமுத்துவுக்கே மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

காளிமுத்துவின் தந்தையும் தாயும் இறந்த பின்பு மக்கள் பயந்து - நடுங்கி- அடங்கிப் போய் இருந்ததனால் காளிமுத்துவின் உணர்வு நரம்புகளும் உறங்கிப் போய்க் கிடந்தன. இன்று பத்மநாதன் கொடுத்த தெம்பு மீண்டும் அவனுடைய உணர்வு நரம்புகளைத் தட்டி எழுப்பி விட்டது.

அடிபட்ட வேங்கையின் ரணம் ஆறுவது கிடையாதே! அதற்கொப்ப அவனும் தீவிரமாகச் செயல்பட்டான்.

பத்மநாதனின் திட்டப்படி காட்டுக்குப் போய் கம்புகள் வெட்டி வந்தார்கள்... ஸ்டோரில் இருந்து பழைய பீப்பாத் தகரங்களைக் கொண்டு வந்தார்கள்..... சிங்கள நாட்டுக்குப் போய் கிடுகுகள் கொண்டு வந்தார்கள்.... தட்டப்புல் கொண்டு வந்தார்கள்.... ஆட்டுப் பட்டிகள் மாட்டுப் பட்டிகளிலிருந்து தகரங்களைக் கொண்டு வந்தார்கள்.... சாக்குகள் கொண்டு வந்தார்கள்.

இப்பொழுது பெரியதொரு பாடசாலையே கட்டி முடித்து விட்டார்கள்.

அத்துடன் அவர்கள் நின்று விடவில்லை. பள்ளிக்கூடம் கட்டிவிட்டால் படிப்பு தானாக வந்து விடுமா.......?

எந்தவொரு படிக்கிற வயதுச் சிறுவர்களையும் வீட்டில் சும்மா இருக்க விடவில்லை எல்லாப் பெற்றோர்களுக்கும் புத்திமதி கூறி அழைத்து வந்து படிக்க வைத்தனர். விரல் விட்டு எண்ணக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியளவில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கை இன்று பாடசாலையை நிறைத்துக் கொண்டு காணப்பட்டது. ஒவ்வொரு பெற்றோரும் தங்களுடைய பிள்ளைகள் என்ஜினியர்களாகவும் டாக்டர்களாகவும் வருவது போல எண்ணி மனம் மகிழ்ந்தார்கள்.

தாங்கள் பட்ட கஷ்ட துன்பங்களும் துயரங்களும் இனி என் பிள்ளை படாது....... என்னைப் போல என் பிள்ளை மாடாய் உழைத்து ஓடாய்த் தேயாது....... ஒவ்வொருவரும் கனவு கண்டார்கள்.

பத்மநாதனும் இரவு பகல் பாராது மாணவர்களுக்குக் கல்வி போதிப்பதிலேயே ஈடுபட்டான். மலையகத்தில் படித்திருந்த இளைஞர்களையும் யுவதிகளையும் தொண்டர் ஆசிரியர்களாகவும் பகுதி நேர ஆசிரியர்களாகவும் படிப்பிக்க வைத்தான்.

இளைஞர்களை நல்வழியில் வழி நடத்திச் செல்வதற்காக வாசிகசாலை ஒன்றைக் கட்டுவித்து, அவனுடைய சொந்தப் பணத்திலேயே பத்திரிகைகள் வாங்கிப் போட்டதுடன், அவனுக்குத் தெரிந்த நண்பர்களுக்கு கடிதம் எழுதி நல்ல அறிவை வளர்க்கும் நூல்கள் வாங்கிப் போட்டான்.

மாலை வேளைகளிலும் ஓய்வு நேரங்களிலும் இளைஞர்களும் இளைஞிகளும் அங்கே ஒன்று கூடினர். இதனால் அவர்களிடையே ஒற்றுமையுணர்வும் புரிந்துணர்வும் படர்ந்தன.

இப்படியான பயனுள்ள பொழுது போக்குகளினால் மலையக மக்களைப் பீடித்திருந்த குடிவெறிப் பழக்கம், போதை வஸ்துப் பழக்கம் போன்றன மருவிக் கொண்டு வந்தன.

ஓய்வு நேரங்களில் பத்மநாதனும் சக இளைஞர்களின் உதவியுடன் வீடு வீடாகச் சென்று மது அருந்துவதனால் ஏற்படும் தீமைகளை எடுத்துக் கூறியும் வறுமைக்குக் காரணமாக இருக்கும் சனப்பெருக்கத்தையும் சுட்டிக் காட்டி குடும்பக் கட்டுப்பாடு முறைகளையும் விளங்கப்படுத்தினான்.

இதன் பலன்.......... காலப்போக்கில் மலையகத்தில் புதியதொரு சமூகம் உருவாகியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

பொழுது புலர்ந்தது. ஆனால்.... பனிமூட்டம் மலையெங்கும் படர்ந்து இருந்ததனால் பொழுதை இருள் கவ்வியிருந்தது. பனி மலையில் பட்டு வீசிய குளிர் காற்று யன்னலினூடே வந்து அவனுடைய மேனியைத் தடவிச் செல்லவே, தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட பத்மநாதன் மெதுவாக எழுந்து சென்று அந்த யன்னல் கம்பிகளைப் பிடித்த வண்ணம் வெளியே பார்வையைச் செலுத்தினான்.

அருகே அமைந்திருந்த பிள்ளைகள் பராமரிப்பு நிலையம் குழந்தைகளின் அழுகையொலியின்றி வெறிச்சோடிப் போய்க் கிடந்தது. மலை மீது முண்டியடித்துக் கொண்டு கொட்டும் பனியுடன் போட்டி போட்டு தோளிலே கூடை சுமந்து கொழுந்து பறிக்கும் பெண்கள் கூட்டத்தைக் காண முடியவில்லை. அதற்குப் பதிலாக அங்கு பெரும் அமைதி நிலவிக் கொண்டிருந்தது.

..... என்ன காரணமாக இருக்கும்....! என்றுமே இப்படி இருந்ததில்லையே! ஒருவேளை...... இனக் கலவரம் வந்து விட்டதோ.....! அதனால் மக்கள் ஓடி ஒளிந்து விட்டார்களோ....! அப்பிடி இருக்காது,...... அப்படியானால்..... மலைகளில் ஒட்டிக் கிடக்கும் ஏழைகளின் லயங்கள் எரியும் சுவாலைகளின் புகை வானை நிறைத்து நிற்குமே! மரண வேதனைகளின் ஓலங்கள் காதைப் பிளக்குமே....!

உள்ளே திரும்பினான். சுவரிலே தொங்கிய கலண்டர் மே 1 ஐக் காட்டிச் சிரித்தது.

ஓ! வருடத்தின் முன்னூற்றி அறுபத்தி ஐந்தே கால் நாளில் முன்னூற்றி அறுபத்தி நான்கே கால் நாள் வேலை செய்து முடித்தவர்களுக்குக் கிடைக்கும் ஒரேயொரு ஓய்வு நாளான தொழிலாளர் தினம் இன்று! அதனால் தானோ என்னவோ இந்தப் பேரமைதி.

அவர்களைப் பற்றி நினைத்ததுமே மனம் பாறையாகக் கனத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பிலிருந்து மாற்றலாகி வந்து இரண்டு வருட காலத்திலே இந்த மலையகத்திலே அவன் கண்டது என்ன....! கண்ணீரிலே வாழும் சமூகத்தின் சோகச் சுவடுகள்.

"டக்.... டக்...."

மெல்லியதாகக் கதவில் யாரோ தட்டும் ஓசை கேட்டது.

"யாரது"

என்று குரல் கொடுத்த வண்ணம் கதவைத் திறந்தான்.

அங்கே "நான் தான்" என்றவாறு நின்று கொண்டிருந்தான் காளிமுத்து. அவனுடன் இன்னும் சில அவனோடு ஒத்த வயதுடைய இளைஞர்கள்.

"ஆ...... காளிமுத்து! வா... வா.... வந்து இப்படி உக்காரு.... என்ன ரெண்டு மூண்டு நாளாக ஆளையே காணோம்."

"ரெண்ணு மூணு நாளா ரொம்ப வேல சார். அதனால இங்கிட்டு வர முடியல்ல. அந்த வேலையாத்தான் ஒங்கள ஒரு தரம் பார்த்துக்கிட்டுப் போகலாமெண்ணு வந்தோம்" என்றான் கதிரையில் இருந்தவாறே.

"என்ன... அப்படி விசேஷம்....."

"இண்ணைக்கு மே மாசம் ஒண்ணாந் தேதி, தொழிலாளர் தெனம். அந்தத் தொழிலாளர் தெனத்த முன்னிட்டு ஊர்வலம் ஒண்ணையும் பொதுக் கூட்டம் ஒண்ணையும் வைச்சிக்கலாம் எண்ணு இருக்கிறம்"

"நல்லது, இதனால தொழிலாளர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதுடன் தொழிலாளர்களுடைய கையையும் வலுப்படுத்தலாம்"

"அதுதான்......."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுக்கு நான் என்ன செய்ய வேணும்....."

"நீங்க ஒண்ணும் பண்ணத் தேவையில்ல. நீங்க வந்து ஒரு பேச்சுப் பேசுனிங்களென்றால் போதும்........."

அவருடைய பதிலுக்காகக் காத்திருந்தான்.

"இவ்வளவுதானா! சரி சரி தாராளமாக வந்து பேசுறன்.... அது சரி கூட்டத்த எத்தின மணிக்கு வச்சிருக்கிறீங்க"

"அந்திக்கு ஒரு ஆறு மணி போல......... அப்ப சரி சேர் நாங்க போயிற்று வர்றம். இன்னும் செய்ய வேண்டிய வேலைகள் ரொம்பக் கிடக்குது"

விடைபெற்றுக் கொண்டு எழுந்தார்கள்.

மாலைச் சூரியன் மலை இடுக்குகளுக்குள் இறங்கிக் கொண்டது. அந்த அஸ்தமனத்தில் மலைத் தொடரில் இருள் உதயமாகிக் கொண்டிருந்தது.

கம்பர் மலைத் தோட்டத்திலிருந்து ஆரம்பமான தொழிலாளர்களின் ஊர்வலம் வீதி வலம் வந்து கொண்டிருந்தது. வயோதிபர் அணி....... இளைஞர் அணி....... இளைஞிகள் அணி....... மாணவர் அணி...... எனக் கண் கொள்ளாக் காட்சியாக நிரை நிரையாக வந்து அசோகாத் திடலை அடைந்தது. அவர்களுடைய கரங்களிலே சில சுலோகங்களும் பதாதைகளும் தொங்கிக் கொண்டிருந்தன.

ஊர்வலத்தைத் தொடர்ந்து இறுதி நிகழ்ச்சியான கூட்டம் ஆரம்பமானது.

வட்டமாகக் கூத்துக் களரி போன்று அமைக்கப்பட்ட மேடை மேலே வானத்தைத் திரையிட்டுக் கொண்டு நாலைந்து பலவர்ணச் சேலைகள். மேடையின் மூலையிலே பேசுபவர்களின் முகத்தை எடுத்துக் காட்ட ஒரு 'பெட்டோல்மக்ஸ்' ஒளியை அள்ளி வீசியபடி தொங்கிக் கொண்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிக்குக் காளிமுத்தே தலைமை தாங்கினான். நிகழ்ச்சிகள் ஒழுங்கின்படி ஓடிக்கொண்டிருந்தன.

இறுதியில் காளிமுத்து,

"தொழிலாளர் தின எழுச்சி நிகழ்வின் இறுதி நிகழ்வாக மட்டக்களப்பு மண் பெற்றெடுத்த மைந்தன் திரு. பத்மநாதன் ஆசிரியர் அவர்கள் பேசுவார்கள்" என்றான்.

சொன்னதுதான் தாமதம் சில நிமிடங்கள் செவிப்பறையே வெடித்து விடும்படி கரகோசம் எழுந்தது. இடையிடையே விசிலடிகள்.

அவன் இந்த மலையக மண்ணில் தேர்தலில் குதித்தால் எம்.ஜி.ஆரைப் போன்று முதலமைச்சராகி விடுவான். அவ்வளவு வரவேற்பு. ஆனால், மலையக மக்களுக்கு வாக்குரிமை இல்லையே.........!

பேசுவதற்காக மேடையேறினான். பேச்சு ஆரம்பமானது.

"இங்கு கூடியிருக்கும் தொழிலாளர்களே! தாய்மார்களே! தந்தைமார்களே! தோழர்களே! உடன் பிறவாச் சகோதரர்களே! எல்லோருக்கும் எனது மாலை வந்தனங்கள்.

வந்தனங்கள் என்றவுடன்தான் ஞாபகம் வருகிறது நாம் வந்தவர்கள். இல்லை..... வந்தான் வரத்தான்கள். ஏன் வந்தோம்.....! எதற்காக வந்தோம்....! இது ஒரு கதையுமல்ல..... காவியமுமல்ல... வரலாறு காணாத சோகச் சித்திரம்.

தென்னிந்தியாவில் இருந்த எம்மை 1796ம் ஆண்டு இலங்கைக்கு வாருங்கள், நாங்கள் பருப்புத் தருகிறோம்.... மாசி தருகிறோம்..... கறுப்புக் கம்பளி தருகின்றோம்..... நல்ல சம்பளம் தருகின்றோம்..... என்று ஆசை வார்த்தைகள் கூறி, ஏமாற்றிக் கொண்டு வரப்பட்டோம். அந்த அழைப்பை ஏற்று... ஆசை வார்த்தைகளை நம்பி... இலங்கை மண்ணில் காலடி பதித்தோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை தொடங்கும் போதே ஏமாற்றம். ஆடுகள், மாடுகள் போல கப்பலில் அடைத்து தலைமன்னார் துறைமுகத்திலே கொண்டு வந்து இறக்கியவர்கள் கால் நடையாகக் கண்டிச் சீமைக்குப் போகுமாறு பணித்தனர்..... நாங்கள் செய்வதறியாது நின்றோம்... நாயை விரட்டுவது போல விரட்டினார்கள்...... வேறு வழியின்றிக் காட்டுப் பாதையால் நடந்தோம்.... வெயில் காலைச் சுட்டெரித்தது..... முட்புதர்கள் காலைப் பதம் பார்த்தன.... கொடிய மிருகங்களின் மத்தியிலே நடுங்கி நடுங்கி நடந்தோம்...... இடையினிலே எம்மில் சிலர் பாம்புகளால் தீண்டப்பட்டனர். அவர்கள் மாண்டனர்.... சிலர் மிருகங்களால் தாக்கப்பட்டார்கள், அவர்கள் இரையானார்கள்.... ஏனையோர் கண்டிச் சீமையை அடைந்தோம்.

அங்கே எமது சமூகம் அடிமைச் சமூகமாக மாறியது. உண்ண உணவின்றி..... உடுக்க உடையின்றி.... குடிக்க நீரின்றி..... அல்லலபட்டு எலும்பும் தோலுமாய் உருமாறிப் போக.... வெள்ளைக்காரனின் அடிமையின் கீழ், காலடிகள் படாத காடுகள் - அடர்ந்த முட்புதர்கள் நிறைந்த மலை முகடெல்லாம் எமது கைகளால் வளமானது. ஆனால்.... எமது வாழ்வு கல்வியில் ஏடறியா இலக்கியமாய்.... உணவு உண்டது இல்லை கண்டது பட்டினி.... என்று துன்பம் மிகுந்த அடிமை வாழ்க்கையாக மாறிக் கொண்டிருந்தது.

கால் அடிகள் படாத மண்ணில் வெள்ளைக்காரனின் காலால் அடிகள் பட்டு..... நெற்றி வியர்வை நிலத்தில் பசளையாக....... மாடுகள் போல கடுமையாக உழைத்த துன்பம் மிகுந்த எங்கள் வாழ்க்கையின் வரலாற்றுச் சுவடுகள் ஒவ்வொன்றும் நீண்டகாலமாக மறைக்கப்பட்டும் திரிக்கப்பட்டுமே வந்தன.

1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ந் திகதி நாடு சுதந்திரம் பெற்றது. அதன் பின்பாவது எமது வாழ்விலும் சுதந்திரம் கிடைக்கும் என ஏங்கிக் கொண்டிருந்தோம். ஆனால் எம்க்குக் கிடைத்ததோ நன்றியுணர்வில்லாமல் அரசியல் அனாதைகளாக்கி நாடற்றவர்கள் என்று குத்திய முத்திரையேயன்றி வேறொன்றுமில்லை. அந்த வேளையில் எந்த அரசியல் கொம்பனும் ஜனநாயக மேதாவியும் எமது அரசியல் உரிமை குறித்து ஏறெடுத்துப் பார்க்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குக் காலம் இலாப வேட்டைக்காரர்களாலும் இனவாதத்தின் தலையீட்டாலும் நாயிலும் கீழ்த்தரமான கேவலமான வாழ்வுடன் போராடிக் கொண்டிருக்கும் ஏமாற்றுக்காரர்களின் கால் வயிற்றுக்குப் பத்தாத நாட் கூலியைப் பெற்றுக் கொள்ளும் இந்தக் கூட்டத்தை - ஏமாளிகளை எது செய்தாலும் தகும் என்ற எண்ணத்தால் அடித்து ஒடுக்கிய இரத்தங்களே பூமியைச் சிவக்க வைத்துக் கொண்டு இருக்கின்றன. அதனால்தானோ என்னவோ பச்சை நிறத் தேயிலையிலிருந்து சிவப்பு நிறச்சாறு வடிகிறது!

துர்அதிஸ்ட வசமாக நாம் அடிமை மனப்பான்மையில் ஊறித் திளைத்து விட்டோம். எதற்கும் அச்சம்... எதனிலும் தயக்கம்...... கூனிக் குறுகி வாழ்தலே நம் இன்றைய நிலையாகி விட்டது. எத்தனை நாளைக்குத்தான் இந்த அடிமை வாழ்வு!

தூங்கிக் கிடந்தது போதும்.... துயரப் பெருமூச்சு விட்டது போதும்.... அடிமை உணர்வில் ஆழ்ந்து கிடந்தது போதும்.... ஒன்றுபடுவோம்! உரிமைக்கு உழைப்போம்! இலாப வேட்டைக்காரர்களின் சர்வாதிகாரத்திற்கு சாவு மணியடிப்போம்! அநீதிக்கு அடி பணிந்து அது பற்றி அக்கறைப்படாமல் இருக்கக் கூடாது! அப்படியிருக்க நாம் என்ன உயிரற்ற சடலங்களா! குட்டக் குட்ட குனியிறவனும் மடையன் குட்டுறவனும் மடையன்..."

பேச்சு முடிவதற்கிடையில் எங்கோ ஒரு மூலையில் இருந்து வந்த கல்லொன்று மேடையிலே வந்து அவனெதிரே வீழ்ந்தது.

கல்லெறியைக் கண்ட பத்மநாதன் அஞ்சவில்லை. அவனுடைய உடல் படபடக்க.... அங்கங்கள் பதறின...... இதயம் துடித்தது....... அந்த இதயத் துடிப்பு அடிமையெனும் மரணத்திற்கு முரசு கொட்டுவது போல இருந்தது.

அவன் தொடர்ந்தான்.

"கல்லெறிபவர்கள், ஒட்டி நின்று அடிப்பவர்கள் கோழைகள்...... கையாலாகாதவர்கள்...... அந்தக் கல்லெறிக்கு இந்த அஞ்சா நெஞ்சங்கள் அசையாது. கல்லெறிச் சலசலப்பிற்கு அஞ்சி ஓடுவதற்கு நாங்கள் என்ன குள்ள நரிக் கூட்டமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த கல்லெறி 'பளீர்' என்றது. தொங்கிக் கொண்டிருந்த பெற்றோமக்ஸின் கண்ணாடிகள் நொறுங்கின. எங்கும் இருள் சூழ்ந்தது.

இருள் இருப்பதனால்தானே ஒளிக்குப் பெருமையாக இருக்கிறது. அவர்களுடைய வாழ்வும் இருண்டு போய்த்தானே கிடக்கிறது... அந்த இருள் கலைந்து எப்பொழுது அவர்கள் ஒளியைக் காணப் போகிறார்கள்.

மீண்டும் அடுத்த கல்லெறி...

"ஐயோ... அம்மா...."

மேடையிலிருந்து வந்த ஓசை மலையெங்கும் முட்டி மோதி எதிரொலித்தது.

எங்கும் ஒரே கூச்சல்........ சனங்களின் அல்லோல கல்லோலம்........... இரைச்சல்கள்...........

கொஞ்ச நேரம் மலையகமே போர்க்களமாக மாறிவிட்டது. அவ்வளவு பேரோசை. எல்லாம் அரை மணி நேரந்தான். விளையாட்டுத் திடலாக இருந்த இடம் சுடுகாடாக மாறிவிட்டது.

1973ல் நடந்த யாழ்ப்பாண தமிழாராய்ச்சி மகாநாட்டுச் சம்பவங்களை நினைவுபடுத்தி எல்லாம் ஓய்ந்து விட்டன.

## 13

அந்தச் செய்தி கேட்டதும் வேலம்மா சிலையாய்ச் சமைந்து போனாள். சுவர் உடைந்தால் கட்டிவிடலாம். இங்கே அத்திவாரமே உடைந்து போயிற்றே! 'ஓ'வென்று அழுதாள்: நெருப்பிலே விழுந்த புழு மாதிரித் துடித்தாள்.

அவன் முகட்டை வெறித்தபடி மல்லாக்கப் படுத்திருந்தான். நேற்றைய இரவிலிருந்து இப்பொழுது பொழுது புலர்ந்தது வரைக்கும் அவனை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நித்தியா மடியிலேயே வைத்திருந்தாள். வேலம்மா அவனுடைய காலை மண்டியிட்டவாறு அமர்ந்திருந்தாள்.

அவன் சலனமில்லாமல் கிடந்தான். தலையில் போடப்பட்டிருந்த கட்டையும் மீறி இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. நித்தியாவின் பார்வை முழுவதும் அவனிலேயே லயித்திருந்தது. அவன் எப்பொழுது எழும்புவான்..... பேசுவான்.... என்று ஏங்கிக் காத்திருந்தாள். அடிக்கொரு தடவை அவனுடைய கரத்தைப் பிடித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

துயரத்தின் சுமையைத் தாங்க முடியாது அவளுடைய இதயத்திலிருந்து செங்குருதி கண்ணீராகி, புல்லாங்குழல் வித்துவான் தாளம் போடுவதை போல அடிக்கொரு தடவை மேலும் கீழும் அசைந்து கொண்டிருந்த அவனுடைய மார்பில் விழுந்து கொண்டிருந்தது.

மார்பு துடிக்கிறது.... உயிர் இன்னும் பிரிந்து விடவில்லை...... தக்கி நின்றது.

இரவு, அடிபட்டு மேடையிலே சுய உணர்வற்று மயக்கமாக வீழ்ந்து கிடந்த அவனை காளிமுத்து இருளோடு இருளாகத் தூக்கிக் கொண்டு வந்து சேர்த்திருந்தான். இன்னும் மயக்கம் தெளியவில்லை.

காளிமுத்துவும் சக இளைஞர்களும் லயத்தைக் குழுமியிருந்தனர். அவர்களுடைய நெஞ்சங்கள் உள்ளுக்குள்ளேயே குமுறின. காளிமுத்து குட்டி போட்ட பூனை போல நிலத்தைப் பல தடவைகள் அளந்து கொண்டிருந்தான்.

நீண்ட நேரத்தின் பின்பு அவனுடைய உடல் மெதுவாக அசைந்தது. மெள்ளக் கண் விழித்தான்.

கண்களில் ஒரே பரவசப்பட்ட பரபரப்பு. ஒரே கணந்தான்! மீண்டும் கண்களை மூடிக் கொண்டான்.

"நான் எங்க இருக்கன்....... ஆ........ எப்படி இங்கு வந்தன்......."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய வாய் புலம்பியது. ஆனால், சத்தம் வெளியே வரவில்லை. புரள நினைத்தான்.... முடியவில்லை. தலை ஒரே விண் விண்ணென்றிருந்தது. உடல் அடித்துப் போட்டது போல...........

அமைதியாகக் கிடந்தான். படிப்படியாக நடந்த சம்பவங்கள் எல்லாம் நினைவுக்கு வந்தன.

கண் விழித்தான்.......... அவன் நித்தியாவின் மடியிலே கிடந்தான். கால் மாட்டிலே வேலம்மாள் இருந்தாள்.

அவன் அவளுடைய முகத்தைக் கூர்ந்து பார்த்தான். அழுதழுது வீங்கிய முகத்திலே அப்பிக் கிடந்த சோகம் அவனுடைய கண் மணிக்குள் புலனாகியது.

அவளை அடிக்கடி பார்க்க வேண்டுமென்ற ஆசை நெஞ்சை வருடியது. அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

"என்னங்க அப்பிடிப் பார்க்கிறீங்க........"

அவளுடைய கண்களில் நீர் கொப்பளித்தது.

சிரித்தான்.... இருமினான்... கண்களில் நீர் கசிந்தது.

"என்ன நித்தியா, நான் செத்துப் போவனென்று நினைச்சியா.........!"

"இல்லீங்க....... அப்பிடியொன்றும் சொல்லாதீங்க........"

'ஓ' வென்றே அழுது விட்டாள்.

"நித்தியா... நான் சாகமாட்டன்.... உங்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுக்கும் வரைக்கும் சாகமாட்டன்..."

"இல்லீங்க.... மாட மாளிகையில வாழ வேண்டிய நீங்க..... இங்க வந்து... எங்களுடைய சமூகத்தின் விடிவுக்காக இந்தக் குச்சுக் குடிலில வாழுறீங்களே....! அதை நினைக்கத்தான் வேதனையாக இருக்குதுங்க......."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு அன்பான மக்களிட்டக் கிடைக்கிற ஆத்ம சுகம்.... மாடியில கிடைக்காது........"

"உண்மையிலேயே நீங்க ஒரு மனிதனல்ல...... தெய்வம்........"

அவனுடைய காலைத் தொட்டுக் கும்பிட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"என்ன நித்தியா இதெல்லாம்.... மனுசன மனுசன் கும்பிடலாமா......"

"கல்லையே தெய்வம் எண்ணு நெனைச்சுத்தானே மனுசன் கும்பிடுறான். அப்பிடியெண்ணா....... ஏன் மனிசனத் தெய்வமாக கும்பிட முடியாது"

இதைக் கூறும் பொழுதே அவளுடைய கண்களில் நீர்!

கண்களில் புரண்ட கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

பத்மநாதனின் குரல் கேட்டதும் சீண்டி விட்ட நாகம் போல அறையினுள்ளே நுழைந்தான் காளிமுத்து. அவனைத் தொடர்ந்து இளைஞர்கள்....

காளிமுத்துவைப் பார்க்கப் பயமாக இருந்தது. அவன் காளிமுத்துவாக இல்லை, காளியாகவே மாறியிருந்தான். அவ்வளவு அகோரம். கோபக் கனலாய் இரத்தமாகச் சிவந்து கிடந்தது கண்கள். கவ்வாத்து வெட்டி வெட்டி முறுக்கேறிய கரத்தில் கவ்வாத்து வெட்டும் கூரிய கத்தி.

காளிமுத்துவைக் கண்டதும் சிரிக்க முயன்றான். முடியவில்லை...... நன்றியுணர்வு நெஞ்சை அடைத்தது...... தடுமாறிப் போனான்.

"இந்த அநியாயத்தைச் செய்தவன் யாரென்று செல்லுங்க....... இப்பவே போய்.... அவனைப் பிடித்து.... இந்தக் கவ்வாத்து வெட்டும் கத்தியால துண்டு துண்டாக வெட்டி..... இந்தத் தேயிலைச் செடிக்கு உரமாகப் போட்டால்தான் என் ஆத்திரம் தீரும்...... இப்பவே சொல்லுங்க........


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் அவன்.......? ஒங்கள இந்த நெலைக்கு ஆளாக்கினவன் யார்..........?"

இள இரத்தத் துடிப்பினால் பல்லை நெறுமிக் கொண்டு கேட்டான் காளிமுத்து.

காளிமுத்துவின் ஆத்திரம் பத்மநாதனுக்குப் புரிந்தது. சில நிமிடங்கள் அவனையே பார்த்துக் கொண்டு மௌமாகக் கிடந்தான்.

பத்மநாதனுக்கு இந்த அநியாயத்தைச் செய்தது யாரென்பது தெரியும். இப்போது இந்த இளைஞர்கள் இருக்கும் ஆத்திரத்தில் அவன் ஒரு வார்த்தை சொல்லி விட்டால் போதும்....... இந்த மலை மண்ணே இரத்த ஆறாய் ஓடும். அவன் அதை விரும்பவில்லை.

ஒரு சிலர் செய்யும் கொடூரத்திற்காக அவன் இளைஞர்களைப் பாழடிக்க விரும்பவில்லை.

நிலத்தை உழுது பசளை போட்டு நீரை ஊற்றினால் பூச்செடியும் வளரும்... முட் செடியும் வளரும். அவன் இளைஞர்களை பூச் செடிகளாகவே வளர்க்க விரும்பினான்.

மெதுவாக நிலத்திலே கையை ஊன்றி எழுந்து இருந்தான். உடலிலிருந்து இரத்தம் வெளியேறியிருந்ததனால் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. உடல் பச்சைப் புண்ணான வேதனையாக இருந்தது.

"காளிமுத்து ஆத்திரப்படாதே.....! ஆத்திரகாரனுக்குப் புத்தி மத்திமம் என்று சொல்லுவாங்க..... பதறிய காரியம் சிதறிப் போகும்...... பதறக் கூடாது..... நிதானம் தேவை..... ஒரு சமுதாயத்தின் விடிவை முன்னெடுத்துச் செல்லும் பொழுது இதைப் போல ஆயிரம் துன்பங்கள் வரும்... அவை எல்லாவற்றையும் சந்தித்து முகம் கொடுத்து கடந்து போனால்தான் நாங்கள் செல்ல இருக்கிற இலக்கை அடைய முடியும்......."

"அப்படியெண்ணா அந்தப் புல்லுருவிய ஒன்றும் செய்யக் கூடாது என்கிறீர்களா...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெட்டிக் கொலை செய்வதுதான் முடிவென்று நினைக்கிறாயா....!

"இப்படியானவர்களை இந்தச் சமூகத்திலே விடக்கூடாது. இப்படியானவர்களால்தான் இந்தச் சமூகம் குட்டிச் சுவராகிப் போனது."

"வெட்டலாம்....... கொலை செய்யலாம்....... அப்படிச் செய்வதனால் பிரச்சினை தீர்ந்து விடுமா? நீ அவனைக் கொலை செய்தால்........ நீ கொலைக் குற்றவாளியாக்கப்படுவாய்! நீதி மன்றில் நிறுத்தப்படுவாய்! உனக்கு மரண தண்டனை விதிக்கப்படும்! அதன் பிறகு........ இந்த இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருந்து விடிவுக்குப் பாதை காட்டுவது யார்? அந்தக் கொடூரக்காரனும் நீயும் இறந்து விட்டால் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா? மக்கள் விடுதலை பெற்று விடுவார்களா?

கொலைக்கு கொலைதான் பரிகாரமல்ல. முதலிலே மக்களிடையே ஒற்றுமை வேணும்! புரிந்துணர்வு வேணும்! அந்த ஒற்றுமையின் பயனாக சத்தியாக் கிரகம் செய்யுங்கள்! கதவடைப்புச் செய்யுங்கள்! வேலை நிறுத்தம் செய்யுங்கள்! ஹர்த்தால் செய்யுங்கள்! அப்பொழுது அந்த ஒற்றுமையைக் கண்டு அநீதிகள் ஓடிப் போய் ஒளித்து விடும்! நீதியின் கதவுகள் தானாகத் திறக்கும்!

"அந்த வேளையிலும் நீதியின் கதவுகள் திறபடாமல் விட்டால்....... கத்தியென்ன, அவக்கையே தூக்குங்கள்!"

## 14

உடல்நிலை ஓரளவு தேறியிருந்தது. ஆனால், உடல் சருகாகப் போயிருந்தது.

கல்லடிப்பட்டு காயப்பட்டதிலிருந்து இன்று வரை பத்மநாதன் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தான். அவனுடைய வாழ்நாளில் அறிவு தெரிந்த நாளிலிருந்து ஒரு நாள் கூட இப்படி முடங்கிக் கிடந்ததே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. ஒவ்வொரு நிமிடத்தையும் பொன்னென நினைத்து பம்பரமாகச் செயற்படும் அவனுக்கு ஒரே அலுப்பாக இருந்தது.

லயத்தினுள்ளே முடங்கிக் கிடக்க கிடக்க நாட்டு எண்ணமும் வீட்டு எண்ணமும் வந்து நெஞ்சம் நினைவுப் புயலாய் அடிபட்டு நெஞ்சு நசிந்தது. உள்ளம் தடுமாறியது. மனத்திற்கு ஒரு ஆறுதல் தேவையாக இருந்தது.

வானத்தை வெறித்தபடி கிடந்தான். மேகங்கள் சாம்பலைப் பூத்தபடி வேகமாக உலாவிக் கொண்டிருந்தன. மரங்களில் குருவினங்கள் குரல் கொடுத்துக் கொண்டிருந்தன.

இன்றைக்கு எப்படியாவது வெளியே சென்று வர வேண்டும் என நினைத்தான்.

நித்தியா கொதிக்க வைத்துக் கொடுத்த கொதிநீரில் உடலைக் கழுவிக் கொண்டு, காலை உணவைச் சாப்பிட்டு விட்டு 'ஸ்கிரீனிலே' தொங்கிய சேட்டைத் தூக்கிப் போட்டபடி வாசலுக்கு வந்தான்.

வாசலைத் தாண்டியதும்,

"எங்க இந்த ஏலாத நேரத்தில போறீங்க........?"

நித்தியாவின் குரல் சங்கநாதமாய் வந்து செவிப்பாறைகளில் முட்டி நின்றது.

"சும்மா படுத்துக் கிடக்க ஒரே அலுப்பாகக் கிடக்குது...... அதுதான் இதுவரைக்கும் நடந்து போயிற்று வாறன்........."

அவளுடைய பதிலுக்காகக் காத்திராமல் நடந்தான்.

அவனைப் பார்க்க அவளுக்குப் பாவமாக இருந்தது.

நீண்ட நாட்கள் நடக்காமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்த அவனுக்கு நடப்பது சுகமாக இருந்தது. நடக்க..... நடக்க... நடக்க வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல இருந்தது. தன்னையே மறந்து கிராமத்துச் செழுமையை ரசித்த வண்ணம் நீண்ட தூரம் வந்து விட்டான்.

தெரு ஜன சந்தடியற்று வெறிச்சோடிக் கிடந்தது. நாளெல்லாம் மாடாய் உழைக்கும் சனங்கள் 'கூலி' வேலைக்குப் போய் விட்டார்கள் போலும். இந்த மண்ணை வளம் படுத்த, இந்த மக்கள் செய்த தியாகங்கள் எத்தனை! பட்டபாடுகள் எத்தனை! இதை நினைத்தவனாக நடந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது புழுதியைக் கிளப்பியபடி வேகமாக ஒரு கார் வந்து கொண்டிருந்தது. தன்னையே மோதிவிடும் போல.... அவ்வளவு வேகம். ஒதுங்கி விட நினைத்தான். அதற்கிடையில் 'கிறீச்' என்ற ஓசையுடன் அவனருகே வந்து நின்றது அந்தக் கார்.

அவன் ஆச்சரியத்துடன் காரை நிமிர்ந்து பார்த்தான்.

அது......... அதே 'வென்ஸ்கார்'....

ஜன்னலின் கறுப்புக் கண்ணாடிகள் தானாகப் பதிந்தன.

அவன் ஆச்சரியத்துடன் பார்த்தான்.

"என்ன மாஸ்டர் இந்தப் பக்கம் நடையில....."

அன்று கண்ட அதே முகம் பேசியது.

அவன் மௌனமாக நின்றான்.

"என்ன மாஸ்டர் யோசிக்கிறீங்க..... ஏறுங்க.... அதில கொண்டு போய் ட்றொப் பண்ணி விடுறன்."

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பழகியவன் போல உறவோடு பேசினான்.

சில வினாடிகள் மௌனத்தில் ஊர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரின் பின் கதவு தானாகத் திறந்து கொண்டது. அவன் தடுமாறிப் போனான்.

"மாஸ்டர் பயப்பிடாம ஏறுங்க...."

தயங்கினான்.

"மாஸ்டர் டோன் வொறி. ஐ காவ் ரு டோக் வித் யூ ஏ பியூ மினிட்ஸ்"

போவோமா போகாமல் விடுவோமா என்று சிந்தித்தான்.

"ஓகே...."

வேறு வழியின்றி ஏறினான். கதவு தானாகவே மூடிக் கொள்ள கார் பறக்க ஆரம்பித்தது.

கார் பங்களாவினுள் நுழைந்தது. மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போல அவருக்குப் பின்னே நடந்தான்.

வேறாலுக்குள் கிடந்த 'குஷன்' கதிரையைச் சுட்டிக் காட்டி கண்ணில் போட்டிருந்த சண் கிளாசைக் கழற்றியவாறு "டேக் யுவ சீற்" என்றான்.

அவன் இருந்தான். கதிரை பல தடவைகள் மேலே போய் கீழே வந்தது. அந்த அதிர்வினால் அடுத்த கதிரைக்குள் நாக்கை கீழே தொங்கப் போட்டுக் கொண்டு படுத்துக் கிடந்த 'அல்சேசன்' நாயொன்று முறைத்துக் கொண்டு மீண்டும் படுத்துக் கொண்டது.

ஹோலை ஒரு முறை சுற்றும் முற்றும் பார்த்தான். சுவரில் எங்கும் பாயும் புலிகள் பாய்ந்து கொண்டிருந்தன.

நிசப்தம் சில நிமிடங்களை விழுங்கின.

அந்த நிசப்தத்தைக் கலைப்பதற்காக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மாஸ்டர் என்ன குடிக்கிறீங்க.....? ........ கூலோ..... ஹொட்டோ.... சாய்வு நாற்காலியில் இருந்தபடி ஹோலின் பெல்லை அழுத்தினார்.

அழுத்தியதுதான் தாமதம் ‘கிளிங்’ என்ற ஓசையுடன் ஹோலின் மூலையில் பட்டை மரத்தில் நின்ற கழுகு ஒன்று எட்டிப் பார்த்தது.

அதைத் தொடர்ந்து உள்ளேயிருந்து ஒருவன் வந்தான். அவனின் கையிலே ஒரு தட்டு இருந்தது. அந்தத் தட்டை அவனின் முன்னே ரீப்போவில் வைத்தான்.

அவன் வாழ்க்கையிலேயே காணாத-கனவில் கூடக் கண்டிராத சில போத்தல்கள் அந்தத் தட்டிலிருந்து அவனை ஏளனமாகப் பார்த்தன. அவனும் பரிதாபமாகப் பார்த்தான்.

“என்ன யோசிக்கிறீங்க...... இதெல்லாம் உங்களுக்காகத்தான் பயப்பிடாம எடுங்க.”

“நான் ஒன்றும் பாவிக்கிறதில்ல”

“ஓ....! அப்பிடியா..... ஹொட்டா ஒரு ஹொபி...”

மீண்டும் மணியை அழுத்தியவாறு போத்தலின் மூடியைக் கழற்றிக் கிளாசை நிரப்பிக் கொண்டிருந்தார்.

பொழுது மௌனமாகக் கரைந்து கொண்டிருக்க போத்தல் காலியாகிக் கொண்டிருந்தது.

“மாஸ்டர், இந்தப் பனிக்குள்ளேயும் குளிருக்குள்ளேயும் இருந்து கொண்டு, இந்தக் கூலிகளோட மாரடிக்கிறத விட உங்கட ஊருக்கு ரான்ஸ்பர் எடுத்துக் கொண்டு போனாலென்ன........!”

அவரே ஆரம்பித்தார்.

அவன் மௌனமாக இருந்தான்.

அவரே மீண்டும் தொடர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எத்தனை நாளைக்கு இந்தச் சனங்களோட இப்படி இருக்கப் போறீங்க....... சும்மா விட்டுப் போட்டு ஊருக்குப் போங்க..........."

அவன் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீங்க?"

"போகலாந்தான்.... ஆனா........"

"போகலாந்தான்.... என்ன... சொல்லுங்க......"

அவன் இந்தச் சனங்களை நினைத்துக் கொண்டான். எவ்வளவு பாவப்பட்ட மக்கள்... இந்த மக்கள் அவல வாழ்க்கையிலிருந்து துளிர் விட நினைக்கையிலேதான் எத்தனை எதிர்ப்புக்கள்...... அந்தத் துளிரையே கிள்ளி எறிந்திட முயற்சிக்கும் துரை.......... நாடு சுதந்திரம் பெற்று இத்தனை வருடங்கள் கழிந்தும் தங்கள் சுயலாபங்களுக்காக தூபமிட்டு வளர்த்து வரும் அரசியல் வாதிகள்..... மலையக மக்கள்.... காளிமுத்து....... நித்தியா...... எல்லோரும் ஒரு கணம் கண்முன்னே தோன்றி மறைந்தார்கள். அவர்களின் நினைவுகள் நெஞ்சைப் பரிவோடு தடவின. நன்றியுணர்வு நெஞ்சை அடைத்தது.

"நான் போக விரும்பவில்ல...... இங்கதான் வேலை செய்யப்போறன்...."

"ஏன் அப்பிடிச் சொல்லுறீங்க..... இந்தத் தோட்டக்காட்டுச் சனங்களோட மாரடிக்கிறதால என்ன பிரயோசனம்..... சும்மா விட்டுப் போட்டுப் போங்க....."

பலவிதமான உணர்ச்சிகளின் போராட்டம் அவருடைய முகத்திலே தோன்றி மறைந்தன.

"..................."

"உங்களுக்கு விருப்பமென்றால் இன்றைக்கே சொல்லுங்க நாளைக்கு ரான்ஸ்பர் வாங்கித் தாரன். அதைப் பற்றி யோசிக்காதீங்க......."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் 'ஆ' வென்று வாய் விட்டுச் சிரித்தான். அந்தச் சிரிப்பு அவர் தற்கொலை செய்யாமலேயே செத்து விடலாம் போல இருந்தது. அந்தச் சிரிப்பை அவர் எதிர் பார்க்கவில்லை. தொழிலாளர்கள் முதலாளிகளை எதிர்த்து ஒரு வார்த்தை கதைத்து விடக் கூடாது. அபிப்பிராயம் ஒன்றும் சொல்லக் கூடாது. இரு என்றால் இருக்க வேண்டும். எழும்பு என்றால் எழும்ப வேண்டும் என்ற கொள்கையுடையவராயிற்றே!

அவருடைய முகம் கோபக் கனலாய்..... இரத்தமாய்ச் சிவந்து வந்தது. எதுவுமே பேசவில்லை. சீண்டி விட்ட நாகம் போல எழுந்தார். அறையினுள் நுழைந்தார்.

அவருடைய முகம் மாறிய விதமும்... உள்ளே போன வேகமும் ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது, வீணாக வந்து மாட்டிக் கொண்டான் என்பதனை உணர்ந்தான்.

இப்பொழுது அவன் பருந்தின் கூட்டைத் தேடி வந்த கோழிக் குஞ்சு. இனித் தப்ப முடியாது!

விடுதலையொன்று வேண்டும், தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமென்று எத்தனை எத்தனையோ தியாகங்களைப் புரிந்து துன்பத்தின் சுமைகளைச் சுமந்து மரணத்தின் எல்லையில் இருந்து கொண்டு மரணத்தைத் துச்சமென நினைத்துப் போராடிக் கொண்டிருக்கும் போராளிகளை நினைக்கையில் அவனுடைய மரணம் துச்சமாகவே பட்டது.

உள்ளே போன தோட்டத்துரை அதே வேகத்துடன் திரும்பி வந்தார். வந்ததும் வராததுமாக கையிலேயிருந்த நாலைந்து பணக் கட்டுக்களை அவனுக்கு முன்னாலிருந்த ரியூப்போவிலே போட்டார். அது ஒவ்வொன்றும் மயில் போட்ட ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள். அந்தப் பணக் கட்டுக்கள் வந்து விழுந்த வேகத்தில் தட்டிலிருந்த போத்தல்கள் சரிந்து.... சாராயக் கண்ணீரை வடித்துக் கொண்டிருந்தன.

அவன் பணக்கட்டுக்களையும் அவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

யாரையும்.... எவரும் பணம் கொடுத்து வாங்கி விடலாம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பு போல......... பெற்ற தாயைத் தவிர எல்லாத்தையும் விலை கொடுத்து வாங்கி விடலாம்!

இப்பொழுது அவன் விலைப்பொருள்! ஏலத்திற்கு விடப்படக் காத்திருக்கும் பொருள்!
"என்ன மாஸ்டர் அப்பிடிப் பார்க்கிறீங்க....."

"ஒன்றுமில்ல..."

"இதில ஒரு ஐம்பதினாயிரம் ரூபா இருக்குது....."

"ஐம்பதினாயிரம் ரூபாயா.....?

அவன் அவரை நிதானமாகப் பார்த்தான்.

"மாஸ்டர், இந்த காசை எடுத்துக் கொண்டு ஊருக்கே போய் விடுங்க. இனி இந்தத் தோட்டக்காட்டுச் சனங்களின் விடயத்தில் தலையிடாதீங்க...."

...... இது அவர் பேசவில்லை. அவருடைய பணத்திமிர் பேசியது.

"நான் இந்தச் சனங்களில அன்பு........"

அவன் சொல்லி முடிப்பதற்குள் அவரே தொடர்ந்தார்.

"நீ சொல்லுறது உண்மைதான். இந்த உலகத்தில அன்பு, நீதி, நியாயம், நேர்மையெல்லாம் வெறும் போலி. இது உனக்கு இப்ப புரியாது. இன்னும் நாலு வயசு போனால்தான் புரியும். இந்த உலகம் வாழுறதே பணத்திலதான். இந்த உலகமே பணத்தைத்தான் பெரிதென்று நினைக்குது. பணமில்லாமல் விட்டால் தெரு நாயே மதிக்காது. இந்தப் பணத்த எடுத்துக் கொண்டு பேசாம ஊருக்கே போய்விடு........"

ஒன்று..... இரண்டு.... மூன்று...... நான்கு... ஐந்து....

அவன் ஒவ்வொரு பணக் கட்டாக பொறுக்கி எடுத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய முகம் ரோஜா மலராக மலர்ந்தது.

பொருளை.... பெண்களின் கற்பை விலை கொடுத்து வாங்கி அனுபவப்பட்டிருந்தாலும்...... இவ்வளவு சுலபமாக அவனை விலை கொடுத்து வாங்கி விடலாம் என எண்ணவில்லை.

மகிழ்ச்சித் துடிப்பால் எழுந்து அருகிலிருந்த பூச்சாடியில் றோஜா மொட்டு ஒன்றைக் கிள்ளி எடுத்தார். அது கைக்குள் நசுங்கிக் கொண்டிருந்தது.

அவனையே கிள்ளி மலையக மண்ணிலிருந்து தூக்கி எறிவது போல இருந்தது.

"பணம் இல்லாமல் வாழ்க்கையில்ல, பணத்தை மதிக்கிறன் அதனாலதான் இந்தப் பணத்த எடுக்கிறன். இல்லையென்றால் இந்தப் பணத்தை உங்க முகத்திலேயே வீசிப் போட்டுப் போயிருப்பன். அதுவும்... உங்கட பணமென்றால் நான் தொட்டும் பார்த்திருக்க மாட்டன். இது.... கங்காணிகளின் அதட்டல்களுக்குப் பயந்து மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்த தொழிலாளிகளிடமிருந்து பெற்ற சுரண்டல். இது எனக்கோ அல்லது உங்களுக்கோ சொந்தமானதல்ல. இந்த மலையக மண்ணின் மைந்தர்களுக்குச் சொந்தமானது. இந்தப் பணம்... மலையக மக்களின் விடிவுக்கான போராட்டத்திற்கே பயன்பட வேண்டும்.... நிட்சயமாகப் பயன்படும்....."

"மாஸ்டர்..........."

"என்னை யாருமே பணம் கொடுத்து வாங்க முடியாது. பணத்தை விட மானத்தைத்தான் பெரிதாக நினைக்கிறன். தன் மானத்திற்காக தன் உயிரையே துச்சமென நினைத்து எத்தனையோ இன்னல்களைச் சுமந்து போராடும் இடத்தில் பிறந்த எனக்கு மானந்தான் பெரிது என்று நினைத்துக் கொள்ளுங்க..... தன்மானத்தை யாருமே பணம் கொடுத்து வாங்க முடியாது......."

எழுந்தான்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

“...... மரியாதையா உன்னுடைய ஊருக்கே திரும்பிப் போய் விடு. இல்லையேல் உன்னைச் சிறையில் பிடித்து அடைத்து விடுவேன்.....”

ஆத்திரம் பொங்கி வர கோபம் கொப்பளித்தது. சுட்டுவிரல் அவனைச் சுட்டிக் காட்டி நின்றது.

திரும்பினான்.

எரித்து விடுவது போல ஒரு பார்வை.
“அதுதான் தமிழர்களுக்குப் பழக்கப்பட்ட இடமாச்சே! சிறைக் கம்பிகள் இனிப்பானவை..... தூக்கு மேடை சொர்க்கலோகம்.....”

“இந்த வந்தான் வரத்தான் நாய்களுக்கு இடங் கொடுத்தால் இப்படித்தான் நடக்கும்....”

உயிரற்ற வார்த்தைகளை அள்ளி வீசினார்.

நடந்தான்..... நெஞ்சில் உங்கள் விடுதலைக்காகப் போரிடுவேன் என்ற உணர்வு வலுவாகி நின்றது.

வேகமானான்........

“நீ ஏன் இங்கிருந்து போகமாட்டேன் என்கிறாய் என்பது எனக்குத் தெரியும். அந்த நித்தியாவை........”

துச்சமாய்...... கர்வமாய்...... அகங்காரமாய்..... மனிதர்களைத் தூக்கி எறிந்து பழக்கப்பட்ட முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவன் என்று......... அவனுடைய அந்த அள்ளி வீசிய வார்த்தைகள் அடையாளம் காட்டி எதிரொலித்துக் கொண்டேயிருந்தன.

## 15

வீட்டையடைந்த பத்மநாதனின் மனம் இருப்புக் கொள்ளவில்லை.

மனதை என்னவோ செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்துரை அள்ளி வீசிய உயிரில்லாத வார்த்தைகள் இன்னும் செவிப்பறைகளைப் பித்துக் கொண்டு தெளிவாகக் கேட்டுக் கொண்டேயிருந்தன.

அம்மாவிடமிருந்து கடிதம் வேறு வந்திருந்தது.

எங்கேயாவது போய் யாரும் கண் காணாத இடத்தில் ஓய்வாக இருக்க வேண்டும் போல இருந்தது.

என்ன செய்வதென்று புரியாமல் - தெரியாமல் நாலு தடவைகள் குட்டி போட்ட பூனை போல அங்குமிங்கும் நடந்தான். ஒவ்வொரு நடையிலும் கால்விரல்கள் ஏதோ கோலம் கீறி கணக்குப் பார்க்க...... எண்ணம் புயலாகச் சுழன்றது.

இதை அவதானித்துக் கொண்டிருந்த வேலம்மாள்,

"என்ன தம்பி பலமாக யோசிக்கிறீங்க......" என்றாள்.

அவள் கேட்ட கேள்விக்கு அவனால் பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை - சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை. அதனால் "ஒன்றுமில்லை" என்ற பதிலை மட்டுமே உதிர்க்க முடிந்தது.

ஒரு தடவை ஊருக்குப் போய் வந்தால் கூட என்னவென்று தோன்றிற்று.

மெதுவாக அறையினுள் சென்று கட்டிலில் படுத்தபடி அம்மா அனுப்பிய கடிதத்தை மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்தான்.

அன்பான மகனுக்கு,

நீண்ட நாட்களாக உன்னுடைய கடிதத்தைக் காணவில்லை. உன்னுடைய நினைவாகவே உள்ளேன். எனக்கும் வயது போய் விட்டது. இப்பொழுது நோயாளியாகக் கூட மாறி விட்டேன். நடக்கக் கூட முடியவில்லை. ஒரே இளைப்பாக இருக்கிறது.

உனக்கும் வயது ஏறிக் கொண்டு வருகின்றது. நீ கல்யாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொண்டு சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

நான் கண்ணை மூடுவதற்கிடையில் உனது கல்யாணத்தைப் பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. ஒரு மருமகள் வந்து சமைத்துப் போட மாட்டாளா, விளக்கேற்ற மாட்டாளா என்று ஆதங்கமாகவுள்ளது.

எனக்கு எனது பேரப்பிள்ளைகளைத் தூக்கிக் கொஞ்சி விளையாட ஆசையிருக்காதா என்ன! ஊரிலிருந்து பல நல்ல இடங்களில் கல்யாணம்

பேசி வருகின்றார்கள். என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. இங்கு நீ வந்து கல்யாணம் செய்ய வேண்டும். அல்லது நீ விரும்புகின்ற பெண்ணை எங்கேயாவது கட்டிக் கொண்டு சந்தோசமாக இருக்க வேண்டும். எனது ஆசையை நிறைவேற்றி வைப்பாய் என நம்புகின்றேன்.......

கடிதத்தை நான்காக மடித்து தலையணையின் அடியில் வைத்துக் கொண்டு சிந்தனை வயப்பட்டவனாக கண்களை இறுக மூடிக்கொண்டு படுத்தான்.

பிள்ளையைப் பெற்ற எந்தவொரு பெற்றோருக்கும் இருக்கின்ற ஆசை தானே இது! அந்த ஆசையை நிறைவேற்றி வைக்காத பிள்ளையும் ஒரு பிள்ளையா?

மனம் பாராங்கல்லாகக் கனத்தது. மனதில் நிம்மதி இருக்கவில்லை.

"நித்தியாவை நீ.........."

துரையின் கடைசி வார்த்தைகள் நெஞ்சை அழுத்தியது.

பாவம் நித்தியா என்னால் அவளுக்குக் கறை படிந்து விட்டதே! செய்யாத குற்றத்திற்காக வீணான அவப் பெயரைப் பெற்றுக் கொண்டு விட்டாள். எனக்கு உதவி செய்யப் போய்த்தானே அவளுக்கு இந்த அவப்பெயர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைக்குக் கல்யாணச் சந்தையிலே விலை பேசி விற்கப்பட வேண்டியவள் விலைப்பட வேண்டியவள்: அவளுடைய பெயரில் கறை படிந்து விட்டதே!

ஒரு சேலையில் கறை படிந்து விட்டால் துடைத்து விடலாம் அல்லது கழுவி விடலாம். ஆனால், ஒரு பெண்ணில் கறை படிந்து விட்டால்.......

என்ன செய்யலாம்..... சிந்தித்தான்.

நித்தியாவுக்கு நல்லதொரு இடத்தில் கல்யாணம் பேசி செய்து வைத்து விட்டால் என்னவென்று எண்ணத் தோன்றிற்று.

பேச்சு வார்த்தையிலும் - 'லவ்' பண்ணியும் நடந்தேறும் கல்யாணங்கள் கூட சில வேளைகளில் கணவன் - மனைவி சண்டையில் வந்து விவாகரத்தில் நிற்கிறது.

இதற்கெல்லாம் காரணம் கணவன் மனைவியிடையே பரஸ்பரம் புரிந்துணர்வும் நம்பிக்கையும் இல்லாமையேயாகும்.

அப்படியானால்..........

சிலவேளைகளில் நித்தியாவை கல்யாணம் செய்து கொண்டவனின் காதுகளுக்கு இக்கதை எட்டினால்..... அல்லது இன்றைக்கு எனக்குச் சொன்ன தோட்டத்துரை ஒரு நாளைக்கு அவளின் கணவனுக்குச் சொல்ல மாட்டான் என்று என்ன உத்தரவாதம்.... சீ.... அப்படி நடக்காது! அப்படிச் சொன்னாலும் அவன் நம்பாமல் இருந்தால் சரிதானே! என்னதான் இருந்தாலும் ஒரு மனைவி ஒழுக்கம் கெட்டவள் என்பதனை எந்தவொரு கணவனும் ஏற்றுக் கொள்ளுவானா...! முடியாது. அப்படியானால்.... நித்தியாவின் நிலைமை?

அவளுடைய நல்ல மனத்திற்கு அப்படியொரு நிலைமை தேவையா? நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் அஞ்சியது.

என்ன செய்யலாம்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய அம்மாவுக்கு இருக்கும் ஆசைகளும் அவளுடைய அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இருக்கும்தானே! அவனைப் போல அவளும் ஒரே பிள்ளைதானே!

இதற்கு ஒரே வழி........ நித்தியாவை நான் கல்யாணம் செய்தால் என்ன!

அவளுக்கு என்ன குறை...... அழகானவள் - படித்தவள் - பண்பானவள்.

சீ! எலும்பில்லாத நாக்கினால் இவர்கள் இப்படிக் கதைத்து விட்டார்கள் என்பதற்காக இப்படிச் செய்ய வேண்டுமா? அப்படியாயின் இப்படியான எலும்பில்லாத நாக்குள்ளவர்கள் இந்தப் பூமியில் வாழும் வரை ஒரு ஆண் நாலைந்து பெண்களையும் ஒரு பெண் நாலைந்து ஆண்களையும் கல்யாணம் செய்து தமிழ் பண்பாட்டையே மாற்றியமைக்க வேண்டிவருமே!

அவளும் ஒரு பெண்...... அவளும் வாழ வேண்டியவள்..... அவளுக்கும் ஒரு வாழ்க்கைத்துணை தேவைதானே! அது நானாக இருந்தால் என்ன!

சே! இதை நித்தியாவின் அப்பா அறிந்தால் என்ன நினைப்பார். இவ்வளவு நாளும் பழகினதெல்லாம் இதற்காகத்தானா என்று கேவலமாக நினைத்துவிட மாட்டாரா?

என்னால் படிந்த கறையை நான்தானே துடைக்க வேண்டும். மனம் நிம்மதி இல்லாமல் நாயாக அலைந்தது.

இன்றைக்கு அம்மாவுக்கு கடிதம் எழுதி உடனே போட்டு விட வேண்டும். அந்த எண்ணத்துடனேயே தூங்கிப் போனான்.

கண் விழித்துப் பார்த்த போது எதிரே நித்தியா தேனீர்க் கோப்பையுடன் நின்று கொண்டிருந்தாள்.

அவளைப் பார்க்க அவனுக்குச் சங்கடமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

இருட்டுச் செத்துக் கொண்டிருக்க, பொழுது விடியலுக்காகப் போராட்டம் நிகழ்த்திக் கொண்டிருந்தது.

இருட்டுச் செத்துப் போவதற்கிடையில் பத்மநாதன் எழும்பி விட்டான். மனதில் படிந்து கிடந்த சலனம் அவனை இரவு முழுவதும் நித்திரையில்லாமல் செய்திருந்தது.

வெளியே வந்தான். விடியாத காலை நேரத் தென்றல் குளிரென வீசிக் கொண்டிருந்தது.

என்றுமேயில்லாதவாறு வீட்டுக்கு முன் இருக்கும் சவுக்கு மரத்திலிருந்து காகமொன்று எங்கோ முறைத்துப் பார்த்தபடி கரைந்து கொண்டிருந்தது.

முற்றத்திலிருந்து காலையில் காகம் கரைந்தால் நிச்சயமாக எங்கேயாவது இருந்து ஒரு சேதி வரும். இது பண்டைக் காலத்திலிருந்து வழக்கத்திலுள்ள ஜோதிடம்.

காகம் கரைவதைக் கண்ட வேலம்மா ஏதோ விபரீதம் நடக்கப் போகின்றதோ எண்றெண்ணியவளாக 'சூ....சூ......' என்று காகத்தை விரட்டினாள்.

அது போனபாடில்லாமல் மரம் விட்டு மரம் தாவித் தாவி பறந்து பறந்து கரைந்தது.

முனுசாமி அதிகாலையிலேயே வேலைக்காக வெளியே போயிருந்தார்.

நித்தியா சாறியைக் கொஞ்சம் உயர்த்தி இடுப்பிலே கொஞ்சம் வசதியாகச் செருகியபடி, நிலத்திலே இடது கையை ஊன்றியவாறு கோலப் பொடியைப் புள்ளி புள்ளியாகத் தூவிக் கொண்டிருந்தாள். அது பின்பு கோடுகளாக இணைந்து வெள்ளை, மஞ்சள் மலர்களாக மலர்ந்து கொண்டிருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நிமிடங்கள் வைத்தகண் வாங்காமல் அவளையே வெறித்துக் கொண்டிருந்தான்.

கை வலித்ததோ என்னவோ திரும்பினாள். அங்கே பத்மநாதன் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதனைக் கண்டு வெட்கித் தலை குனிந்தாள்.

அவனுக்கு அவளுடைய பார்வையைச் சந்திக்க சங்கடமாக இருந்தது.

நாளும் பொழுதும் அவளை எத்தனை தடவைகள் பார்த்திருப்பான் - கதைத்திருப்பான் - பழகியிருப்பாள். அவன் சஞ்சலப்பட்டதே கிடையாது. இன்று ஏனோ அவனையுமறியாமல் அவனுடைய மனம் கல் வந்து விழுந்த குளத்து நீர் போல தத்தளித்தது.

தோட்டத்துரை நேற்று அள்ளி வீசிய வார்த்தைகளை இரவு முழுவதும் அசை போட்டதினால் அவனையும் அறியாமல் அவள் மேலே கொண்ட உறவு இறுகி அழுத்தமான காதலாக வேர் விட்டிருந்தது.

ஒருவரை ஒருவர் உள்ளத்தால் உணர்வால் புரிந்து கொள்ளுவதனால் தோன்றுவதுதானே காதல்.

"நித்தியா!"

மெதுவாக அழைத்தான் சத்தம் வெளியே வர மறுத்தது.

அவனுடைய நாடித் துடிப்பு கொஞ்சம் அதிகரித்தது.

மீண்டும் "நித்தியா" என்றான்.

அவள் திரும்பினாள். பார்வை என்னவென்று கேட்பது போல இருந்தது.
"உங்களோட கொஞ்சம் கதைக்க வேணும்"

"என்னோடையா...... அப்பிடியென்ன........!"

அவளுடைய இதயம் நின்று மீண்டும் அடித்தது. அதிகாலையிலேயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்து சிரித்துக் கொண்டிருந்த வெள்ளை ரோஜா சிவப்பு ரோஜாவாக மாறியது போல முகம் மாறியது.

"நித்தியா நான் உன்ன விரும்புறன்..... உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று ஆசைப்படுறன்....."

உமிழ்நீர் வற்றி உதடுகள் ஒன்றுடன் ஒன்று ஒட்ட தட்டுத் தடுமாறி ஒருவாறாகக் கூறி முடித்தான்.

அவள் மௌனமாக நின்றாள். நெஞ்சம் படபடக்க மூச்சுத் திணறி விடும் போல ஒரு தவிப்பு.

"என்ன நித்தியா மௌனம்................ நான் சொன்னது உங்களுக்குப் பிடிக்கலையா........?

அவள் மீண்டும் மௌனமாக நின்றாள்.

"நித்தியா........."

அவன் வார்த்தைகளை முடிக்கும் முன்னர் அவளுடைய கண்ணீர் முந்தி விட்டது. முத்து முத்தான கண்ணீர்த் திவலைகள் சரம் கோர்த்து உருண்டன. அவள் 'ஓ'வென்று அழ ஆரம்பித்து விட்டாள்.

பத்மநாதனுக்குச் சங்கடமாகப் போய் விட்டது.

"ஏன் அழுறீங்க...... சீ.... சின்னப் புள்ள மாதிரி..... நான்.... என்ன சொல்லிப் போட்டன்....... நான் ஏதாவது தவறாகச் சொல்லிருந்தால் என்ன மன்னிச்சிடுங்க........."

"அப்பிடி இல்லீங்க..... ஒருவர் ஒரு பொருள ஆசைப்படுறது இயற்கைதான்..... ஆனா.... அது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல இருந்து விடக்கூடாது......."
"நீங்க என்ன சொல்லுறீங்க...."

"ஆமாங்க நீங்க சொல்லுறது நல்லா வெளங்குதுங்க. என்ன மன்னிச்சிடுங்க"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் நித்தியா?"

"நீங்க விடுற காற்றைக் கூடச் சுவாசிக்கிறதுக்குக் கூட எங்களுக்கு அருகதையில்ல. ஆனா, நீங்க என்னக் காதலிக்கிறேன் எண்ணு சொல்லுறீங்களே......! அது நிறைவேறுங்களா........!"

"நித்தியா அப்படியெல்லாம் அபசகுணமாகப் பேசாதே......."

"நான் அபசகுணமாகப் பேசல்ல, உண்மையைத்தான் சொல்லுறன். நீங்க மட்டக்களப்பு..... அதிலேயும் ஒரு ஆசிரியர் நான்...... நான்...... சாதாரணமாகத் தோட்டத்தில பொறந்த கூலிக்காரன் மக...... சுட்ட மண்ணும் பச்ச மண்ணும் ஒட்டாதுங்க.........."

"நான் இவ்வளவு நாளும் உன்ன ஒரு மலையக மண்ணின் விடிவுக்காகப் பிறந்திருக்கும் பாரதியின் புதுமைப்பெண் என்றுதான் நினைச்சிருந்தன். ஆனா நீயே மட்டக்களப்பான் - மலையகத்தான், முதலாளி - தொழிலாளி என்று பேச ஆரம்பிச்சிட்டேயே! நாலு வகுப்புப் படித்த நீயே இப்படிப் பேசினால், பாடசாலையையே கண்டிராத மக்கள் என்ன கதைப்பார்கள். மட்டக்களப்பான் - யாழ்ப்பாணத்தான் - மலையகத்தான் - வன்னியான் என்று பிரிவினை பேசி நாட்டைக் குழப்புவதெல்லாம் அரசியல்வாதிகள். அதெல்லாம் முறியடித்து நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது நமது கடமை. இதை நாம செய்யாம வேற யார் செய்யிறது..... நித்தியா இப்ப உன்னுடைய முடிவென்ன!"

"என்ன சொன்னாலும் பொறந்த மண்.... தந்தை... தாய்... முடிவை மாத்தேலாதுங்க..... ஆனா......"

அவளுடைய வார்த்தைகள் அவனுக்குப் பிடித்துப் போனது. அந்த வார்த்தைகளிலிருந்து அவளின் அடி மனதைப் புரிந்து கொண்டான். அவள்தான் தன்னுடைய மனைவி என்பதனைத் திட்டவட்டமாக மனதினுள் தீர்மானித்துக் கொண்டான்.

"ஆனா..... என்ன ஆனா....."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உயிரே போனாலும் வேறு யாரையும் கல்யாணம் செஞ்சிக்க மாட்டன்"

"உனது சமுதாய விடிவுக்காக உனது முடிவை மாற்றினாலென்ன!"

"......." மௌனமாக நின்றாள். கால்கள் கோலம் போட்டுக் கொண்டிருந்தன.

"ஏன் நித்தியா மௌனமாக நிற்கிறாய். நீ உனக்காக இல்லாமல் விட்டாலும் உனது சமுதாய விடிவுக்காகவென்றாலும்....... நான் இந்த மலையக மண்ணில தொடர்ந்து இருக்க வேணுமென்றால் இதைத் தவிர வேறு வழியில்ல..... ஐ.... ஆம்.... சொறி..."

நடந்தான்.

"கொஞ்சம் நில்லுங்க.........."

அவன் நின்றான்.

"நான் உங்களோட மனசப் புண்படுத்துனத்துக்கு மன்னிச்சிடுங்க. நான் ஒங்கள நேசிக்கிறன்....... விரும்புறன்..... உயிரையே வைச்சிருக்கன்..... ஆனா, இந்தச் சமுதாயத்திற்குப் பயந்தேன். அதுதா அப்பிடிச் சொன்னேன். என்ன மன்னிச்சுப்புடுங்க. நான் எண்ணைக்கும் ஒங்க நித்தியாதான்..."

நெஞ்சில் நிறைந்த இன்ப உணர்வு தொண்டையை விக்கித்து அடைத்துக் கொண்டது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் புரண்டது.

அவனின் தோள்களிலே விழுந்து புரண்டு புரண்டு அழுதாள். அவனும் அவளை இறுக்க அணைத்தவாறு முதுகை ஆதரவாகத் தடவிக் கொடுத்தான்.

அப்பொழுது அங்கே கையில் கடதாசியுடன் உள்ளே நுழைந்தார் முனுசாமி.

வேதனைத் துடிப்புடன் உள்ளே நுழைந்தவருக்கு அவர் கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி ஏதோ விபரீதம் நடந்திருக்கின்றது என்பதனை உணர்ந்தவராக கையிலேயிருந்த கடதாசியை அவனிடம் நீட்டினார்.

நிதானமாகக் கடதாசியை வாசித்தான்.

"பெரியவர், என்னை மன்னிச்சிடுங்க. இப்படியானதொரு சூழ்நிலை வருமென்று எனக்கு நேற்றே தெரியும். அதனால நான் நித்தியாவையே கல்யாணம் செய்து கொள்ளுவதென்ற முடிவுக்கே வந்திட்டன். உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் இன்றைக்கே அம்மாவுக்கு கடிதம் எழுதிப் போட்டு அடுத்த மாதமே கல்யாணத்தை வைச்சுக்கலாம். இனி உங்கட லயத்தில நானும் ஒருவன்"

"ஏன் தம்பி இந்த திடீர் முடிவுக்கு வந்தீங்க......"

"திடீர் முடிவில்ல..... நல்லா நிதானித்து சிந்தித்து எடுத்த முடிவு."

என்றவாறு நேற்று நிகழ்ந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் கூறினான்.

அப்பொழுதான் நித்தியாவுக்கு அவனுடைய திடீர் முடிவுக்குக் காரணம் புரிந்தது.

முனுசாமியின் கண்களிலிருந்து நீர் சொரிந்தது. அவருடைய காதுகளை அவரால் நம்ப முடியவில்லை. நடப்பது ஒரு கனவா என்று கூட எண்ணத் தோன்றியது.

அவன் அவர்களின் கண்களுக்கு மனித வடிவில் தெய்வமாகத் தோன்றினான்.

நீண்ட நாட்களின்பின் பாடசாலைக்குச் செல்வதற்காக தெருவில் இறங்கினான். தெரு ஜன சந்தடியற்றுக் கிடந்தது. ஆனால், வீதியெல்லாம் நிறைத்துக் கொண்டு தியாகிகளின் கண்ணீர் அஞ்சலி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவஞ்சலி, சிரார்த்த தின சுவரொட்டிகள் போல சுவரொட்டிகள் ஒட்டிக் கிடந்தன.

படித்துப் பார்த்தான். நாலைந்து கிறுக்கல் எழுத்துக்கள்... காலையில் முனுசாமி கொண்டு வந்த அதே சுவரொட்டிதான்.... அவனையும் நித்தியாவையும் பற்றி கேவலமாக எழுதப்பட்டிருந்தன.

அவன் சிரித்துக் கொண்டு நடந்தான். அப்பொழுது அவனுடன் காளிமுத்துவும் வந்து சேர்ந்து கொண்டான். இருவரும் மலையக மக்களின் முன்னேற்றம் பற்றியும் எதிர்காலத்தில் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கதைத்துக் கொண்டு வந்தார்கள்.

பின்பு காளிமுத்து வேறு பாதையால் செல்ல பத்மநாதன் பாடசாலையை அடைந்தான்.

நீண்ட நாட்கள் பாடசாலைக்குச் செல்லாததால் அவனைக் கண்ட மாணவர்கள் தாயைப் பிரிந்த கன்றுகள் போல எட்டி எட்டிப் பார்த்தனர்.

அதிபரின் அறையினுள் நுழைந்தான், அங்கே ஒரு செய்தி காத்துக் கிடந்தது.

அறையினுள்ளே சகல ஆசிரியர்களும் ஒன்று கூடிக் கதைத்துக் கொண்டிருந்தனர். அவர்களுடைய முகங்களில் சோகக்களை ஒட்டிக் கிடந்தது. அவன் உள்ளே சென்றதும் அவனையே எல்லோரும் பரிதாபமாகப் பார்த்தனர். ஆனால் யாருமே பேசவில்லை.

"என்ன எல்லோரும் ஒரு மாதிரியாக இருக்கிறீங்க...."

வழமையான அதே கலகலப்புடன் அவனே கேட்டான்.

அதிபர் கையில் வைத்திருந்த கடிதத்தை நீட்டினார். அது ஒரு தந்தி.

தந்தியைக் கண்ட அவனுக்கு சந்தோசமாக இருந்தது. தந்தி வருமளவிற்கு மலையகம் முன்னேறி விட்டது என்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கையில். அதன் பின்புதான் தந்தியைப் படித்தான். 'உடனடியாக . மட்டக்களப்பு மாற்றம்' என்றிருந்தது.

"ஓ! இதுக்காகத்தானா எல்லோரும் சோகமாக இருக்கிறீங்க. டோன் வொறி...... நான் ரான்ஸ்பரில போனாத்தானே இந்த மண்ண விட்டுப் போவதற்கு.... அரசாங்க உத்தியோகம் மட்டுந்தான் உத்தியோகம்? அரசாங்க உத்தியோகம் பார்க்காத மக்கள் வாழவில்லையா? அரசாங்க உத்தியோகம் என்றால்தானே இரு என்ற இடத்தில் இருக்க வேண்டும்...... போ என்ற இடத்திற்குப் போக வேணும்......"

மாற்றல் கடிதத்தை பல தடவைகள் கிழித்து காற்றில் விட்டான். அது கார்த்திகை மாதத்து வண்ணத்துப் பூச்சிகளாக வானில் பறந்தன.

எல்லோரும் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். புதிய சிந்தனையுடன் லயத்தை நோக்கி வேகமாக நடந்தான்.

அவனுடைய சிந்தனைகளெல்லாம் அவனிடமில்லை. நடைப்பிணமாக நடந்து கொண்டிருந்தான்.

வீதியில் சனமேயில்லை. மயான அமைதி நிலவியது. அந்த அமைதியைக் கலைத்துக் கொண்டு திடீரென தேயிலைப் புதருக்குள்ளிருந்து நாலைந்து தலைகள் முளைத்தன.

கண்மூடித் திறப்பதற்கிடையில் அவனை நோக்கிப் பாய்ந்தார்கள். அவன் அதனை எதிர்பார்க்கவில்லை. அவனைச் சுற்றி நாலைந்து பேர் நின்று கொண்டிருந்தார்கள். அடையாளம் காண முடியாத அளவிற்கு முகமூடி அணிந்திருந்தார்கள்.

"மாஸ்டர், இந்த ஊரை விட்டுப் போறதா...... இல்லையா........!"

அதிலிருந்த ஒருவன் கர்ச்சித்தான்.

அவன் மௌனமாக நின்றான்.

"இந்தத் தோட்டக்காட்டுச் சனங்களோட விடயத்தில தலையிட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாமென்று எத்தன தடவ சொல்லியிருப்பம்."

முகமூடிக்குள்ளிருந்து இன்னுமொரு குரல் வந்தது.

அவனுக்கு ஆத்திரத்தால் நெற்றியில் பூத்த வியர்வை நெஞ்சை நனைத்துக் கொண்டிருந்தது. அவர்களுடைய ஒவ்வொரு வார்த்தைகளும் நடக்கப் போகும் விபரீதத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

"என்ன பேசாம நிக்கிறீங்க..."

ஒரு அதட்டல்.

"அடக்கு முறையால பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று நினைக்கிறீங்களா? அடக்கு முறைகளும் ஒடுக்கு முறைகளும் விடிவுக்குப் பாதை சமைக்குமேயொழிய பிரச்சினையைத் தீர்க்காது" என்று கூறியவாறு, இவர்களுடன் கதைப்பதில் எந்தவித பிரயோசனமும் இல்லை என்றெண்ணியவனாக நடப்பதற்கு ஒரு காலடி முன்னே வைத்தான்.

'படார்' - ஒருவனின் கையிலிருந்த தடி மண்டையைப் பதம் பார்த்தது. அதைத் தொடர்ந்து எல்லோரும் தாக்கத் தொடங்கினார்கள்.

மண்டையிலிருந்து இரத்தம் பீறிட்டது.

அவன் சரிந்து விழுந்தான்.

"உன்னைக் கொல்லாம விடுவதில்லை" - கர்ச்சித்தார்கள்.

ஒருவாறு தட்டுத் தடுமாறி எழுந்து கைகளை நிலத்திலே ஊன்றியவாறு எழுந்தான். நெற்றியினால் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

"நீங்கள் என்னைக் கொல்லலாம்.... என்னுடைய உடலை அழிக்கலாம். ஆனால், ஆத்மாவை அழிக்க இயலாது... அது அழியவும் அழியாது....... நீங்கள் இன்றைக்கு என்னக் கொல்லலாம்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைக்கு என்னைப் போல ஆயிரம் பேர் உருவாகுவார்கள்... ஒரு விதை ஆயிரம் காடுகளை உண்டாக்கும்... நீங்க என்னை அடித்து ஒடித்ததனால் ஓடுதே இந்த இரத்தத்தின் ஒவ்வொரு துளிகளும் சர்வாதிகாரத்திற்கு எதிராக இந்த மலையக மக்களின் விடிவுக்காக ஒவ்வொரு விடுதலைப் போராளிகளை உருவாக்கியே தீரும்.... சிந்துகின்ற ஒவ்வொரு இரத்தத் துளிகளும் வீணாகப் போவதில்லை... ஒவ்வொரு துளிகளும் விடுதலைக்காகப் போடப்படும் பாதைக் கற்கள்... நாளை நிட்சயம் விடுதலை மலரும்..."

அவனுடைய கண்கள் படபடத்தன. உதடுகள் துடித்தன. வார்த்தைகள் தீர்க்கமாக வெளிவந்தன.

அவன் உணர்வற்றுக் கிடந்தான்.

கூர்ந்து பார்த்தார்கள். அவன் இறந்து விட்டான்...... அவர்கள் வந்த காரியம் நிறைவேறி விட்டது. அவர்களுக்கு இனித் தொல்லையில்லை.

பலம் கொண்ட மட்டும் ஒருவன் சப்பாத்துக் காலினால் ஓங்கி உதைத்தான்.

உடல் மலைச் சரிவுகளினால் உருண்டு போனது.

செய்தி எங்கும் பரவியது.

நித்தியாவின் காதுகளையும் எட்டத் தவறவில்லை. அனலிலிட்ட புழுவாகத் துடித்துப் போனாள்.

நீதி கேட்டுப் புலம்பிய கண்ணகி போல அடித்து ஒடித்த இடத்திற்கே ஓடினாள்.

அங்கே.... அவனைக் காணவில்லை. பூமி மட்டும் சிவந்து கிடந்தது. இதயம் வெடிக்க வெடிக்க அழுதாள். 'ஓ'வென்று அழுதாள். சத்தம் மலைகளில் முட்டி மோதி எதிரொலித்தது.

மலையிலிருந்து பாய்ந்து தற்கொலை செய்து விட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல இருந்தது அவளுக்கு. மலைச் சரிவைப் பார்த்தாள். அங்கே ஏதோ வெள்ளையாக........

ஆண்டவனே அவருக்கு ஒன்றும் நடந்து விடக் கூடாது! என்று மன்றாடியபடி மின்னல் வேகத்தில் மலைச் சரிவினால் இறங்கினாள்.

மலையடிவாரத்தில் நீரோடையின் ஓரத்திலே முகம் குப்புறக் கிடந்தான், பலங் கொண்ட மட்டும் தூக்கி மடியிலே கிடத்தினாள். மூக்கிலே முகத்தை வைத்துப் பார்த்தாள். உயிர்... பிரிந்து விடவில்லை. மூச்சு வந்தது. அவளுடைய கண்ணிலே வடிந்த கண்ணீரை தண்ணீராக எடுத்து அவனுடைய முகத்தைத் துடைத்தாள்.

அவன் கண் விழித்தான். கண்களினால் நீர் வடிந்தது.

"நித்தியா, இறைவனால் நேசிக்கப்படுபவர்கள் இளமையிலேயே அழைக்கப்படுவர். ஆண்டவர் என்னை நேசிக்கிறார் நித்தியா...."

"அப்படியொன்றும் சொல்லாதீங்க. நான் உங்களைச் சாக விடமாட்டேன்"

மக்களுக்காகப் பாவங்களைச் சுமந்த யேசுபிரான் சுமக்க முடியாத சுமையான சிலுவையைச் சுமந்தார். நான் எமக்காக...... எம் இனத்தின் விடுதலைக்காக..... துன்பச் சுமைகளைச் சுமக்கும் இவரை ஏன் சுமக்க முடியாது!

குழந்தை மாதிரித் தோளிலே போட்டுச் சுமந்து கொண்டு காடுகளையும் மலைகளையும் தாண்டி வேகமாக... வேகமாக..... நடந்தாள்.

அவனது பாதங்களைத் தொடரும் சுவடுகளாக சிவந்த இரத்தத் துளிகள்........ தியாகத் துளிகள்....... ஊருக்கு உழைத்த உத்தமனுக்கு கிடைத்த நன்றித் துளிகள்....... சொட்டுச் சொட்டாக விழுந்து கொண்டே போனது.

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியரைப் பற்றி....

நண்பரும் எழுத்தாளரும் இளைஞர் சேவை அதிகாரியுமான ஓ. கே. குணநாதனை வவுனியா பிரதேச கலாசார விழா மலர் "கலை மருதம்" மூலம் நான் அறிவேன். வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழாமலர் "மருதநிலா" மூலம் நாடறியும்.

இந்தியாவில் தேவியின் கண்மணி சஞ்சிகை நடாத்திய நாவல் போட்டியில் "ஒரு துளி" என்ற நாவல் பரிசு பெற்றதன் வாயிலாக இந்தியத் தமிழகம் அறியும்.

கனடா தமிழர் செந்தாமரை உலகளாவிய ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் "ஒரு பிடிச் சோறு" என்னும் சிறுகதை முதற் பரிசு பெற்றதனால் முழு உலகமும் அறியும். இந்த இளம் வயதில் விடிவைத் தேடி, ஊமை நெஞ்சின் சொந்தம், நகைச்சுவைக் கதைகள், வீர ஆனந்தன், சுதந்திரம், மாமக் கிழவி, வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும், நகை மீட்ட செம்மல் ஆகிய 8 நூல்களை வெளியிட்டது அரிய சாதனை. அதிலும் சிறுவர் இலக்கிய நூல்களான "சுதந்திரம்" வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசினையும், "மாயக் கிழவி"யாழ் இலக்கிய வட்ட சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்றுக் கொண்டது எமக்கும் பெருமை. இவருடைய இலக்கியப்பணி வளர..... இன்னும் பல நூல்கள் வெளிவர..... பரிசில்கள் பல பெற.... வாழ்த்துக்கள்.

க. கருணானந்தன்
உரிமையாளர்,
சார்ப் கிறபிக்ஸ் பிறைவேட் லிமிட்டெட்
டீ ஜீ- 2,சென்றல் றோட்
கொழும்பு- 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org